பெப்ரவரி 01 - 07,2004 24 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சுடர் ஒளி

THE SUDAR OLI சுடர் ஒளி வார மலர்



## கிழக்கில் தமிழ் உணர்வு பொங்கிப் பிரவாகம்
## தெற்கில் புதிய கூட்டணி சண்டப் பிரசண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் கூட்டணி அமைப்பதில் காங்கிரஸ் தீவிரம்

## தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வை வளைத்துப் பிடிக்க முயலும் பி.ஜே.பி.

சுதந்திர இந்தியாவின் 57 ஆண்டுகால வரலாற்றில் 40 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த காங்கிரஸ்கட்சி கடந்த 8 ஆண்டுகளாக மத்தியில் ஆட்சி அதிகாரத்துக்கு வர முடியாமல் துவண்டுபோய்க்கிடக்கிறது. 6 ஆண்டுகள் ஆட்சியில் இருந்ததன் மூலம் சுதந்திர இந்தியாவில் நேரு, இந்திராவிற்கு அடுத்து கூடிய காலம் ஆண்ட பிரதமர் என்ற பெருமையை வாஜ்பாய் பெற்றவராகிறார்.

அவரது கட்சி, வடமாநில சட்டசபைத்தேர்தல்களில் பெற்ற வெற்றியையும் வாஜ்பாயின் பிரபல்யத்தையும் காட்டி மற்றொரு 5 ஆண்டுகளுக்கு ஆட்சிக்காலத்தைப்பெறலாம் என எதிர்பார்த்து முன்கூட்டியே லோக்சபா தேர்தல்களை நடத்த முடிவு எடுத்துள்ளது.

திடீர் தேர்தல் நடக்கலாம் எனத் தெரிந்



சோனியா

ததை அடுத்து எதிர்க்கட்சிகள் உஷாரடைந்துள்ளன. கூட்டணி ஆட்சி கிடையாது என்று கடந்த தேர்தல் வரை கூறிவந்த காங்கிரஸ் கட்சி எதிர் வரும் தேர்தலை முன்னிட்டு பழைய பகைமைகள், கொள்கைகள் சகலவற்றையும் மறந்துவிட்டு கூட்டாளிகளைத் தேடத்தொடங்கியுள்ளது. இதன் முதல் அங்கம் தான் தமிழகத்தில் தோன்றியுள்ள ''மகா கூட்டணி''.

### தமிழகத்தில் மகா கூட்டணி

முன்னொருபோதும் இல்லாதளவு தமிழகத்தில் ஆளும் அ.தி.மு.க. மற்றும் பி.ஜே.பி. நீங்களாக சகல கட்சிகளும் ஓரணியில் திரண்டுள்ளன. தி.மு.க., ம.தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., இந்திய தேசிய லீக், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக், இந்திய கம்யூனிஸ்ட், மாக்ஸிய கம்யூனிஸ்ட் என முகவரி அறிந்த சகல கட்சிகளும் இந்த அணியில் சேர்ந்துள்ளன. இந்தக் கூட்டணிக்கு ஜனநாயக முற்போக்கு கூட்டணி என கருணாநிதி பெயரிட்டுள்ளார்.

லோக்சபாவில் தி.மு.க.–4, பா.ம.க–5, காங்கிரஸ்–3, கம்யூனிஸ்ட்–1 என இந்த கூட்டணிக்கட்சிகள் உறுப்பினர்களைக் கொண்டுள்ளன. இந்த நிலையில் மொத்தமுள்ள 40 தொகுதிகளையும் எப்படி இத்தனை பங்காளிக்கட்சிகளிடையே பங்கிடுவது என்பதில் நிச்சயம் சிக்கல்கள் தோன்றப்போகின்றன. காங்கிரஸ் குறைந்தது 15முதல் 20 வரையான ஆசனங்களையாவது கோராமல் விடாது. கருணாநிதிக்கு இது பொரும் தலையிடியாகவே இருக்கப்போகிறது.

முதல்வர் ஜெயலலிதா தனித்துப் போட்டியிட்டு இயன்றளவு தொகுதிகளை வென்று தேர்தலுக்குப் பின்பு காங்கிரஸ் அல்லது பி.ஜே.பி. கட்சிக்கு போதியதொகுதிகள் கிடையாதபோது அமையும் அரசுடன் பேரம் பேசவும் முடிந்தால் மத்தியில் துணைபிரதமர் பதவியைக்கேட்கவும் திட்டமிடுகிறார் எனக்கூறப்படுகிறது.

### 'ஜெ'யுடன் கூட்டணி பி.ஜே.பி. முயற்சி

ஆனால், பி.ஜே.பியோ எப்படியாவது ஜெயலலிதாவை வளைத்துப்போட முயன்று வருகிறது. இப்போது லோக்சபாவில் தமிழகத்திலிருந்து பி.ஜே.பி.க்கு 4எம்பிக்கள் உள்ளனர். நீலகிரி, கோயம்புத்தூர், நாகர்கோயில், புதுக்கோட்டை என்பனவே அவை. இவற்றுடன் திருச்சியையும்சேர்த்து 5தொகுதிகளை மட்டும் தந்தால் கூடப் போதும் என ஜெயலலிதாவுக்கு தூதுவிடப்பட்டுள்ளதாம். இவ்வளவு குறைந்தளவு தொகுதிகளுடன் பி.ஜே.பி. திருப்தி அடைவதால் ஜெயலலிதா தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் கூட்டணிக்கு இணங்கக்கூடும் என்றும் சொல்லப்படுகிறது.

இது இப்படியிருக்க காங்கிரஸ் கூட்டணியில் நாடாளாவிய ரீதியில் பல கட்சிகளும் சேர்த்து வருவது பி.ஜே.பியை கிலி கொள்ளச் செய்திருக்கிறது. 1999 தேர்தல் நேரத்தில் சோனியா வெளிநாட்டவர் எனக்கூறி காங்கிரஸில் இருந்து பிரிந்து தேசியவாத காங்கிரஸ்கட்சி தொடங்கிய சரத்பவார் பின்னர் மகாராஷ்டிராவில் மட்டும் காங்கிரஸுடன் கூட்டணிவைத்து ஆட்சியைப்பிடித்துக்கொண்டவர். இப்போது தேசிய அளவிலும் கூட்டணி வைக்க அவர் சோனியாவுடன் பேச்சு நடத்தி முடித்துவிட்டார். இதனால் அவரது கட்சியிலிருந்து முன்னாள் சபாநாயகர் சிங்யாதப் வெளியேறி பி.ஜே.பியுடன் கூட்டணி சேர்ந்துவிட்டார். சரத்பவாரை வளைக்கவும் பி.ஜே. பி. இயன்றளவு முயன்றது; முடியவில்லை.

### மாயவாதியுடன் காங்கிரஸ் சேரும்

உத்தரப்பிரதேசத்திலும் முன்னாள் முதல்வர் மாயாவதி காங்கிரஸுடன் சேருவார் என்று பலமான ஊகங்கள் அடிபடுகின்றன. 5 மாதங்களுக்கு முன்புவரை அங்கு பி.ஜே.பி — மாயாவதி கூட்டணி மாநிலத்தை ஆண்டது. மாயாவதியை பி.ஜே.பி தூக்கி எறிந்ததால் அரசு கவிழ்ந்து மாயாவதியினதும், பி.ஜே.பி. இரண்டினதும் எதிரியான முலரயம் சிங்யாதவ் அரசு அமைத்துள்ளார். இந்த நிலையில் மாயாவதியுடன் கூட்டு வைக்க பி.ஜே.பி. முயன்று தோல்விகண்டுள்ளது.

மாயாவதியின் பகுஜன் சமாஜ்கட்சி பலத்த தலித் ஆதரவுக் கட்சி ஆகும். மேலும், 1992 இல் பாபர்மசூதி இடிப்பின் போது

**பக்கத்து வீடு**


பி.ஜே.பியின் சார்பில் முதல்வராக இருந்த கல்யாண்சிங் பின்னர் வாஜ்பாயுடன் முரண்பட்டு தனிக் கட்சி தொடங்கினார். அவரது கட்சியான ராஷ்டிய கராந்தி கட்சியும் காங்கிரஸுடன் இணைய முன்வந்துள்ளது. ஜம்மு — காஷ்மீரில் முதல்வர் முப்திமுஹமத் சயீதின் மக்கள் ஜனநாயகக் கட்சியும் காங்கிரஸுடன் கூட்டணிக்கு இணங்கியுள்ளதாகத் தெரிகிறது.

ஆந்திரா, ஒரிஸ்ஸா, பீகார் ஆகிய மாநிலங்களில் முறையே தெலுங்குதேசம், பிஜூ ஜனதாதள், சமதா ஆகிய கட்சிகள் காங்கிரஸின் பரமஎதிரிகள். இதனால் அக் கட்சிகள் பி.ஜே.பியுடன் தொடர்ந்து உறவு பூண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், ஹரியானாவில் கூட்டணியான இந்திய தேசியலோக்தள் பி.ஜே.பியுடன் உறவு முறியும் நிலையிலுள்ளது. ராஜஸ்தான், குஜராத், டெல்லி, மத்தியபிரதேஷ், சத்தீஷ்கர், ஹிமாசலம் என்பவற்றில் காங்கிரஸுக்கும், பி.ஜே.பிக்கும் இடையே நேரடிப் போட்டி என்பதால் கூட்டணிக் கட்சிகள் அவசியமில்லை. ஆனால், இம் மாநிலங்களில் மாயாவதி கட்சிக்கு ஆங்காங்கு ஆதரவு இருப்பதால் காங்கிரஸ் மாயாவதி கூட்டணி பி.ஜே.பியை ஓரளவு பாதிக்கும்.

காங்கிரஸுக்கு பீகாரில் லல்லுவும் புதிய கூட்டணியாக பி.ஜே.பி. கூட்டணியிலிருந்து பிரிந்து வந்த ராம்விலாஸ் பரஸ்வானும் உள்ளமை பலத்தை கொடுக்கலாம். இவ்வாறு காங்கிரஸுக்கு கூட்டாளிகள் கிடைப்பதை பி.ஜே.பி எதிர்பார்க்கவில்லை. இதனால், முன்போட்ட தேர்தலை பின்போடவும் பி.ஜே. பி. நினைப்பதாக சில தகவல்கள் கூறுகின்றன. எனினும் 3 சட்டசபைத் தேர்தல்களில் அண்மையில் பெற்ற வெற்றி, வாஜ்பாய் ஆட்சியில் பொருளாதார விருத்தி, பாகிஸ்தானுடன் சமாதானம் என்பவற்றை காட்டி வெல்லவும் வாய்ப்புண்டு.

1999 தேர்தலில் இதே முஷாரப்பை இராணுவ தளபதியாகக் கொண்ட பாகிஸ்தானு



வாஜ்பாய்

டன் கார்கிலில் யுத்தம் செய்து வென்றதைக் காட்டியே பி.ஜே.பி. பிரசாரம் நடத்தியது இங்கு விந்தைக்குரியதாகும். அதுமட்டுமன்றி வாஜ்பாயின் வானளாவிய தனிநபர் புகழ் நிச்சயமாக பி.ஜே.பிக்கு ஒரு சாதகமான விடயம் தான்.

அந்நிய நாட்டவர் என்ற முத்திரையால் புகழில் வாஜ்பாய்க்கு சோனியா நிகரில்லை என்பது நிச்சயமான உண்மையே. இதனால் காங்கிரஸ் கூட்டணியில் பிரதம வேட்பாளர் யார் என கூட்டணிகட்சிகளிடையே கூட குழப்பம் நிலவுகிறது. உங்கள் பிரதம வேட்பாளர் யார் என பி.ஜே.பி. எள்ளி நகையாடியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

*எஸ்.சுரேந்திரஜித்*

---

# வாசகர் இதயம் பேசுகிறது

*வ.சி.செல்வக்குமார், கிளிநொச்சி.*

03 – 09– 2003 தொடக்கம் 05 – 01– 2004 வரை வெளிவந்த எம்.ஜி.ஆர் – பிரபா நட்பு தொடர்கட்டுரை எமது கழகத்துக்கும், உலகத்தமிழ் மக்களும் ஒரு வரப்பிரசாதம். இதனைச்தொகுத்து வெளியிட்ட அன்புக்குரிய நவின் அவர்களுக்கு தமிழீழ எம்.ஜி. ஆர் மன்றத்தின் சார்பில் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*த.சி.சயந்தன், வட்டுக்கோட்டை.*

உதயன்–சுடர் ஒளிகுடும்பத்திற்கு எமது தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள். சுடர் ஒளியே உன் வரவால் உள்ளம் பூரிக்கும் வாசகப்பெருமக்களுள் நானும் ஒருவன். பிரதி திங்கள்தோறும் உனக்காகத் தவமிருப்பேன். பத்திரிகை வந்ததும் முதலில் பார்ப்பது சொற்சிலம்பம். வாசகர் கடிதம் பின்னர் இளஞ்சுடர் அதன் பின்பே ஏனையவை.

இவற்றில் என் பெயர் வந்தால் ஆனந்தமடைவேன். வராவிட்டால் அடுத்த முறை வரும்தானே என ஆறுதல் அடைவேன். சுடர் ஒளியே உன்னுள் அடக்கும் அத்தனைவிடயங்களும் ஏதோ ஒரு விதத்தில் பயன்மிக்கவை, தரமானவை. எட்டுத்திக்கும் உன் புனிதமான பணி தொடர என் வாழ்த்துக்கள்.

*கே.எம்.ஒளிநிலவன், மல்லாவி.*

உனக்கு எமது பாராட்டுக்கள். நீ பிரசுரித்து வந்த எம்.ஜி.ஆர் – பிரபா நட்பு தரமானது. இதை எழுதி வரும் நவின் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். மற்றும் கவிதைப் புனல், பித்தன் பதில், அரசியல் கட்டுரைகள் அனைத்தும் தரமாக உள்ளன.

*எஸ்.நடேசு ,மூதூர்.*

சேர்! உங்கள் பத்திரிகையில் இடம் பெறுகின்ற அனைத்து விடயங்களையும் நான் வாசிப்பது வழக்கம். அந்த வகையில் உங்களுக்கு நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். உங்கள் பத்திரிகைகளை வாங்கப் பணம் இல்லாவிட்டாலும் நூல்நிலையத்தில் போய் வாசித்து வருவேன். இதனை நினைத்த பொழுது பெரும் ஆனந்தமாகவுள்ளது. உங்களுக்கும் உங்கள் வாடிக்கையாளர்களுக்கும் எனது நன்றிகள்.

*பா.லினோசன், வவுனியா.*

சுடர்விட்டெரியும் சுடர் ஒளியே! உனக்கு எனது பல கோடி வந்தனங்கள். திங்கள் தோறும் வரவை எதிர்பார்க்கும் வாசகரில்நானும் ஒருத்தன். பித்தன் பதில்கள், சிறுகதை என்பனவற்றை தவறாமல் வாசிப்பேன். உன் சேவை தொடர வாழ்த்துக்கள்.




வாழ்க பல்லாண்டு வளர்க சுடர்ஒளி.

*பி.கஜந்தா, நெடுங்கேணி.*

உலகெல்லாம் புகழ் பரப்பும் சுடர் ஒளியே! ஒளிர்க சுடர் ஒளியே! வன்னி எங்கும் வீர நடைபோடும் சுடர் ஒளியே மனதை மயக்கும் ஆக்கங்கள் மூலம் மெய்சிலிர்க்க வைக்கும் ஒளியே! உன் ஒளி எட்டுத்திக்கும் பரவி புகழ் சேர எனது இனிய புதுவருட வாழ்த்துக்கள்.

*எட்மண்பீரீஸ் தமிழினியன்.*

உனது வரவு கண்டு மகிழும் வாசகர்களில் நானும் ஒருவன் . நீ தாங்கி வரும் அனைத்து ஆக்கங்களும், உனக்கு நிகர் நீயே என்பதை எடுத்துரைக்கின்றன. அதிலும் எம்.ஜி.ஆர்– பிரபா நட்பு, அரசியல் நட்பு, தேரடி அரட்டை, கவிதைப்புனல் போன்றவை என் மனதைக் கவர்ந்தவை. உனது பணி தொடர வாசகனாகிய எனது நல் ஆசிகள்.

*பா.பிரமிலா, உடுப்பிட்டி.*

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். கவிதைப் புனல், பித்தன் பதில், இளஞ் சுடர், சினிமா, சிறுகதை, மசாலாமிக்ஸ் அனைத்தும் என்னை கவர்ந்தவை. உன் பணி மென்மேலும் தொடர என் உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

மேலும் எனது ஆக்கங்கள் உனது பத்திரிகையில் வரவேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு. எத்தனையோ தடவை பல ஆக்கங்கள் எழுதியும் அவை உனது பத்திரிகையில் வெளிவரவில்லை காரணம் புரியவில்லை. இந்த முறையாவது எனது ஆசையை நிறைவேற்றுவாய் என்ற நப்பாசையில் எனது ஆக்கத்தை எழுதி அனுப்புகிறேன்.

*சி.வசந்தி, புத்தூர் கிழக்கு.*

எனது அபிமான சுடர் ஒளிக்கு வணக்கம். புதுவருடவாழ்த்துக்கள். நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் அருமை. குறிப்பாக எம்.ஜி.ஆர்–பிரபா நட்பு தொடர் கட்டுரையில் வெளிவராத– அறிந்திராத –பல விடயங்கள் வெளிவந்தன. அதனை எழுதிய ஆசிரியருக்கு நன்றி. மற்றும் பக்கத்து வீடு பிரமாதம். சினிமாப்படங்கள் சிறிது ஓவர். கலையமுதம், பித்தன் பதில்கள் இவை அனைத்தையும் எழுதும் ஆசிரியர் குழுவுக்கு மனமார்ந்த நன்றிகள்.


அவுஸ்திரேலியாவில் சுடர் ஒளி பெற்றுக்கொள்ள
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165

சுவிஸில் உங்கள் அபிமான சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# வவுனியாவில் அதிகரிக்கும் திருட்டுக்களும் விழிப்புக் குழுக்களின் இயலாத்தனமும்

வவுனியாவை பெரும்பரபரப்பில் ஆழ்த்தி வரும் சம்பவங்களில் திருட்டும் ஒன்று. இதனை யார் செய்கின்றனர்? ஏன் செய்கின்றனர்? என்பது எவருக்கும் தெரியாது. ஆனால் திருடர்கள் நன்கு திட்டமிட்டு இதனைச் செயற்படுத்துகின்றனர் என்பது மட்டும் உண்மை.

போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் தான் இச் சம்பவங்கள் தலைவிரித்தாடுகின்றன என்பது வேதனைக்குரிய விடயம். இதுவரைஎவரும்கைது செய்யப்படவில்லை.

தமிழர்களின் வீடுகளே முக்கிய இலக்காக இருந்து வருகின்றன. புதிய புதிய யுக்திகளை திருடர்கள் கையாளுகின்றனர்.

சில இடங்களில் ஒருவித ஸ்பிரேயர் விசிறப்பட்டு திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. சில சந்தர்ப்பங்களில் ஒரு வித தூளை தூவி விட்டு தமது கைவரிசையை கச்சிதமாக நிறைவேற்றுகின்றனர் திருடர்கள்.

இன்னும் சிலர் பகல் வேளைகளில் சாமியார் வேடம் பூண்டு வருகின்றனர். ஆண்மக்கள் இல்லாத சமயம் பார்த்து சாத்திரம் கூறுவதாகவும் கோவிலுக்கு பணம்சேகரிப்பதாகவும் கூறி பெண்கள் அணிந்துள்ள தங்க நகைகளை அபகரித்துச் செல்கின்றனர். சிலர் ஆயுதத்தைக் காட்டி பயமுறுத்திவிட்டு நகைகளை பறித்துச் செல்கின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் வவுனியாவில் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட வீடுகளில் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன என்று வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. திருட்டு நடைபெற்றவீட்டுக்காரர்கள் முறைப்பாடு செய்யாத சம்பவங்களும் இருந்து வருகின்றன.

வவுனியா சமயபுரம்பகுதியில்வவுனியா நீதிமன்றில் பணி புரியும் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டை ஆயுத முனையில் கொள்ளையிடும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. கொள்ளையரைவீட்டில் இருந்த இளைஞர் ஒருவர் மடக்கிப்பிடித்து அவரின் துப்பாக்கியைப் பறித்து பொலிசாரிடம் ஒப்படைத்தார். இந்தத் துப்பாக்கி வேப்பங்குளம் பொலிஸ் சோதனைச் சாவடியில் இருந்து காணாமல் போனது என்பது விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. துப்பாக்கியை மீட்டுக் கொடுத்த இளைஞனுக்கு நீதிவான் மாணிக்கவாசகம் இளஞ்செழியனின் பணிப்புக்கு அமைய பொலிஸாரால் ரொக்கப்பணம் கொடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மட்டும் மேற்கொண்டு வருகின்றனரே தவிர வேறு ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா என்பது தெரியவில்லை. திருட்டுக்களும் அதிகரித்தே வருகின்றன. இது சம்பந்தமாக புலிகளின் அரசியல் துறையிடம் கேட்டபோது. அரசியல் நடவடிக்கைகளையே கவனிக்குமாறு தமக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

திருட்டுக்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வவுனியா நீதிவான் மாணிக்கவாசகம் இளஞ்செழியன் தலைமையில் கடந்த மாதம் இறுதியில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இதன்போது கிராம மட்டத்தில் விழிப்புக் குழுக்களை அமைக்க இணக்கம் காணப்பட்டது.

பல கிராமங்களில் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டன. இரவு 9 மணிக்குப் பின்னர் வீதிகளில் திரியும் சந்தேகத்துக்கு உரியவர்களை விசாரணை செய்து அவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இந்த விழிப்புக்குழுக்களின் பெயரைப் பயன்படுத்தி சில நபர்கள் சுயலாபம் பெற முனைவதாக வவுனியா நீதிமன்றில் முறைப்பாடு ஒன்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகவவுனியாமாவட்ட நீதிவான் உடன் நடவடிக்கையினை எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

விழிப்புக்குழுக்களும் சரியாகச் செயற்படுவதில்லை என்றும் முறையிடப்பட்டுள்ளது. சிலர் விழிப்புக்குழுவோடு இணைந்து செயற்படுவதில்லை என்று கூறப்படுகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் பெறுமதியான பொருட்களை வீடுகளில் வைத்துள்ளவர்கள் விழிப்புக்குழுவுக்கு போவதில்லையாம். சாதாரணமான நிலையில் உள்ளவர்கள் தான்செல்கின்றனர். அவர்கள் தான் ஊரை பாதுகாக்கின்றனர். விழிப்புக்குழுவுக்கு போகாதவர்கள் கூறும் காரணம் தாங்கள் மறு நாள் வேலைக்குப் போக வேண்டும் என்பதே.

இப்படியானவர்கள் தமது சார்பில் ஒருவரை அமர்த்துகின்றனர். அவர்களுக்கு சம்பளமும் கொடுக்கின்றனர். இது கிராம சேவையாளர்களின் அனுமதியுடன் நடைபெறுகிறது.

விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டதன் நோக்கமே கிராமங்களைப் பாதுகாப்பது தான். ஆனால் விழிப்புக்குழு என்ற பெயருக்கே சிலர் மாசு கற்பிக்கின்றார்கள் என்றும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

சில கிராமங்களில் விழிப்புக் குழுக்கள் தேவை அற்ற விதத்தில் ஆட்களை மறித்து வைத்து பிரச்சினை கொடுப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

விழிப்புக்குழுக்கள் தமது இலக்கை அடைய வேண்டுமானால் பொது மக்களின் நம்பிக்கையையும்பெறுவது அவசியம்ஆகும்.

*மகா முனி.*




பேருவளையில் பரம்பரை மாந்திரீகம்

அரபி, உருது, மலையாள மாந்திரீகம் (இன்ஷா அல்லாஹ்) இறைவன் அருளால்

**சகல இனத்தவர்களுக்கும் செய்து கொடுக்கப்படும்**

*செய்வினை *ஸிஹ்று *ஜின் *செய்தான் *பேய் *பிசாசு போன்ற சகல பிரச்சினைகளிலிருந்தும் ஆங்கில வைத்தியத்தால் குணம் கிடைக்காத தீராத நோய்களுக்கும் தீர்வு கிடைக்கும்.

*செய்வினை அகற்றி *வீடு *தோட்டம் *வியாபார ஸ்தலம் * பகைவர்களின் தீங்கில் இருந்தும் காவல்பாடு *ஆண், பெண் திருமணத் தடை நீங்கி உடன் திருமணம் நிறைவேறுதல்

*கணவன் மனைவி விவகாரம் *புத்திர பாக்கியமின்மை *குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படுத்தல் *பிரிந்தவர்கள் கூடவும் *விரும்புவர்களின் அன்பை பெறவும்

**உங்கள் பிரச்சினை எதுவானாலும் நேரில் சந்திக்கவும்**

(வெளிநாட்டில் இருப்பவர்கள் தொலைபேசி மூலம் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்)

**வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 7.30 மணி முதல் சந்திக்கலாம். (இரகசியம் பேணப்படும்)**

**A.H.A. நவ்பர் ஹாஜியார்,**

69 பழைய ரோட், மொள்ளியமலை, பேருவளை.
(யூனானி வைத்தியசாலைக்கு அருகில்)
தொ.பே: 034–76932

வீடு இருக்குமிடத்தை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்

அலுவலகம் :– ஷாமிலா ஜூவலர்ஸ், 15 சுப்பர் மார்க்கட், காலி வீதி, பேருவளை. தொ.பே. 034 – 77586

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை எது என்பதை புரிந்து கொள்வீர்கள்



## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம்(PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

**எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.**

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**
ஜனவரி 25 -31 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building -
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
**Hot Line: 0777 569205**

**கல்முனையில்..**
பெப்ரவரி 07, 08, ஆம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**
பெப்ரவரி 14, 15, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**
ஜனவரி 17 - 22வரை
A.S.N. சுற்றுலாவிடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



# Mendis

## Prices Slashed

| Product | Size | Old Price | New Price |
|---|---|---|---|
| MENDIS SPECIAL | 750 ml | 320.00 | 310.00 |
| MENDIS SPECIAL | 375 ml | 173.00 | 168.00 |
| MENDIS SPECIAL | 180 ml | 101.00 | 98.00 |
| MENDIS SPECIAL (EXPORT) | 700 ml | 400.00 | 400.00 |
| 12 YEARS OLD ARRACK | 750 ml | 1,125.00 | 995.00 |
| 10 YEARS OLD ARRACK | 750 ml | 850.00 | 825.00 |
| 05 YEARS OLD ARRACK | 750 ml | | 495.00 |
| 03 YEARS OLD ARRACK | 750 ml | 400.00 | 387.00 |
| 03 YEARS OLD ARRACK | 375 ml | 210.00 | 203.00 |
| 03 YEARS OLD ARRACK | 180 ml | 115.00 | 112.00 |
| 02 YEARS OLD ARRACK | 750 ml | 345.00 | 320.00 |
| MENDIS CLASSIC ARRACK | 750 ml | 270.00 | 260.00 |
| MENDIS CLASSIC ARRACK | 375 ml | 92.00 | 90.00 |
| MENDIS CLASSIC GOLD | 750 ml | 270.00 | 260.00 |
| MENDIS GOLD LABEL | 750 ml | 278.00 | 268.00 |
| MENDIS GOLD LABEL | 375 ml | 154.00 | 149.00 |
| MENDIS GOLD LABEL | 180 ml | 92.00 | 89.00 |
| MENDIS RED LABEL | 750 ml | 239.00 | 239.00 |
| MENDIS EXTRA SPECIAL | 750 ml | 263.00 | 250.00 |
| MENDIS EXTRA SPECIAL | 375 ml | 147.00 | 142.00 |
| MENDIS EXTRA SPECIAL | 180 ml | 83.00 | 80.00 |
| MENDIS ARRAK | 750 ml | 235.00 | 227.00 |
| MENDIS ARRAK | 375 ml | 135.00 | 130.00 |
| MENDIS ARRAK | 180 ml | 75.00 | 72.00 |
| MENDIS FIVE STAR BRANDY | 700 ml | 525.00 | 495.00 |
| MENDIS DRY GIN | 750 ml | 490.00 | 450.00 |
| ROSAWEEN COFFEE LIQUEUR | 375 ml | 210.00 | 205.00 |
| RUSALKA VODKA | 750 ml | 490.00 | 490.00 |
| MENDIS SUNDOWN RUM | 750 ml | 460.00 | 460.00 |

Available at Licenced SATHOSA Outlets, Supermarkets & Reputed Liquor Shops.

IMPETUS

Valid for a limited period.

**W. M. Mendis & Co., Ltd.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

பெப்ரவரி 01 –07, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


## விலகிச் செல்லும் சமாதானம்

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்றஇலங்கைக்கு உதவும் நாடுகளின் மீளாய்வு மாநாட்டில் எதிர்பார்க்கப்பட்டது போன்று தமிழீழ விடுதலைப் புலிகள் கலந்து கொள்ள வில்லை.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் முழு அளவிலான மாநாட்டையும் புலிகள் பகிஷ்கரித்திருந்தனர். தற்பொழுது கொழும்பில் நடைபெற்றது இரண்டாவது மீளாய்வு மாநாடு. சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற முதலாவது மீளாய்வுக் மாநாட்டுக்கும் புலிகள் செல்லவில்லை.

வெள்ளியன்று நடைபெற்ற மீளாய்வு மாநாட்டில் புலிகளை கலந்து கொள்ள வைப்பதற்கு ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி கிளிநொச்சி சென்று கூட முயற்சித்தார். மீளாய்வு மாநாட்டில் புலிகளைக்கலந்து கொள்ள வைத்து விட்டால், பேச்சுக்களில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டை தளர வாய்ப்பு ஏற்படக் கூடும் என்று அவர் நம்பி இருக்கலாம். ஆனால் புலிகள் தமது முடிவில்உறுதியாக இருந்து வருகின்றனர். அகாஷியின் முயற்சி பலன் அளிக்கவில்லை.

ஜப்பானில் நடைபெற்ற மாநாட்டையும் கொழும்பில் நடைபெற்ற முதலாவது மீளாய்வு மாநாட்டையும் பகிஷ்கரித்த புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரண்டாவது மீளாய்வு மாநாட்டையும் பகிஷ்கரித்ததில் வியப்பில்லை.

புலிகளுக்கும்அரசுக்கும் இடையில் இது வரை நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுக்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் அமுல் செய்யப்படவில்லை. பிரதானமாக மீள் குடியேற்றம், புனரமைப்பு, புனர்வாழ்வுப்பணிகளை முன்னெடுக்க முடியாத நிலைமை இருந்து வருகிறது.

ஆகவே வடக்கு,கிழக்கில் அதிகாரம் உடைய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தேவை என்று கோரியே டோக்கியோ மாநாட்டையும்அதற்குப்பின்னர் நடைபெற்ற மீளாய்வு மாநாடுகளையும் புலிகள் பகிஷ்கரித்து வருகின்றனர். இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்கத் தான் போகிறது. நிலைமை மேலும் மோசம் அடையலாமே தவிர தளர்வதற்கு வாய்ப்பு இல்லை.

ஏனெனில் புலிகள்தயாரித்து வழங்கிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான திட்ட வரைவு தற்போது கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

புலிகளின் தீர்வு யோசனைகளை ஏற்கப்போவதில்லை என்றும் தாம் பதவிக்கு வந்தால்புதிதாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கப்போவதாகவும் ஜே.வி.பி. பொது செயலாளர் ரில்வின் சில்வா பத்திரிகையாளர்மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு உட்பட முக்கியமான மூன்றுஅமைச்சுக்களை ஜனாதிபதி எதேச்சாதிகாரமாக எடுத்துக்கொண்டதை அடுத்துபிரதமர் தலைமையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் முன்னெடுப்பதும் சாத்தியமற்றதாகிவிட்டது.

ஆகவே டோக்கியோ மாநாட்டின் போது வடக்கு, கிழக்கில் இருந்த நிலைமை கூட தற்போது இல்லை. நாளுக்கு நாள் நிலைமை மோசமடைந்து வருகிறது.

இந்த நிலையில் புலிகள் எப்படி கொழும்பு மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும்?

டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு வழங்கத்தீர்மானிக்கப்பட்ட நாலரைக்கோடி அமெரிக்க டொலரையாவது எப்படியாவது பெற்றுவிடுவதில் பிரதமர் தீவிர கவனம் செலுத்திவருகிறார். அந்தக் கவலை கூட ஜனாதிபதிக்கு இல்லை.

இந்த நிலையில்நாட்டில்நிரந்தர சமாதானம்ஏற்படும் என்று எவரும் எதிர்பார்க்க முடியுமா?

# ஜே.வி.பி – சுதந்திரக் கட்சி கூட்டு சமாதானத்துக்கு வைத்த வேட்டு!

தென்னிலங்கையில் ஜே.வி.பி.யும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்கனவே எதிர்பார்த்தபடி தமிழ் மக்கள் மத்தியில் ஏமாற்றத்தையும் நாட்டில் நிச்சயமற்ற அரசியல்நிலையையும் தோற்றுவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள், புலிகளினால் பெரும் பாடுபட்டுத் தயாரிக்கப்பட்டு அரசிடம் கையளிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான யோசனைகள், அதிகாரப் பகிர்வு அனைத்துமே ஒரு புறம் ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டன.

மீண்டும் யுத்தம் மூளும் அபாயம் குறித்து விடுதலைப்புலிகள் மட்டும் அல்லர், தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

2002 ஆண்டு பெப்ரவரிமாதம் 22 ஆம் திகதி யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது மூலம் படிப்படியாகக் கட்டி வளர்க்கப்பட்ட சமாதான முயற்சிகளுக்கு சாவுமணி அடித்தாகிவிட்டது.

## மீண்டும் யுத்தம் மூளும் அபாயம்

ஜே.வி.பி.யும் சுதந்திரக் கட்சியும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் சமாதான விரோத அரசியல் ஒப்பந்தம் என்பதில் சந்தேகம் இல்லை, மீண்டும் யுத்தம் தொடங்கக் கூடிய சூழ்நிலையை ஒப்பந்தம் உருவாக்கி இருப்பதாக புலிகளின் அரசியல் மதியுரைஞர் அன்டன்பாலசிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சி விழாவிலும் சமாதான முயற்சிகளுக்கு விடுக்கப்பட்டள்ள அச்சுறுத்தல் குறித்து அபாய ஒலி எழுப்பப்பட்டுள்ளது. மட்டு – அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், ''மீண்டும் யுத்தம் மூண்டால் அரசு பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும்'' என்று கூறி உள்ளார்.



யுத்தத்தை எதிர்நோக்குவதற்கு தமிழ் மக்கள் தயார் என்கிறார் அமைச்சர் பெ.சந்திரசேகரன்.

ஆகவே ஜே.வி.பி.யும் சுதந்திரக் கட்சியும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் தமிழ் தேசியப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காணப்படுவதற்கான திடமான, யதார்த்த பூர்வமான முறைமை ஒன்றைத் தரத் தவறிவிட்டது என்பதே உண்மை ஆகும். அதற்குப் பதிலாக சிங்கள – பௌத்தபேரினவாதிகள் இந்த ஒப்பந்தம் மூலம் மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரின் கீழ் மீண்டும் ஐக்கியப்பட்டு சமாதானத்துக்கு எதிராக ஒன்றுதிரண்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி 24 மணித்தியாலங்களுக்குள் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மேலும் ஏமாற்றத்தைத் தந்துள்ளன.

ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா பத்திரிகையாளர்மாநாட்டில் பேசுகையில் அரசை அமைத்து புதிதாகப் பேச்சை ஆரம்பிப்போம்'' என்று தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை புலிகள் இடைநிறுத்தி வைத்துள்ளனர். பேச்சுவார்த்தையை தொடர்ந்து முன்னெடுக்கத் தயார் இல்லை என்று கூறிபிரதமரும் கைவிரித்துவிட்டார். நோர்வே தரப்பும் விலகிச் சென்று விட்டது. ஆகவே புதிய அரசை அமைத்தால் நாம் புதிதாகப்பேச்சுக்களை ஆரம்பிப்போம் என்கிறார் ரில்வின் சில்வா.

ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே ஜே.வி.பி.– சுதந்திரக்கட்சி கூட்டணியின் கொள்கை. அதனை தன்மானம் உள்ள ஒரு தமிழனும் ஏற்கப்போவதில்லை. சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான சுயாட்சி என்ற தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு புதிய கூட்டமைப்பு வேட்டு வைத்துள்ளது.

ஜே.வி.பி. – சுதந்திரக்கட்சி ஒப்பந்தத்தில் மூன்று அம்சங்கள் விசேடமாகக் கவனிக்கத் தக்கவை.

1. கூட்டமைத்துள்ள இரு கட்சிகளுமே நாட்டின் தேசிய பிரச்சினையான இனப்பூசலுக்கு தீர்வு காணும் வழிமுறைகளில் தங்களுக்குள் உடன்பாடு இல்லை என்பதை பகிரங்கமாக ஒப்புக்கொள்வதில் உடன்பாடு கண்டுள்ளன.

2. இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல்கள் மூலம் தீர்வு காணலாம் என்கிறது சுதந்திரக் கட்சி. ஆனால் அதற்கு முரணாக கிராமம் வரை நிர்வாகத்தை பரவலாக்குவது மூலம் தீர்வு காணலாம் என்கிறது ஜே.வி.பி.

3. தீர்வு காண்பதற்கு பேச்சுநடத்தலாம். ஆனால் ஆரம்ப முயற்சியாகவே பேச்சு இருக்கும் என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் பேச்சு நடந்தால் அதற்கு அப்பால் வேறு விடயங்களும் பின்னர் அமையப் போவதை ஒப்பந்தம் கோடி காட்டுகிறது.

2001 டிசம்பர் பொதுத் தேர்தலில் பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி வெற்றியீட்டியவுடன் புலிகளுடன் நிபந்தனை அற்ற பேச்சு நடத்தவே முன் வந்தது.

பேச்சுவார்த்தைக்கு முன்னர் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்ற சரணாகதி நிபந்தனை நடைமுறையில் சாத்தியமற்றது என்பதை ரணில் தலைமையிலான அரசு நன்கு உணர்ந்திருந்தது.பேச்சுவார்த்தையில் அரசுடன்சமநிலைபேணும் அளவுக்கு புலிகளும் பலம் பெற்றிருக்கின்றனர்.

இந்த யதார்த்த நிலைமை அரச தரப்பில் அப்பொழுது உணரப்பட்டதால் தான் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இவ்வளவு காலத்துக்கு நடைமுறைப் படுத்த முடிந்தது.

இனியும்யுத்த நிறுத்தம் தொடருமா என்ற சந்தேகத்தை ஜே.வி.பி. – சுதந்திரக் கட்சி ஒப்பந்தம் ஏற்படுத்தி இருப்பது தான் வேதனை தரும் விடயம்.

சமாதானப்பேச்சுக்கள் புலிகளுடன் மட்டும் அல்ல.புலிகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைவருடனும் நடத்தப்பட வேண்டும் என ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.நிபந்தனையுடன் கூடிய பேச்சையே முன்னெடுக்க முடியும் என்றும் ஒப்பந்தம் கூறுகிறது.

### ஜே.வி.பியின் நோக்கம்

ஜே.வி.பி.யின் பிரதான நோக்கம் அரசைக் கலைத்து திடீர் தேர்தல் மூலம் நாடாளுமன்றத்தில் கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றுவது தான். அதனால் தான் ஒப்பந்தம் கைச்சாத்தானவுடனேயே திடீர் தேர்தல் குறித்த ஊகங்களும் பரவி இருந்தன. ஆனால் மாகாணசபைத் தேர்தல்களை முதலில் நடத்த முடிவு செய்யப்பட்டிருப்பதால் திடீர் தேர்தல் ஊகங்கள் அடிபட்டுப்போய்விட்டன.

பெப்ரவரி 9 ஆம் திகதி வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய 7 மாகாண சபைகளும் கலைக்கப்படும். ஏப்ரல்29 ஆம் திகதி ஒரே தினத்தில் தேர்தல்கள் நடத்தப்படும். பதவி காலம் முடிய முன்னர் மாகாண சபைகளைக் கலைத்துவிட்டு ஒரே நாளில் தேர்தல்நடத்துவதற்காக மாகாண சபைத் தேர்தல் சட்டம் திருத்தப்பட உள்ளது.

உடனடியாகப்பொதுத் தேர்தல் நடத்தினால் வடக்கு, கிழக்கில் புலிகளுக்கு ஆதரவான கட்சிகள் அமோக வெற்றி பெற்றுவிடும்என்று அரசு அஞ்சுகிறது. இந்தியாவும் இதே கருத்தையே கொண்டிருக்கிறது.பெரும்பான்மைமக்களைக் கொண்ட இந்த ஏழு மாகாணங்களிலும் தேர்தல்களை நடத்தி வெற்றி பெற முடியும் என்றும் இதன் மூலம் திரட்டப்படும் பொதுஜன அபிப்பிராயத்தின் உதவியுடன் பொதுத் தேர்தலில் வென்று விடலாம் என்றும் ஜே.வி.பி. – சுதந்திரக்கட்சிகூட்டமைப்பு கனவு காண்கிறது. தான் விரும்பினால் 2006 நவம்பர் மட்டும் ஜனாதிபதியாக இருக்க முடியும் என்று ஜனாதிபதி கூறிவருவது புதிய கூட்டமைப்புக்கு உற்சாகத்தை அளித்துவருகிறது.

ஜே.வி.பி.யும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து தற்பொழுது சந்தேகம் கிளப்பப்பட்டு வருகிறது. கடந்த 20 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கைச்சாத்திடப்பட்டது உண்மையான ஒப்பந்தம் அல்ல என்கிறார் பிரதமர். ஏற்கனவே இரு தரப்பினரும் இரகசியமாக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர் என்றும் அது மிகவும் ரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமர் கூறுகிறார்.

ஏனெனில் இந்த ஒப்பந்தத்தின் பெரும் பகுதிகள் வெறும் வார்த்தை ஜாலங்களினாலேயே தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு நடைபெற்ற பத்திரிகையாளர்மாநாட்டிலும், மற்றும் இடங்களிலும் ஜே.வி.பி.யினரின் கருத்துக்கள் முரணாக இருந்து வருகின்றன.

தற்போதைய நாடாளுமன்றத்தின் மொத்தம் 225 ஆசனங்களில்16 ஆசனங்கள் ஜே.வி.பி.க்கும் 77 ஆசனங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் 114 ஆசனங்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் (ஐ.தே.க–109,மு.கா–5) 2 ஆசனங்கள் ஈ.பி.டி.பிக்கும், 15 ஆசனங்கள் தமிழ் கூட்டமைப்புக்கும் ஒரு ஆசனம் புளொட்டுக்கும் இருந்து வருகின்றன.

1971 ஆம் ஆண்டும் 1989 ஆம் ஆண்டும் கிளர்ச்சி மூலம் அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் தோல்வி கண்ட ஜே.வி.பி., தற்பொழுது இனவாதம் என்னும் ஆயுதம் மூலம் ஆட்சியைப் பிடிக்க எத்தனிக்கிறது.

சஞ்சாரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு - அம்பாறை பொங்கு தமிழ் நிகழ்வு



புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஷ் உரை நிகழ்த்துகிறார்.



பொங்கு தமிழ் நிகழ்வில் மாணவர்களின் நடனம்



மகளிர் அணித் தளபதி நிலாவினி உரை நிகழ்த்துகிறார்.



கொழும்பு மாவட்ட எம்.பி. மனோ கணேசன் உரை நிகழ்த்துகிறார்.



பதாகைகளுடன் மக்கள் கூட்டத்தினர்.



மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் உரைநிகழ்த்துகிறார்.



நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள், பொங்குதமிழ் பிரகடனத்தில் சத்தியப்பிரமாணம் எடுக்கும் காட்சி




மட்டக்களப்பு ரயில் ஒன்றின் முன் பொங்கு தமிழ் பதாகை கட்டப்பட்டுள்ள காட்சி.



பிரதமரின் மேலதிகச் செயலாளர் சமன் அதாவுத ஹெட்டி, புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஷுடன் உரையாடும் காட்சி.

# 8 ஆவது சாதனை





பரந்து விரிந்த இந்த உலகில் இறைவனின் படைப்புகளை தனக்குச்சாதகமாக மாற்றிக் கொள்வதில் நவநாகரீக மனிதன் அதிக ஆர்வம் காட்டி வருகிறான்.

விண்வெளியில் மாளிகை கட்டி குடியேற ஆசைப்படும் மனிதன், உலகின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ள கடல் பகுதியையும் தன் வசப்படுத்த முயற்சி செய்துவருகிறான்.

அந்த முயற்சியின் வெளிப்பாடுதான் '' ஈச்ச மரத் தீவு.'' உலகின் எட்டாவது அதிசயமாக 'ஈச்ச மரத்தீவு விளங்கப் போகிறது.

கடல்நீராலும்பாலைவன மணல்பகுதியாலும் சூழப்பட்டது வளை குடா நாடுகளில் ஒன்றான டுபாய்.பெட்ரோலிய வளத்தின் காரணமாக முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்த டுபாய் இன்று பல்வேறு துறைகளில் வளர்ச்சி அடைந்து, குறிப்பாக சர்வதேச வர்த்தகத்தில் முன்னிலை வகிக்கின்றது.

பல அறிவியல் முன்னேற்றங்களை கண்டுள்ள டுபாய் நாட்டில் ஈச்ச மரம் வடிவில் கடல் பகுதியில் இந்த தீவு உருவாகி வருகிறது.

டுபாய், ஜூமைரா என்ற இடத்தில் உருவாகி வரும் இந்த ஈச்சமரத்தீவு அறிவியல் மற்றும் கட்டடக் கலையின் உன்னத அதிசயம் என்றால் அது மிகையாகாது.

பல ஆயிரம் கோடி ரூபா செலவில் உருவாகி வரும் இந்தத்திட்டம் நிறைவு பெறும்போது ''உலகின் எட்டாவது அதிசயம்'' ஆக இது விளங்கும் என்று கட்டடக் கலைநிபுணர்கள் கருதுகின்றனர்.

கடற்கரையில் ஒரு ஈச்சமரம் நிற்கும்போது அதன் நிழல் தரையில் விழுந்தால் எப்படி இருக்கும் என்ற கற்பனையின் வெளிப்பாடுதான் கடலில் ஈச்சமரத் தீவு அமைக்கும் திட்டமாகும்.

(இந்த அமைப்புப் படத்தைப் பார்க்கவும்) கட்டி முடிக்கப்பட்ட பிறகு ஒவ்வொரு தீவும் 6 கிலோ மீற்றர் சுற்றளவு கொண்டதாக இருக்கும்.

இந்தத் தீவில் 83 அதி நவீன வசதிகள் கொண்ட ஹோட்டல்களும், 4,000 பங்களாக்களும், வணிக மையங்களும், சினிமாத் தியேட்டர்களும், கடல்பூங்காக்களும் இருக்கும், அறிவியல், பொறியியல் கட்டடக்கலையில் இது மாபெரும் சாதனையாகும்.

கடல் நீரைப் பிரித்து மண்ணாக்கும் பணியை அதிநவீன தொழில் நுட்ப அமைப்புகளுடன் 500 தொழிலாளர்கள் எப்போதும் சுழற்சி முறையில் 24 மணிநேரமும் வேலை செய்துவருகிறார்கள். 42 சர்வதேச தொழில் நுட்ப நிறுவனங்கள், மூன்று வருடங்களுக்கும் மேலாக இந்தத் தீவை உருவாக்கி வருகின்றன.

ஈச்சமரத் தீவில் 30 இற்கும் மேற்பட்ட ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் அமைய உள்ளன. கடற்கரையை அண்மித்து 2500 சொகுசு பங்களாக்கள் கட்டப்படுகின்றன. 2,400 அடுக்குமாடி குடியிருப்புகள் அமையும். தண்ணீர் விளையாட்டு பூங்காக்கள், உணவுவிடுதிகள், கடைவீதிகள், விளையாட்டு அரங்கங்கள், உடற்பயிற்சி மையங்கள் மற்றும் சினிமா தியேட்டர்கள் கட்டப்படுகின்றன. 10 கோடி கனமீற்றர் மணலும் பாறைகளும் பயன்படுத்தப்பட்டு அமையும் இந்த செயற்கைத் தீவு நவீன பொறியியல் தொழில் நுட்பத்திறனுடனும் அமைகிறது. ஐக்கிய அரபு எமிரேட்ஸின் பல்வேறு பகுதிகளில் இருந்து 70லட்சம்கனமீற்றர் அளவுக்கு பாறைகள் வெட்டி எடுக்கப்பட்டு அவற்றைக்கடலில் கொட்டி கட்டுமானப்பணிகள் நடக்கின்றன. ஈச்சமரத்தீவு அமைப்பது பற்றி 3 ஆண்டுகளாக திட்டமிடப்பட்டு முடிவு செய்யப்பட்டது. 42 ஆலோசனைக் குழுக்கள் 50 இற்கும் மேற்பட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டு ஈச்சமரத்தீவு திட்டம் முடிவு செய்யப்பட்டது. ஈச்சமரத் தீவு ஒன்றல்ல. இரண்டு தீவுகள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 25 கிலோ மீற்றர் இடைவெளியில் (ஜூமைரா, ஜூபல் அலி ஆகிய இடங்களில்) இந்த இரு தீவுகளும் அமைகின்றன. கடலில் மணலைக் கொட்டி மேடை அமைக்கும் பணிக் கப்பல்கள் நவீன கருவி மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடலில் மணல் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டு அங்கு ஒரு நிலம் உருவாக்கப்பட்டது.

முதல் கட்டமாக மணலைக் கொட்டிய பிறகு 'டிரெஜர்' என்ற இயந்திரத்தின் மூலம் மணலைத் தூவி மணற்பரப்பை உயர்த்தும் பணி நடைபெற்றது. தண்ணீருக்கடியில் பாறைகளையும் மணலையும் கொட்டி சுவர் அமைத்த பின்னர் அவை பலமாக இருக்கின்றனவா? கடல் அலையின் சீற்றத்தைதாங்கும் திறன் கொண்டவையா? என்பதை திறமை மிக்க நீர் மூழ்கி நீச்சல் வீரர்கள் மற்றும் பொறியியலாளர்கள் மூலம் பரிசோதனை செய்து பார்த்தனர்.

இதேபோல ஈச்சமரத்தீவின் சுற்றுப்புறத்தில் அரைவட்ட நிலவு வடிவத்தில் சுற்றுப்புற சுவர் அமைக்கப்படுகிறது. இந்த சுவர் கடல் நீர் மற்றும் அலைகளை தடுக்கும் சுவர் பகுதியாக செயற்படும். சுமார் 4 மீற்றர் உயரத்துக்கு அலைகள் வந்தாலும் அவற்றை தாங்கும் திறன் கொண்டவையாக இந்த சுற்றுப்புற சுவர்கள் அமையும். ஈச்சமரத் தீவில் மொத்தம் 12 ஆயிரம் ஈச்ச மரங்கள் நடப்பட்டு பெரிய தோட்டம் அமைய இருக்கிறது.

விண் வெளியில் இருந்து பார்த்தால் அழகான ஈச்சமரம் போல இந்தத் தீவு காட்சி தரும்வகையில் வடிவமைக்கப்படுகிறது. டுபாய் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் வர்த்தகம், குடியிருப்பு வசதிகள், சுற்றுலா துறையை மேம்படுத்தும் வகையில் இந்த ஈச்சமரத் தீவு அமையும்.

இன்னும் 3 ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டம் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் அந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் சொத்துக்கள், நிலங்கள், வீடுகள் வாங்கலாம் என்று இருந்த சட்டம் மாற்றி அமைக்கப்பட்டு பிற நாட்டவரும் ஈச்சமரத்தீவில் வீடுகள் வாங்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து பல வெளிநாட்டினரும் இங்கு வீடுகள் வாங்க முன் பதிவு செய்துள்ளனர். அதேநேரம் உலக வரைபடத்தின் அமைப்பில் கடல்நீரின் மீது 200 தீவுகளை அமைக்கும் பணியும் டுபாயில் தொடங்கப்பட்டுள்ளது. கடற்கரையில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் கடலில் இந்த தீவுகள் அமையும். இதற்கு ''த வேல்ட்'' (TheWorld) என்று பெயரிட்டுள்ளனர். இந்த தீவு 5.5 கிலோ மீற்றர் நீளமும் 5.5 கிலோ மீற்றர் அகலமும் 60 மில்லியன் சதுர அடிகளும் கொண்டது.

இதில் அமையும் 200 தீவுகளும் ஒவ்வொரு அளவில் இருக்கும். அதாவது உலக வரைபடத்தில் இருக்கும் ஒவ்வொரு நாடுகள் அமைப்பில் தீவுகள் அமையும். (படத்தைப் பார்க்கவும்)

இந்தத் தீவுகளில் நீர்வீழ்ச்சிகள், ஏரிகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள், குடியிருப்பு வசதிகள் போன்றவை அமைக்கப்பட்டு உலக சுற்றுலா பயணிகளை அதிக அளவில் கவரும் வகையில் உருவாக்கப்படுகிறது

இந்தத் தீவுகளுக்கு கடல் வழியாக கப்பல், படகுகளில் தான் வர முடியும். ஈச்சமரத்தீவுகளில் இருப்பது போல வீதி, பாலம் இங்கு கிடையாது. ''த வேல்ட்'' அமைக்கும் பணியின் முதல் கட்டமாக கடல் நீர் அரிப்பை தாங்கும் சுவர்கள், கற்பாறைகள் மூலம் கடல் பகுதியை மேடாக்கும் பணி நடந்து வருகிறது. 2008 ஆம் ஆண்டுக்குள் கடலில் இந்த உலகம் அமைக்கும் பணி முடிந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி இறைச்சியிலுள்ள கொழுப்பு எவ்வளவு தூரம் உடலுக்கு பாதிப்பு

**கேள்வி:—** கோழி இறைச்சி உடல் ஆரோக்கியத்துக்கும் இருதய நோயாளிகளுக்கும் நல்லது என பத்திரிகைகளில் விளம்பரம் மூலம் அறிந்துகொண்டேன். இது பற்றி மருத்துவ ரீதியான கருத்துக்களை அறிய விரும்புகிறேன்.

பதில்:— கோழி இறைச்சியை உண்பதன் மூலம் இருதய வியாதி வராமல் தடுக்க முடியாது. உடலில் அதிகளவு கொலஸ்ரோல் (HYPER CHOLESTEROLEMIA) காணப்படுபவர்களுக்கு அதிக கோழி இறைச்சி உண்பதால் எந்தவித நன்மையும் கிடைக்காது.

கோழி இறைச்சியின் தோல் பகுதியிலேயே அதிக கொழுப்பு காணப்படுகின்றது. அத்துடன் கோழி இறைச்சியில் நிரம்பிய கொழுப்பு அமிலங்கள் (SATURATED FAT) காணப்படுகின்றன. மேலதிகமாக உட்கொள்ளப்படும் நிரம்பிய கொழுப்பு வகை உடலுக்கு தீங்கு விளைவிக்கும் கொலஸ்ரோல்வகையை (LDL CHOLESTEROL) உடலில் அதிகரிக்க செய்கிறது.

நிரம்பிய கொழுப்பு வகையைத் தவிர, கோழி இறைச்சியில் காணப்படும் கொலஸ்ரோல் இருதயத்துக்கு ஆரோக்கியமானதல்ல.

பொதுவாக மற்றைய இறைச்சிவகைகளான ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி வகைகளுடன் ஒப்பிடுகையில் கோழி இறைச்சியில் குறைந்தளவில் நிரம்பிய கொழுப்பு வகையும், குறைந்தளவில் கொலஸ்ரோலும் உண்டு. அதிகளவில் ஆரோக்கியத்துக்கு ஏதுவான நிரம்பாக் கொழுப்பு வகையும் கோழி இறைச்சியில் தான் காணப்படுகின்றது. இந்த காரணத்தினாலேயே வைத்தியர்களும், போஷாக்கு நிபுணர்களும் மற்றைய இறைச்சியை விட கோழி இறைச்சியை உட்கொள்ளும்படி அறிவுறுத்துகின்றனர்.

**கேள்வி:— வயது 17. எனது உடம்பில் உரோமம் உள்ள இடங்களில் பேன், ஈர் போன்றன காணப்படுகின்றன. இவற்றைக்கட்டுப்படுத்த சில மருந்து வகைகள் பாவித்தேன். பலன் கிடைக்கவில்லை. இவற்றைக்கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை சுடர் ஒளி மூலம் உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றேன்?**

**உரோமத்தில் உள்ள பேன், ஈர் ஆகியவற்றை மருந்துகள் மூலம் இலகுவாக அழிக்க முடியும்**

பதில்:— உங்களில் காணப்படுவது ஒரு வகைப் பேன். இது கூடுதலாக ஆண்குறிப் பகுதியில் உள்ள மயிர்களில் காணப்படும். இது ஒருவரில் இருந்து மற்றவருக்கு பரவக் கூடியது. இதற்கு மருந்தாக மலத்தியோன் 0.5%, (MALATHION), கார்பறில் (CARBARYL) போன்ற மருந்துகளை நேரடி மருத்துவ ஆலோசனையுடன் பாவிக்கலாம். இந்த மருந்தைப் பாவித்து 12 மணித்தியாலங்கள் வரை விடவேண்டும். பின்பு சம்பூ பாவித்து கழுவி விடவேண்டும். இதை 3 நாள் இடைவெளியில் பாவிக்க வேண்டும். மயிர்களை வெட்டி அல்லது சவரம் செய்து அகற்றி விடுவது மருந்து போடுவதை இலகுவாக்கும். இந்த மருந்துகளினால் முட்டைகளும் அழிக்கப்படும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் க. பிறேமகிருஷ்ணா. நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:— இலவச மருத்துவ ஆலோசனை 'சுடர் ஒளி' 85, ஜயந்தமல்லி மாராய்ச்சி மாவத்தை கொழும்பு - 14

**கேள்வி:—பெண், வயது 22. திருமணமாகி ஒரு வருடமாகின்றது. இன்னமும் நான் கர்ப்பம் அடையாமல் இருக்கின்றேன். எனக்கு வெள்ளை படுகின்றது. மாதவிடாய் ஒழுங்காக வருகின்றது. கர்ப்பமடையாது இருப்பதினால்தான் வெள்ளைபடுகிறதா?**

பதில்:— வெள்ளைபடுவது (WHITE DISCHARGE) ஒரு சாதாரணமான தொழில்பாடு. இதற்கும் கர்ப்பம் அடையாமல் இருப்பதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. நீங்கள் கர்ப்பம் அடையாமல் இருப்பதற்கான காரணத்தை அறிவதற்கும் அது சம்பந்தமான மேலதிக ஆலோசனைகளைப் பெறுவதற்கும் உங்கள் கணவருடன் பெண் நோயியல் வைத்தியரைச் சந்திக்க வேண்டும்.

**கேள்வி:— எனக்கு சுவாசிப்பதில் கஷ்டம் இருக்கின்றது. இந்த பிரச்சினை எனக்கு சிறுவயதில் இருந்தே இருக்கின்றது. வெயில் காலங்களை விட மழை காலங்களில் இது கடுமையாக உள்ளது. இதனால் நடக்க, பேச கஷ்டமாக இருக்கின்றது. இதற்கு உங்களின் ஆலோசனையை எதிர்பார்க்கின்றேன்?**

பதில்:— உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சுவாசப் பிரச்சினை தொய்வு வியாதியாக (ASTHMA), இருக்கமுடியும். இதை உறுதி செய்வதற்கு சுவாசிப்பதில் கஷ்டம் இருக்கும் நேரத்தில் உங்கள் நெஞ்சை வைத்தியரின் பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும். தொய்வு வியாதியைக் மருந்துகள் பாவிப்பதன் மூலம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். வென்ரோலின் (VENTOLIN) என்ற மருந்தை வாய்மூலம் உற்கொள்ள முடியும். விசிறும் கருவிகள் மூலம் (INHALER) சுவாசப்பைக்குள் நேரடியாகவும் எடுக்க முடியும். இந்த தொய்வு வியாதி தொடர்ந்து இருந்தால் STEROID வகையான மருந்துகளையும் வைத்திய ஆலோசனையுடன் பாவிக்கமுடியும்.

**கேள்வி:— வயது 16. எனக்கு இரவில் சிறுநீர் தெரியாமல் செல்கிறது. இதற்குக் காரணம் என்ன? இதுபற்றி ஆலோசனைத் தரும்படி வேண்டுகின்றேன்?**

பதில்:— உங்களுக்கு அண்மைக்காலங்களில் ஏற்பட்டதா அல்லது சிறுவயதிலிருந்தே இருக்கிறதா என்பதைக் குறிப்பிடவில்லை. இரவில் நித்திரையில் சிறுநீர் செல்வது (NOCTURNAL ENGRESIS) சிறுநீர் தொகுதியில் (URINARY TRACT) குறைபாடு காரணமாக இருக்கலாம். பெரும்பாலானவர்களுக்கு முதலில் நித்திரையில் சிறுநீர் போகாது குறிப்பிட்ட காலத்திற்கு பிரச்சினையின்றி இருக்கும். பின்பு சில காலத்துக்குப்பின்பு நித்திரையில் சிறுநீர் போகும். இடையிலேயே நித்திரையில் சிறுநீர் விடத் தொடங்குபவர்களின் சிறுநீர்த்தொகுதியில் குறைபாடு எதையும் காணமுடியாது இருக்கும். ஆனால், சிறுநீர் தொகுதியில் கிருமித் தாக்கம் இல்லை என்பதை சிறுநீர்பரிசோதனைகள் மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இவர்களுக்கு குடும்பச் சூழ்நிலைகளினால் ஏற்படும் உளவியல் தாக்கங்களும் காரணமாக இருக்கலாம். ஆழ்ந்த நித்திரையும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஆகவே, நித்திரையில் சிறுநீர் போவதற்குரிய காரணத்தை நீங்கள் அறிவதற்கு வைத்தியரைச் சந்தித்து ஆலோசனை பெற்று வேண்டிய பரிசோதனைகளைச் செய்ய வேண்டும்.

**அளவுக்கு அதிக மார்பக வளர்ச்சிக்கு பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மூலம் தீர்வு**

**கேள்வி:—வயது 18, பெண். மார்பகங்கள் இரண்டும் பெரிதாக உள்ளன. இதனைக் குறைக்க என்ன செய்யலாம்? ஏதாவது உடற்பயிற்சி செய்யமுடியுமா? எல்லா ஆடைகளையும் அணியமுடியாமல் இருக்கின்றது. இதனால் மனவேதனை அடைந்துள்ளேன்.**

பதில்:— சில பெண்களின் மார்பகத்திலிருக்கும் சுரப்பிகள், ஈஸ்ரஜின் (OESTROGEN) என்னும் ஓமோனின் தாக்கத்தினால் மேலதிகமாக வளர்ச்சி அடைகின்றன. இதனால் சிலரின் மார்பகங்கள் மிகவும் பெரிதாக வளர்கின்றன. சிலருக்கு இருக்கும் போது வயிற்றுப்பகுதிக்கு கீழே மார்பகம் காணப்படும். அது பெண்களுக்கு மிகவும் பிரச்சினையாக இருந்தால் சத்திரசிகிச்சை மூலம் (PLASTIC SURGERY) மார்பகத்தின் அளவைக் குறைக்கலாம். (REDUCTION MAMMO PLASTY) இதற்கு (PLASTIC) சத்திரசிகிச்சை வைத்தியரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம்.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்


| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.59 | | | | | | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | | | | | | அன்பு மடல் | அன்பு மடல் |
| 7.05 | | | | | | வணக்கம் தமிழகம் | காலைக்கதிர் |
| 7.30 | | | | | | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | களம் | ஆலோசனை நேரம் | சந்தனக்காற்று | இப்படிக்கு நீங்கள் | சங்கீத மேடை | குட்டி சுட்டி | திரைவானம் |
| 8.30 | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 9.00 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | பூஞ்சோலை | ஸ்டார் சமையல் |
| 9.30 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலங்கள் ரசித்தவை | ஜீபூம்பா | நகைச்சுவை நேரம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | இளமை புதுமை | களம் | டொப் 10 மூவிஸ் |
| 10.30 | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | ஆலோசனை நேரம் | ஹிட்ஸ் பைவ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | சினி சாய்ஸ் | சந்தனக்காற்று |
| 11.30 | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | சினி சாய்ஸ் | நம்ம நேரம் |
| 12.00 | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | ரிலாக்ஸ்டைம் | ஹிட் லிஸ்ட் |
| 12.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | ரிலாக்ஸ்டைம் | ஹிட் லிஸ்ட் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | டிஸ்னிவேல்ட் | மை லிட்டில் போனி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சின்னசின்னஆசைகள் | ஹிட் லிஸ்ட் |
| 4.30 | கேர் பியர்ஸ் | ஹி—மென் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | சின்னசின்ன ஆசைகள் | ஹிட் லிஸ்ட் |
| 5.00 | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | வீக் என்ட் மூவி | சப்த ஸ்வரங்கள் |
| 5.30 | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | வீக் என்ட் மூவி | இப்படிக்கு நீங்கள் |
| 6.00—6.15 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | 6.00 பாடல்கள்/இளந்தளிர் 6.15 | இளமை புதுமை | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | வீக் என்ட் மூவி | வேலன் |
| 7.30 | நதி எங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | வீக் என்ட் மூவி | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை (நாடகம்) | உதயம் (நாடகம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# நெட் குறும்பு



அமெரிக்கா... ஆபிரிக்கா... இந்தியா...

இத்தாலி ஓவியரான லியனார்டோ டாவின்சி வரைந்த மொனாலிசா ஓவியம் பல நூறு வருடங்களைக் கடந்தும் இன்றும் பலரையும் கவர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த ஓவியத்தைப் பார்த்தால் என்னடா இதில் பெரிய அழகு இருக்கிறது? எங்களது மும்தாஸ் – கும்தாஜுடன் எல்லாம் பார்க்கும் போது இது வெறும் சப்பையாகவே தெரிகிறது. இந்த வெளிநாட்டுக் காரர்களுக்கு மட்டும் மொனாலிசாவில் என்ன பெரிதாகத் தெரிகிறதோ என்னவோ.? அது ஒரு புறம் இருக்க இத்தாலி ஓவியர் வரைந்த மொனாலிசாவை அமெரிக்கா – ஆபிரிக்க – இந்திய ஓவியர்கள் வரைந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்... அருகே பாருங்கள்.

## ஜோக்

திருமணமான இளம் ஜோடியைப் பார்க்க உறவினர் கும்பல் ஒன்று அந்த வீட்டிற்கு வந்திருந்தது. மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை! வந்திருந்தவர்கள் அத்தனைபேரும் பெண்ணின் உறவினர்கள். தவிர்க்க முடியாத காரணத்தால் திருமணத்திற்கு வர முடியாமல் போனதாக அவர்கள் வருத்தப்பட்டார்கள். அத்துடன் நின்றார்களா? பெண்ணிடம் மாப்பிள்ளை பற்றி விசாரிக்க ஆரம்பித்தார்கள். நடுத்தர வயதுப் பெண் ஒருத்தி மணப்பெண்ணிடம் 'மாப்பிள்ளை எங்கே வேலை செய்கிறார்' என்று கேட்டாள்.


அதற்கு அந்தமணப் பெண் பதில் சொல்லாமல் வெட்கப்பட்டுக் கொண்டிருந்தாள். "அட! என்னம்மா நீ! இந்தக் காலத்துப் பிள்ளை இப்படி வெட்கப்படுகிறாயே! என்று மறுபடியும் கேட்க.. அதற்கும் பதில் சொல்லாமல் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள் மணப்பெண். எல்லாப் பெண்களுமே இந்தக் கேள்வியைக் கேட்டு கட்டா




யப்படுத்த வெட்கத்தில் முகத்தை மூடிக் கொண்டு மணப்பெண் சொன்னாள்!

"போங்க எல்லாரும் வேலை செய்யற இடத்தில்தான் அவரும் செய்கிறார்!"

# கண்ணாமூச்சி



மேலேயுள்ள படத்தில் காணப்படுவது சதுரங்கம் விளையாட பயன்படுத்தும் பலகை. இந்த சதுரங்க பலகையின் மேல் பக்கம் எது..? எவ்வளவோ முயன்று பார்த்தும் எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.. உங்களால் முடிகிறதா? பாருங்கள்...

# நெட் கற்பனை





இது விளம்பர யுகம். எதை எடுத்தாலும் விளம்பரமயம் சந்து - பொந்து - இண்டு - இடுக்கு என்று விளம்பரங்கள் இல்லாத இடமே இல்லை என்றாகி விட்டது.

இனிமேல் பிறக்கும் குழந்தைகள் மீதும் விளம்பரங்கள் பொறிக்கப்பட்டுவிடுமோ என்று கூட சந்தேகங்கள் கிளப்பப் படுகின்றன.

எனவே பிறக்கும் குழந்தைகள் மீதும் எதிர்காலத்தில் விளம்பரங்கள் பொறிக்கப்பட்டால் எப்படி இருக்கும்? ஒரு நெட் செய்த கற்பனை இது.

# சத்தம் இல்லாமல் சிரிப்பு




தொடரும் விமானக் கடத்தல்கள், விமானக் குண்டு வெடிப்புகளைப் பார்த்தால் இனிமேல் விமான நிலையங்களில் - பயணப் பொதிகளை எப்படி எக்ஸ் ரே இயந்திரத்தில் போட்டுச் சோதிக்கிறார்களோ.. அப்படித்தான் மனிதர்களையும் சோதிப்பார்கள் போல் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியல் அம்பலம்

## தம்பட்டம் வேண்டாம் என்றால் தாண்டவம் ஆடுகின்றனர்

ஊவா வேலன் மிகவும் சுவாரஸ்யமாக புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தார். அப்போது நண்பர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''என்ன வாத்தியாரே! இங்கே சுதியாகப் புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கின்றீர்கள். சிலர் உங்களை கிழி கிழி என்று கிழித்துக் கொண்டு இருக்கின்றார்களே?'' என்றனர்.

''என்ன சார் செய்வது சூரியனைப் பார்த்து நன்றி உள்ளவர்கள் சத்தம் போடுவது போல் தான். நான் அதைப் பற்றி கவலைப் பட வில்லை'' என்றார் வேலன்.

''நீங்கள் அப்படி அசட்டையாக இருக்க முடியாது. பலவருடப் போராட்டத்தின் பயனாகக் கிடைத்த பிரஜா உரிமையை கிடைக்க விடாமல் முட்டுக்கட்டை போடுகின்றீர்கள் என்றும் அது உங்களுடை சமூகத்துக்கே செய்யும் துரோகம் என்றும் நீங்கள் ஒரு சமூகத் துரோகி என்றும் அல்லவா குற்றம் சாட்டி உள்ளனர்'' என்று போட்டு உடைத்தார் நண்பர்.

அதைக் கேட்டும் இந்தப் பாவி மனிதர் சிரித்தார்.

'' என்ன ஐயா நாங்கள் இவ்வளவு சீரியஸாகச் சொல்லுகின்றோம் நீங்கள் சிரிக்கின்றீர்களே'' என்று மீண்டும் கிண்டினோம்.

''என்ன சார்! நீங்களும் விடமாட்டீர்கள் போல் இருக்கின்றதே, யாராவது புத்தி ஜீவிகள் அல்லது சமூகப்பற்று உடையவர்கள் கூறியிருந்தால் கவலைப்படலாம். ஆனால், மக்களை விற்றுப் பிழைப்பு நடத்தும் வியாபாரிகள் கூச்சல் போடுவதை நான் பெரிது படுத்த வில்லை'' என்றார் வேலன்.

''அப்படிச் சொல்லக் கூடாது. இந்த நாட்டில் வாழும் அனைத்து இந்திய வம்சாவளி மக்களின் பாதுகாவலர்களாக உள்ளவர்களும், உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தியவர்களும், இந்தப் பிரஜா உரிமை கிடைப்பற்கே காரணமானவர்களும், அதனைப் பெற்றுக் கொடுத்தவர்களும் அல்லவா வேதனையுடன் குற்றம் சுமத்துகின்றனர். இவர்களையா வியாபாரிகள் என்கின்றீர்கள்?''

''நீங்கள் என்னை எப்படியாவது வம்பில் மாட்டி விட வேண்டும் என்ற திட்டத்துடன் தான் வந்தீர்களா? நான் அப்படிச் சொல்ல வில்லை. சிலர் தலைமைக்கு தெரிந்தோ தெரியாமலோ விண்ணப்பப் படிவங்களை விற்றுள்ளனர். இதை மறுக்க முடியாது. போட்டோக் கொப்பி எடுக்க, ஜே.பி. ஒப்பம் வைக்க என்றும் சில இடங்களில் பணம் பெறப்பட்டுள்ளது. மேலும் சில இடங்களில் எங்கள் சங்கத்தில் சேர்ந்தால் மட்டும் தான் போம் என்று கூறி சங்கத்துக்குச் சேர்க்கும் போமிலும் ஒப்பம் வாங்கியுள்ளனர் என பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இதைத்தான் நான் கூறினேன். அதை திரிபு படுத்திக் கூறுவதுதான் வேடிக்கை'' என்றார் வேலன்.

''அப்படி இல்லையே! இவர்கள் விநியோகித்த போம் செல்லுபடியாகாது. சட்டவிரோதமானது. அதையெல்லாம் ரத்துச் செய்ய வேண்டும் என்றல்லவா நீங்கள் கோரிக்கை விடுத்ததாக சொல்லுகின்றார்களே?''

''அப்படி எந்தப் புத்திசாலி சொன்னது? இவர்களுக்கு தமிழே வாசித்துப் புரிந்து கொள்ள முடியாது. இவர்களுக்கு எங்கே விசயம் புரியப் போகின்றது.

குடிவரவு, குடியகல்வு திணைக்களம் பாஸ்போட் விண்ணப்பங்களை அச்சிட்டு வழங்குகின்றது. அதேபோன்று பதிவாளர் நாயகத்தின் அலுவலகம் பிறப்பு, இறப்பு, விவாகம் மற்றும் காணிப் பதிவுகள் தொடர்பான விண்ணப்பங்களை அச்சிட்டு வழங்குகின்றது. இவை தேசியச் சொத்து. இந்தப் படிவங்களை தனியொருவர் அச்சிட்டு தன் பெயரையும் பதித்து விநியோகித்தால் அதை இந்த திணைக்களங்கள் ஏற்றுக் கொள்ளுமா?

அதேபோன்று தான் பிரஜா உரிமைக்கான சத்தியக்கடுதாசிகளையும் குடிவரவு, குடியகல்வு திணைகளம் வெளியிட்டுள்ளது. இதனை தனி நபர் தனது பெயரில் அச்சிட்டு வழங்க முடியுமா என்று தான் ஆணையாளரிடம் கேட்டிருந்தோம். இந்திய வம்சாவளியினருக்கு பிரஜா உரிமை வழங்க வேண்டும் என்பதில் நூற்றுக் நூறு ஆதரவானவன் நான். நானும் அதே இனத்தைச் சேர்ந்தவன். இன்னும் சொல்லப் போனால் ஜே.வி.பி.யினருக்குக் கூட இதில் பங்கு உண்டு. இவ்விடயத்தில் தனிநபர் எவரும் நானே பெற்றுக் கொடுத்தேன் என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளக் கூடாது என்பதுதான் என்னுடைய வாதம். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்கப்பட்ட போம்களை ரத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டதில்லை.'' என்று அடித்துக் கூறினார் வேலன்.

''இல்லையே! நீங்கள் தான் ஜனாதிபதியிடம் இந்த போம்களை ரத்துச் சொய்யும்படி கேட்டதாக அல்லவா கூறுகின்றனர். இது ஒரு சமூகத் துரோகம். அதனால்தான் நீங்கள் கலந்து கொள்ளும் வைபவங்களில் கலந்து கொள்ளுவது இல்லை என்றல்லவா கூறியிருக்கின்றனர்''. என மீண்டும் சீண்டினோம்.

''நான் என்ன சார் செய்வது. உண்மை உணராமல் உளறுகின்றவர்களைப் பற்றி நான் எதுவும் சொல்லத் தயாராக இல்லை. தம்பட்டம் அடிக்க வேண்டாம் என்று கூறினால் இவர்கள் தாண்டவம் ஆடுகின்றனர்.

அது மட்டுமல்ல, கடந்த காலங்களில் இவர்களின் செல்வாக்கு மலையகத்தில் தேய்ந்து வருகின்றது. அதனைச் சரிக்கட்ட வேண்டும். பொதுவாக மலையகத்தில் என்னுடைய வளர்ச்சி இவர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது. இதனால் என்மீது சேறு பூசுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு தேர்தல் குண்டு'' என்று கூறிய வேலன், ''சார் நான் நாடாளுமன்றம் கூடும் போதெல்லாம் செல்கின்றேன். அப்படியானால் நாடாளு மன்றத்துக்கும் இவர்கள் வரமாட்டார்களா?'' என்று எம்மிடமே கேட்டுவிட்டு விடை பெற்றார். இது எப்படி இருக்கு?

## காவடி தூக்கும் கதிர்காமர் குடைபிடிக்கும் கோவிந்தன்

''இந்தப் பாவிப் பசங்களால் நாமும் கூட தமிழர்கள் என்று கூற வெட்கமாக இருக்கின்றதே! தலை நிமிர்ந்து நின்ற தமிழன் இந்தப் பாவிகளால் தலை குனிய வேண்டியதாகி விட்டது.'' என்று பொரிந்து கொண்டே வெளிவந்தார் ரவிவர்மன்.

''என்ன ஐயா சூடாகி விட்டீர்கள் போல் இருக்கின்றதே'' என்றோம்.

சாதாரண சூடு இல்லை சார். மிகவும் கொதிப்படைந்துள்ளேன்'' என்றார் ரவிவர்மன்.

''அப்படி கொதிப்பேற்படக் காரணம் என்ன'' என்றோம்.

''என்ன சார் ஒன்றும் தெரியாதது போல் கேட்கின்றீர்கள்?

ஓய்வறையில் டிவி பார்த்துக் கொண்டிருந்த போது பெரும் பான்மை உறுப்பினர்கள், 'அதோ பாருங்கள் அங்கே தாடியை தடவிக் கொண்டு எவ்வளவு அழகாக அமர்ந்திருக்கின்றார். மறுபக்கம் பாருங்கள். கோட் சூட்டுடன் அந்தக் கதிரமலையான் எப்பிடி கம்பீரமாக இருக்கின்றார். அவர்கள்தான் உண்மையான தமிழர்கள் என்று வாயார சிங்களத்தில் புகழ்கின்றனர். இந்த மானம் கெட்டவர்கள்தான் உண்மையான தமிழர்கள் என்று கூறுவதை எப்பிடி சார் சகிக்க முடியும்?'' என்று ஆதங்கப்பட்டார் ரவிவர்மன்.

அதோடு நின்று விடவில்லை. ''மக்களால் விரட்டி அடிக்கப்பட்டவர்களுக்கு சப்பிப் போட்ட எலும்புத் துண்டுகளாக அமைச்சர் பதவி கிடைக்கும் என்ற நப்பாசையில் அந்தத் தாடித்தம்பி கோவிந்தா போட்டுக் கொண்டு குடை பிடிக்கின்றார். கதிர்காமத்தான் காவடி எடுக்கின்றார். இவர்கள் மானமுள்ள தமிழர்களா?'' என்று ஒருபோடு போட்டுவிட்டு விரைந்தார் ரவிவர்மன்.

# கொஞ்சம் சிரியுங்கள்

கொஞ்சம் வாய் விட்டுச் சிரியுங்கள். சிரித்து வாழ்வது ஏராளமான மன நோய்களுக்கு விடுதலை அளிக்கிறது. இளமைக்கும் ஆரோக்கியத்திற்கும் வழிகோலுகிறது. இதனைக் கண்டுபிடித்து இருப்பவர்கள் அமெரிக்க மருத்துவர்கள்.




இது ஏதோ மிகைப்படுத்திக் கூறப்பட்ட விஷயம் அல்ல. அடிக்கடி சிரித்து வாழுபவர்களுக்கும் மருந்துக் கடைக்காரருக்கும் இடைவெளி அதிகரிக்கும் என்பதற்கு அமெரிக்காவின் பிரபல பத்திரிகை ஒன்றின் ஆசிரியரான நோர்மன் கசின்ஸ் என்பவருக்கு ஏற்பட்ட அனுபவமே எடுத்துக்காட்டு.

ஒரு சமயம் அவர் கடுமையான மன இறுக்கம், மனச் சோர்வு, மிகுந்த பதற்றம், இரத்த அழுத்த நோய் போன்ற பல தொல்லைகளால் தூங்கக்கூட முடியாமல் தவித்திருக்கிறார்.

அவரது மருத்துவர்கள், இதுபோன்ற மன நோய்களுக்கு உடனடி நிவாரணம் தரக்கூடிய மருந்துகளோ மருதுவ முறைகளோ இல்லை என்று கூறி கையை விரித்து விட்டார்கள். ஆனால், நார்மனோ இதையெல்லாம் கண்டு கொள்ள வில்லை. மருத்துவமனையை விட்டுவெளியேறி, ஒருவசதியான தங்கும் விடுதியில் ஒர வாரத்துக்கு அறை எடுத்தார். தினமும் பல விதமான நகைச் சுவைத் திரைப்படங்களை தொலைக்காட்சியில் போட்டுப் பார்த்தார். அதேபோல் அவருக்குப் பிடித்தமான நகைச்சுவை புத்தகங்களையும் தொடர்ந்து படித்து வந்தார்.

என்ன ஆச்சரியம்... ஒரு துளிகூட மருந்து உட்கொள்ளாமல் அவரது துயரங்கள் அனைத்தும் இறங்கியதுடன் மனமும் உடலும் லேசாகின. அத்துடன் அவரது மனதினுள் குற்றால அருவியாக குதூகலம் பொங்கி வழிய ஆரம்பித்தது. தூக்கம் தானாகத் தழுவிக் கொண்டது.

சமீபத்தில் அமெரிக்க மருத்துவ நிபுணர் குழு, மனம் விட்டும் வாய் விட்டும் சிரிப்பதால் மூச்சுப் பயிற்சி தானாகவே நடைபெறுவதாகவும் இதனால் மூச்சுக் குழல்தொடர்பான பலபிரச்சினைகளை தீர்க்கப்படுவதாகவும் கண்டுபிடித்துள்ளனர்.

அதேபோல் இரத்த அழுத்த நோய்க்கும் சிரிப்பு ஒரு சிறந்த மருந்து என்பது புலனாகி உள்ளது. அத்துடன் மனம் தொடர்பான பலவித சிக்கல்கள் சிரிப்பதால் தீர்த்து போவதாகவும் அறியப்பட்டிருக்கிறது. வாய் விட்டுச் சிரிக்கும் போது ஒரு விசேஷ ஹோர்மோன் சுரக்கிறது எனவும் மருத்துவ ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

## சொற்சிலம்பம் போட்டி இல.92

சொற்சிலம்பம் போட்டி 92க்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் பெப்ரவரி 07ஆம் திகதி ஆகும். விடைகள் பெப்ரவரி 14 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் பெப்ரவரி21ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 90 க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.90

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ப | ரி | 3 மி | 4 த | ம் | ■ | 5 க |
| 6 க | ல | ■ | 7 கு | டி | ■ | 8 ட் | ல |
| 9 ர | ம் | 10 பை | ■ | 11 ம | க | ர | ம் |
| ம் | ■ | 12 ய | 13 ம | ன் | ■ | 14 சு | ப |
| ■ | 15 க | ன் | னி | ■ | 16 சி | ■ | க |
| 17 ச | னி | ■ | 18 த | ர் | 19 க் | க | ம் |
| 20 மா | த | 21 வ | ன் | ■ | க | ல் | ■ |
| 23 தி | ல் | லை | ■ | 24 இ | ல் | லா | ள் |

## சொற்சிலம்பம் போட்டி இல.92

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | | ■ | 14 |
| 15 | | 16 | | | ■ | 17 | |
| | ■ | 18 | | ■ | 19 | | |
| 20 | | ■ | 21 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.92

**இடமிருந்து வலம்**

1. உழைத்துப்பெறு/தேடிக்கொள்.
4. தலைவன் மனங்கவர்ந்தவள்.
6. அழகு/சுந்தரம்.
7. தாமரை.
9. காலம் தாழ்த்து.
11. திறமையைக் குறிப்பிடும் சொல்.
12. காரணமாக அமைவது.
13. அறிவு/மணக்கும் தன்மை.
15. காமன்/காதல் தேவன்.
17. உள்.
18. அரையின் அரை/பாதம்.
19. அனைத்து/முழுதுமான.
20. ஒட்டை.
21. வர்த்தகம்/வாணிகம்.

**மேலிருந்து கீழ்**

1. விவகாரம்/விடயம்.
2. புலவன்.
3. நாள்.
4. மனைவியை இழந்தவன்.
5. நோய்.
8. வீரன்.
10. ஒலிப்பது இது/நேர அளவீடும் கூட.
12. கூற்றுவன்.
13. மகள்.
14. ஒன்று நீளம். மற்றது இது.
15. மோர் கடையப் பயன்படும் கருவி.
16. பெரிய.
17. இதுவே எழுத்தின் முதல் என்கிறார் வள்ளுவர்.
19. சபை.

## சொற்சிலம்பம்-89 பரிசு பெறுவோர்.

1. வி.ஜீவிகா,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
2. ஆர்.தயாபோதினி,
பெரிய பளை,
பளை.
3. தெ.கம்சிகா,
250/1, முரசுமோட்டை,
பரந்தன்.

### பாராட்டுப் பெறுவோர்

1. திருமதி ச.சண்முக சுந்தரம்,
மருதடி,
வல்வெட்டித்துறை.
2. செல்வன் சி.சயந்தன்,
அரசடி வீதி,
வட்டுக்கோட்டை.
3. உ.தனுஷ்சாந்,
அல்வாய் மேற்கு ,திக்கம்.
4. செல்வி து.துவாரகா,
மயிலணி,
சுன்னாகம்.
5. பூ.சுஜிதா,
கட்டடங்கள் திணைக்களம்,
கிளிநொச்சி.
6. ச. ஜெயகாந்,
குருமண்காடு,வவுனியா.
7. திருமதி சோ. கமலேந்திரன்,
நாகதம்பிரான் ஆலய வீதி,
பெரிய கல்லாறு.
8. த.கனகலிங்கம்,
கம்பஸ் லேன் , திருநெல்வேலி.
9. செ. பாக்கியநாதன்,
பொது நூலகம்,
சங்கானை.
10. சி.சிவலோஜினி,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றம் புரிந்தால் சாப்பாடு கிடைக்கும்




சீனாவில் வசந்த காலத் திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. மக்கள் அளவு கடந்த உற்சாகத்துடன் வசந்தத்தை வரவேற்கின்றார்கள். மக்களின் உற்சாகம் அளவு கடந்து விட்டதனால் அவர்கள் தங்களைக் காத்துக் கொள்ளத் தவறி விடுகிறார்கள். திருடர்களின் அட்டகாசம் அதனால் அளவு கடந்து விடுகிறது. ஆயினும் பொலிஸார் தங்களுடைய கடமையிலிருந்து தவறுவதில்லை. குற்றம் புரிந்தவர்களை வளைத்துப் பிடித்து வாட்டியெடுத்து விடுகிறார்கள்.

மசாலா மிக்ஸ்

# நாய்ப் போட்டியில் பரஸ்பர நல்லுறவு

யாழ்ப்பாணம்



நாய்கள் ஓரிடத்தில் கூட்டமாகக் கூடினால் சந்தைக் கடைச் சத்தமாகத்தான் இருக்கும். ஆனால், லண்டனில் அண்மையில் நடைபெற்ற நாய்களுக்கிடையிலான போட்டியில் வழக்கத்திற்கு மாறான பரஸ்பர நல்லுறவே வியாபித்திருந்தது. படத்தில் காணப்படும் நாய்கள் இரண்டும் வெவ்வேறு ரகத்தினைச் சார்ந்தவை. ஆயினும் அவை அமைதியாக ஒன்றை ஒன்று நோக்கியவாறே இருக்கும் அபூர்வ காட்சி இது.

# தலைவர் அரபாத்துக்கு வெற்றியே கிடைக்கும்!

பாலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத்துக்கு சோதனைமேல் சோதனை. அவரைப் பதவியிலிருந்து வீழ்த்துவதற்கு எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஆயினும் அவரை அழித்துவிட எவராலும் முடியவில்லை. காரணம் பாலஸ்தீன மக்களின் ஏகோபித்த ஆதரவு அவருக்கு இருக்கிறது. ஒரு ஆறுவயதுச் சிறுமி அரபாத்தின் மீது தனது கையைஉயர்த்தி "வெற்றி" சைகை காட்டுவதைப் படத்தில் காணலாம்.



# பூனையின் இறைச்சியில் நாட்டம் வரவில்லை

சீனாவில் பூனை இறைச்சி உண்பவர்கள் அதிகரித்திருக்கிறார்கள். உணவு விடுதிகளில் பூனை இறைச்சியிலிருந்து விதம் விதமான தின்பண்டங்களைத் தயாரித்து தமது வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துகிறார்கள் சமையல் காரர்கள். ஆனால், பூனைகள் மூலம் "சார்ஸ்" நோய் பரவுகிறது என்று தெரிந்ததும் பூனை இறைச்சியில் அவர்களுக்கு நாட்டம் வரவில்லை. பூனைகளைக் கொன்று மண்ணில் புதைத்து விடுகிறார்கள்.



# இராணுவத்தில் சேர அடங்காத ஆசை



இந்தியாவில் இராணுவத்தில் சேருவதென்றால் இளைஞர்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான். ஆனால், கொண்டாட்டம் அளவு கடந்து விட்டால் மோதல் வெடிப்பது தவிர்க்க முடியாதது. தமிழ்நாட்டிலுள்ள கடலூரில் அண்மையில் இராணுவத்திற்கு ஆள் திரட்டல் நடைபெற்றது. இளைஞர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டதால் பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டியதாகிவிட்டது.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



டிசெம்பர் 28, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:

*1.சி.விஷ்ணுதாஸ், உடுவில். 2. ச.பிரதீஸ், தியேட்டர் லேன், வவுனியா. 3.சி.சிவரூபன், தாவடி மானிப்பாய் வீதி, சுதுமலை. 4.வி. கவிதா, கோப்பாய் வீதி, கைதடி. 5. சி.செந்தில்குமரன், துறைமுக வீதி, திருகோணமலை.*

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது?

இதுவரை பட்டங்கள் எதனையும் பெற்றுக் கொள்ளாது சிறப்பாக நடித்து வரும் நடிகர். தற்போது இவர் படங்களை இயக்கி நடித்து வருகிறார்.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டு பிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி
மாவத்தை,
கொழும்பு - 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருங்கும் பரீட்சைக்கு நீங்கள் தயாரா?

படிப்பது என்றாலே அது பலருக்குக் கசக்கும்! தன் பாடங்களை விரும்பிப் படிக்கும் மாணவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் படிப்பு என்பது மிகவும் முக்கியமானது. வளமான எதிர்காலத்துக்கு வழி வகுப்பது படிப்பு என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை ஆகும்.



பரீட்சை வந்தாலே எல்லோருக்கும் பயம் உண்டாவது இயல்பு தான். அதிக நேரம் படிக்காமல் சிலர் நல்ல மதிப்பெண்கள் வாங்குவதைப் பார்க்கும்போது எரிச்சல் வரத்தான் செய்யும். நாம் எவ்வளவு நேரம் படிப்பில் செலவு செய்கிறோம் என்பது முக்கியமல்ல. இது நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டிய ஓர் உண்மையான விடயம் ஆகும். அந்த நேரத்தை எவ்வாறு செலவு செய்கிறோம் என்பதே அதை விட முக்கியமான விடயம் ஆகும்.

புத்தகத்தை கையிலும் மனதை வேறு இடத்திலும் வைத்துக்கொண்டு படிப்பதால் நேரம் விரயமாவது தான் மிச்சம். எனவே படிப்பில் முன்னேற இதோ உங்களுக்காய் சில வழிகள் ...

*வீட்டில் செய்வதற்கென ஆசிரியர் வீட்டுப்பாடம் கொடுத்திருந்தால், பலர் வீட்டுக்கு வந்தவுடன் அதை மறந்து விடுவது வழமை. காரணம் அதை மறக்கடிக்கச் செய்துகொண்டிருப்பது தொலைக்காட்சியில் இடம்பெறும் தொடர்நாடகங்களே ஆகும். அதைவிட்டு வீட்டில் செய்வதற்கென ஆசிரியர் கொடுக்கும் பாடங்களை தவறாமல் செய்வதால் தினமும் சொல்லித் தரும் பாடங்கள் மனதில் பதியும்.

*பல மாணர்கள் படிக்கும் நேரத்தில் விளையாட்டாக இருந்துவிட்டு பரீட்சை நேரத்தில் மற்றைய மாணவர்களின் உதவியை நாடுவார்கள். இது தற்காலிகமாக உதவியாக இருந்தாலும், ஒரு நாள் பிரச்சினையையே தரும்.

*ஆசிரியர் பாடம் நடத்தும்போது, கவனத்தைச் சிதறவிடாது எமது கவனம் முழுவதையும் பாடத்தில் செலுத்துவதால், வீட்டில் படிக்கும் நேரத்தைப் பாதியாகக் குறைத்துக் கொள்ளலாம்.

*ஆசிரியர் பாடம் நடத்தும்போதும், வீட்டில் படிக்கும் போதும் முக்கிய குறிப்புக்களை எழுதி வைப்பது சிறந்தது. பரீட்சை நேரத்தில் விரைவாக படிக்க உதவும். ஞாபகத்துக்குக் கொண்டு வருவதும் இலகுவாக இருக்கும்.

*ஆசிரியர் கற்பிக்கும் போது விளங்கிய மாதிரி இருக்கும். வீடடுக்கு வந்தால் அது மறந்துவிட்டது. என்ன செய்வது என்று குழம்புகிறீர்களா? பயமின்றி அடுத்த நாள் மறக்காமல் ஆசிரியரிடம் உங்கள் சந்தேகங்களை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் ஆர்வத்துக்கு அவர்கள் என்றும் தடையாக இருக்க மாட்டார்கள்.

*தினமும் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வது மிகவும் சிறந்தது. எல்லாப் பாடங்களையும் சேர்த்துப் படிக்க முயற்சித்தால், அவற்றைப்பார்க்கும் போதே உங்களுக்குப் பயம் உண்டாகும். அது மட்டுமல்லாது ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் படித்தால் அது நினைவில் தங்குவதும் கடினமாக இருக்கும்.

*கவனம் செலுத்தி ஒரு மணி நேரம் படிப்பது, கவனம் செலுத்தாமல் நான்கு மணி நேரம் படிப்பதற்குச் சமம் ஆகும். அவ்வளவு நேரம் செலவழித்தும் மனதில் பதியும் என்ற உறுதியும் இல்லை. அதனால் படிக்கும் நேரத்தில் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது.

எனவே பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் மாணவர்களே, மேற்கூறப்பட்ட விடயங்களைக் கடைப்பிடித்து சிறந்த மதிப்பெண்கள் பெற முயற்சியுங்கள். நிச்சயம் வெற்றி உங்களுக்கே!




# ரிலாக்ஸ் ப்ளீஸ்..



அழகாய் இருக்க யாருக்குத் தான் விருப்பமில்லை? ஒவ்வொருவரும் தாம் அழகாய் இருக்க வேண்டும் என்பதற்காக அழகு நிலையங்களைத் தேடிப் போவது போன்ற பல வழிமுறைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். அதிலும் சற்று உடல் பருமனானால் அதை நினைத்துக் கலலைப் படும் பெண்களே இன்று ஏராளம்.

அதனால் உடல் எடையை எவ்வாறு குறைத்துக்கொள்வது என்பது பற்றிப் பார்ப்போம்.

* வாரம் ஐந்து முறையாவது உடற்பயிற்சியைத் தவறாமல் செய்ய வேண்டும். உடற்பயிற்சியினால் கொழுப்புக் கரைகிறது. இதனால் உடல் எடை குறைவதோடு, பலநோய்களிலிருந்தும் பாதுகாப்புக் கிடைக்கிறது.

*சிலர் வயிறு நிறையச் சாப்பிட்ட பிறகு ஐஸ்கிறீம், இனிப்பு, என்று சாப்பிடுவார்கள். இது எடையைக் கூட்டவே உதவும். எனவே பசித்தால் மட்டும் சாப்பிடப் பழகிக் கொள்ளுங்கள். உணவுக் கட்டுப்பாடு மிகவும் முக்கியமானது.

*ஒவ்வொரு நாளும் குறைந்த பட்சம் எட்டு ரம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முன் தண்ணீர் குடிப்பதால் சாப்பிடும் அளவு குறையும். அது மட்டுமல்லாது உடலில் உள்ள நச்சுப் பொருட்களையும் இது சுத்தம் செய்கிறது.

*நாம் உணவு உட்கொள்ளும் அளவும் கவனிக்க வேண்டிய ஒரு விடயம் ஆகும். மதியம் அதிகமாக சாப்பிட்டு விட்டால், இரவில் உட்கொள்ளும் அளவைக் குறைக்க வேண்டும். காலையில் சாப்பிட்டதை விட, மதியம் சற்றுக் குறைவாகவும், இரவில் அதைவிடக் குறைவாகவும் சாப்பிடுவது சிறந்தது.


*நாள் தோறும் நாம் சந்திக்கும் பிரச்சினைகள், சில சமயங்களில் நம்மை அளவுக்கு அதிகமாக சாப்பிடத் தூண்டலாம். அதற்காக மனத்தின் ஆசைக்கு இடம் கொடுக்காதீர்கள்.

*நான் குண்டு என்று யோசிப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் இப்போது எப்படி இருக்கிறீர்கள் என்பதை பற்றிய நினைப்பை விட்டு சந்தோசமாக இருங்கள்.



# பூண்டுக்குள்ளும் புதுமை உண்டு

பூண்டு,வெங்காயக்குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தோட்டப் பயிர் ஆகும். இது ஒரு சிறந்த உணவாக, மருந்தாக, வாசனைப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு பூண்டில் 6 முதல் 35 பூண்டுப் பற்கள் உள்ளன. பூண்டின் மருத்துவக் குணங்களால் ஸ்பெயின், இத்தாலி, சீனா போன்ற நாடுகளில் எல்லாவகை உணவுகளிலும் பூண்டு சேர்க்கப்படுகிறது. பூண்டில் அதிகளவு தாதுக்களும், விட்டமின்களும் ஐயோடின், சல்பர்,குளோரின் போன்ற சத்துக்களும் இருக்கின்றன.



காசநோயால் துன்பப்படுபவர்கள் ஒரு ரம்ளர் பாலில் சிறிது தண்ணீர் விட்டு பத்துமிளகு, சிறிது மஞ்சள் பவுடர், ஒரு பூண்டின் உரித்த முழு பற்கள் ஆகியவற்றைக் கொதிக்க வைத்து, ஒரு ரம்ளர் ஆனவுடன் வடிகட்டி அப்பாலை அருந்த வேண்டும். இந்தப் பூண்டுப் பாலை காலையும் இரவு தூங்குவதற்கு முன்பும் சாப்பிட சளி, இருமல், வாயு போன்ற அனைத்துநோயும் சரியாகும். நோய் சரியானவுடன் இப்பூண்டுப் பாலை நிறுத்திவிடவேண்டும். ஆஸ்துமா நோயால் துன்பப்படுபவர்கள் இந்தப் பூண்டுப் பாலினை சப்பிட அவர்களின் மூச்சுத் திணறல் ஓரளவு சரியாகும்.

பூண்டை உணவுடன் சேர்த்து சாப்பிட நமது உடலிலுள்ள நச்சுப்பொருட்கள் சுலபமாக வெளியேறிவிடும். மற்றும் வைரஸ் போன்ற தேவையற்ற துன்பம் தரும் உயிர்ளையும் இந்தப் பூண்டு அழிப்பதுடன் உணவுப்பாதையில் ஏதேனும் வீக்கம் ஏற்பட்டிருந்தாலும், தேவையற்ற காற்று அடைத்திருந்தாலும் அவற்றையும் சரிசெய்துவிடும். நம்முடைய குடலில் குடியிருக்கும் புழுக்களும் பூண்டு சாப்பிடுவதால் அவை தானாகவே வெளியேறிவிடும்.

பூண்டு நம்முடைய இரத்தக் குழாய்களில் படிந்திருக்கும் தேவையற்ற கொலஸ்ட்ரோல், கொழுப்பு போன்றவற்றை சிறுநீரின் வழியே வெளியேற்றிவிடும். இதனால், இரத்தம் தடையின்றி நம் உடல் முழுவதும் சுற்றுவதால் செல்களுக்குத் தேவையான உணவும் ஒக்ஸிஜனும் கிடைப்பதால் இரத்த அழுத்தம், நாடித் துடிப்பு, மூச்சு வாங்குதல் ஆகியன சீராகும். புற்றுநோயினால் (கான்சர்) அதற்குரிய மருந்துகளுடன் ஒரு முழுப் பூண்டுப் பற்களை வேகவைத்து தினமும் சாப்பிட புற்றுநோய்ப் புண்கள் விரைவில் சரியாகிவிடும்.

நம்முடைய முகத்தில் தோன்றும் பருக்கள் மீது பச்சைப் பூண்டினை பலமுறை தேய்த்துவர, பருக்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிடும். சுவைக்காக ஆசைப்பட்டு எண்ணெயில் பொரித்த தின்பண்டங்களை அதிகமாகச் சாப்பிட நேர்ந்தால், உடனே இரண்டு பச்சைப் பூண்டுபற்களை எடுத்து சிறிது சிறிதாக கடித்துசாப்பிட செரிமானத் தன்மை ஏற்படும்.

நரம்புத் தளர்ச்சியாலும், வயோதிபத் தன்மையாலும் இல்லற வாழ்வில் ஈடுபடமுடியாதவர்கள் பூண்டினை உணவுடன் அதிகளவு சேர்த்துக்கொள்ள இல்லற வாழ்வு இனிதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

**ப**ல்கலைக்கழக பட்டமளிப்பு விழா.

எனது தாய், உறவினர்களின் கண்களில் கண்ட மகிழ்ச்சியுடனும், நண்பர்களின் வாழ்த்தொலிகளுடனும், எல்லோரையும் போல் எதிர்காலம் பற்றியபல்வேறு கனவுகளுடனும் எனது பட்டத்தைப் பெற்றுக்கொண்டேன்.

எனினும் எனது அன்றைய நிகழ்வின் பின்னர் எனது அக வாழ்வில் அந்தகாரம் சூழ்ந்துவிடும் என்பதை நான்அப்போது உணர்ந்திருக்கவில்லை. இல்லம் சென்ற எனக்கு பேரிடி ஒன்று காத்திருந்தது.

அம்மா தான்கண்ணீரோடு ஆரம்பித்தா.

''தம்பி உன்னை நான் படிக்க வைக்கப்பட்ட கஷ்டம்இமயமலையை சுமப்பதை விடக் கடினம். இரும்பு தூக்கி, கல்லுடைச்சு உழைச்சனான். அப்பா எங்களை விட்டுப்போன பிறகுகொண்ணன்மாரும் பொறுப்பில்லாது திரிய, நான் எவ்வளவு கஷ்ரப்பட்டனான் என்பது உனக்குத் தெரியும்'' என்றா அம்மா.

''நாங்கள் எங்கட இஷ்டப்படி வாழ்க்கைப்பட்டு கஷ்டத்தை அனுபவித்து வருகிறோம். எங்கட பிள்ளைகளுக்கு நீ தான் ஏதாவது வழி காட்ட வேண்டும். உன்னைத் தான் நாங்கள் மலைபோல நம்பி இருக்கிறம்'' என்று எனது மூத்த அக்கா கூற ஏனைய இரு அக்காமாரும்தலை அசைக்க, அவர்களின் பிள்ளைகளின் கண்களில் கண்ட ஆவலான எதிர்பார்ப்பு என்னை ஏதோ செய்தது.

அடுத்து எல்லோரையும்விட முக்கியமானவர் எனது தங்கை. திருமண வயதை நெருங்கிக் கொண்டிருந்தும் காதில் காணப்பட்ட ஒரு சோடி தோடு தான் அவளது நகையும், சொத்தும்.

அவ்விடத்தை விட்டு அகன்ற நான் குடும்பத்தினரின் ஏக்க விண்ணப்பத்தை நெஞ்சினில் ஏந்திக்கொண்டு, கண்களில் வழிந்த கண்ணீரை விரல்களால் துடைத்தபடி மெல்ல படுக்கையில் சாய்ந்தேன்.

*****

கட்டுப்பாட்டை மீறிய எனது எண்ணப் பறவைகள் கடந்த காலம் நோக்கி சிறகடிக்கத் தொடங்கின.

அப்பொழுது எனக்கு வயது 20. உயர்தரப்பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றுக்காகக் காத்திருந்தேன். அப்பொழுது தான் அவளும் என் கண்களில்பட்டாள்.

அவளது அழகு செய்த இம்சையால் கவரப்பட்ட நான், அதைக்காதலாக மாற்றிக்கொண்டேன். இன்று விசுவரூபம் எடுத்திருக்கும் சாதி, மத, குடும்ப வேறுபாடுகள்அன்று என் புத்திக்கு எட்டவில்லை.

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி செல்லும் வரை நானும் காதல் வானில் சிறகடித்துப் பறந்தேன்.

****

நான் எனது நினைவுகள் கலைய இவ்வுலகத்துக்கு மறுபடி திரும்பினேன்.

இப்பொழுது தான் எனது குடும்பச் சுமைகள் புரியத் தொடங்கின. என்னைப் பெற்றெடுத்து, வளர்த்து, படிப்பித்து உயிர், உருவம், கல்வி, அந்தஸ்து என்று எல்லாம் தந்த பெற்றோரை நான் எப்படி உதைத்துத் தள்ள முடியும்?

எனது இன்றைய இந்த உயர்வாழ்க்கைத் தரத்துக்கு காரணம் நிச்சயம் என் பெற்றோர்கள் தான்.

மறு நாள் மாலை 5 மணி அளவில் சைக்கிளை எடுத்து வீதியில் மனம் போன போக்கில் சென்று கொண்டிருந்தேன். காலையில் கொடுத்த கடிதத்துக்கு என்ன பதில் வருமோ என்ற அச்சம் மனதில் உறுத்திக்கொண்டிருந்தது.

எதிரே எனது ஆருயிர் நண்பர்கள் சுகந், சசி இருவரும் வந்து கொண்டிருந்தனர். மகிழ்ச்சியால் எனது முகம் மலரஅவர்களை நான் எதிர்கொண்டேன். ஆனால் ஏமாந்து போனேன்.

''உன்னை எல்லாம் நண்பன் என்று சொல்லவே வெட்கமாக இருக்குது. படிப்பு, அந்தஸ்து என்று வந்தவுடன் எல்லோரையும் போல காதல் உனக்கு மட்டமாப் போயிற்றா? சட்டையை கழற்றி எறியிற மாதிரி...சீ.. நண்பனா நடக்கத் தெரியாவிட்டாலும் நல்ல மனுசனா இருக்கப்பாரு'' என்று சுகந் கூற,

''அவள் உனக்கு என்னடா தப்பு செய்தா.. உன்னை காதலிச்சது தப்பா... அவளுக்கு செய்தது மாதிரி, சந்தர்ப்பம் வந்தா எங்களையும் கழற்றிவிட மாட்டாய் என்று என்னடா நிச்சயம்? இனி நாங்கள்உன் கண்ணிலேயே முழிக்க மாட்டம். இந்தா அவளோட லெற்றர்'' என்று ஒரு கடிதத்தை முகத்தில் வீசி எறிந்தவனாக இருவரும் அவ்விடத்தை விட்டு வேகமாக நகர்ந்தனர்.

இனி எனக்கு ஒரு போதும் நல்ல நண்பர்கள் கிடைக்கப்போவதில்லை என்பதைத்தெளிவாகஉணர்ந்து கொண்டு கண்களிலிருந்து வடிந்த கண்ணீரை விரல்களால் துடைத்து, நடுங்கும் கரங்களால் மெல்ல கடிதத்தை எடுத்துப் புரட்டினேன்.

*''குடும்பம், வாழ்க்கை என்று வந்த அப்புறம் நீயும் சராசரி மனிதனாகிவிட்டாய். நான் உன்னை உயிருக்குயிராய் காதலிச்சேன். ஆனால் நீ என்னைக் காதலிக்கவில்லை என்று காட்டிவிட்டாய். நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது. நீ கூறியது போல நீ வேண்டுமானால் வேறு வாழ்க்கை அமைத்துக்கொள். ஆனால் என்னால் நிச்சயமாக முடியாது.*

*ஒன்றில் நான் உன்னோட சேருவேன். இல்லையேல் இப்படியே என்னால் வாழ முடியும். என்னைப்பற்றி நீ கவலைப்படாதே எப்படி இருந்தாலும் நான் உன்னில் வைத்த அன்பு, பாசம் எல்லாம் போச்சுது. எப்பாடுபட்டாலும் நான் உன்னை அடைவேன். ஆனால் நீ என்னிடம் எனது பழைய அன்பு, காதலை எதிர்பார்க்க முடியாது. நான் வித்தியாசமானவள் என்பது உனக்கே தெரியும்.''*

என்னை நினைத்து நானே சிரிக்கிறேன். கண்களில் இப்போது தோன்றிய கண்ணீர் கன்னம் வழியோடி நெஞ்சை நனைத்தது.

'மறுபடிநான் அவளை அடைந்தாலும் கூட எனது பழைய அன்பான காதலி இனிஎப்போதும்கிடைக்கப்போவதில்லை' என்று மனதின் ஒரு மூலையிலிருந்து ஒரு குரல் ஒலித்துக்கொண்டிருந்தது.

இருள் சூழ்ந்து வெகுநேரமாகிவிட்டதை உணர்ந்து நான் மெல்ல வீடு நோக்கிப் புறப்பட்டேன். வீட்டிலிருந்து பேச்சுக்குரல்கள் கேட்க மெல்ல தயங்கியவாறு நின்றேன். அவை என் காதில் கேட்க அசைவற்று நின்றேன்.

# கரை தேடும் ஓடங்கள்



ஆனால் இதற்காக காதல் தோல்வி, ஏமாற்றுதல் என்பது முடியுமா? காதல் வந்தபொழுது நட்சத்திரங்களாக மின்னிக் கொண்டிருந்த பிரச்சினைகள் இன்று மத்தியானச் சூரியனாக சுடுகின்றன.,

சிறுகதை

''காதலுக்காக எதையும் இழக்கலாம்'' என்று எனது மனச்சாட்சியே என்னை உறுத்துகின்ற போதும், அவ்வாறேவாழ்ந்து காட்டியோர் எத்தனை பேர் இருக்கிறார்கள்? சுயநலம் என்று வந்தவுடன் காதலை உதறி எறிந்தவர்கள் தான் அதிகம்.

****

எங்கேயோ கேட்ட கோழி கூவும் ஓசை எனது சிந்தனையைக் கலைத்தது. படுக்கையில் இருந்துஎழுந்த நான் நேரம் அதிகாலை 4 மணி என்பதை அறிந்து, எழுந்து மேசையிலிருந்து கடிதம் எழுதத் தொடங்கினேன். விடிந்ததும் என்னவளிடம் கொடுப்பதற்காக.

''அம்மா நீங்கள் அவனை நம்பி இருந்து எந்தப் பிரயோசனமுமில்லை. அவன் உங்களையோ, எங்களையோ கவனிக்கப்போறஆளேஇல்லை. அவனை படிக்கவைத்தது நாக பாம்புக்குப் பால் வாத்தது மாதிரித்தான். சந்தர்ப்பம் வந்ததும் கொத்துது பாத்தீங்களா?'' என்று அண்ணா கூறினார்.

அவை நெருஞ்சி முட்களாக என் நெஞ்சில் குத்தின. நெஞ்சைமெல்ல அழுத்திக் கொண்டேன்.

''இன்னும் கொஞ்ச நாட்களில் அவளுக்குப் பின்னால் இவன் ஓடிடுவான். எப்படியும் இவன் அவளை விடப்போறதில்லை. இதைவிட அவன் செத்தே இருக்கலாம். கொஞ்ச நாட் கவலை பிறகு சரியாகிவிடும்.'' என அம்மா ஆமோதித்தார். ஆத்திரம் அவ நெஞ்சை அடைத்திருக்க வேண்டும்.

தலையில் சம்மட்டி கொண்டு அடிப்பது போல இருந்தது. ''அவளா இவனை விட்டாலும் நிச்சயம் இவன் அவளை விடமாட்டான்'' என்று குரல் கேட்க என் கண்களில் நீர் பெருக்கெடுத்தது.

வீடு சென்று நான் மௌனமாக நித்திரைக்குச் சென்றேன். கண்கள் மூட மறுத்தன. துக்கம் நெஞ்சை அடைத்தது. எப்படி யென்றாலும் எனது உயிரை மாய்க்க வேண்டும் போல் இருந்தது.

எனக்குள் தோன்றும் தற்கொலை முயற்சிகள் எனக்கே பயமாக இருந்தன. எப்படியென்றாலும் இனி எனக்கு இறப்பின் பின்தான் நிம்மதி என்று பட்டது.

'நான் இப்படி விபரீதமான முடிவு எடுத்தால் எனது குடும்பம் நிர்க்கதி ஆகிவிடுமே!. எனது தங்கையின் திருமணம் கேள்விக்குறியாகிவிடுமே. பின் என்னைப் பற்றி இந்த உலகம் என்ன சொல்லும்?' மனம் ஒரு நிலைப்பாட்டில் இல்லை.

எப்படியென்றாலும், எதுவரினும் நான் வாழ்வது என்றே தீர்மானித்தேன். எனது விரல் கண்ணைக் குத்தினால் அதை துண்டிப்பதா? என்று யோசித்தபடி மெல்லக் கண்ணயர்ந்தேன்.


காலையில் அறைக்குள் நின்று ''ஒன்றில் எனது குடும்பத்தை மாற்று, இல்லை அவளிடம் உள்ள எனது காதலை அகற்று, ஆனால் என்னை இப்படி அலைக்கழிக்காதே'' என்று கடவுளைக் கும்பிட்டு புது நம்பிக்கையுடன் வீதியில் இறங்கினேன்.

இனி நான் என்ன முடிவு எடுத்தாலும், எத்தகைய வாழ்வுகளை எனக்கு அமைத்தாலும் இரண்டுபட்ட இருபக்கத்து உறவுகளையும், உணர்வுகளையும் எப்போதும் எக்காலத்திலும் திருப்திப்படுத்த முடியாது என்று எண்ணம் மனதில் பெரும் சுமையாக நிரந்தரமாக அழுத்திக் கொண்டிருந்தது.

*(யாவும் கற்பனையே)*

# ஆழ்மனம் தரும் ஆற்றல்

நம்பிக்கையும், எண்ணமும் இரண்டறக்கலக்கும் போது உருவாகும் அதிர்வலையை ஆழ்மனம் உடனடியாக கிரகித்துக் கொள்கின்றது. நம்பிக்கை, காதல், காமம் இந்த மூன்று உணர்ச்சிகள்தான் எல்லா உணர்வுகளையும் விட அபார சக்தி வாய்ந்தவை. இந்த மூன்றும் ஒன்று சேரும் போது சிந்தனை உடனடியாக ஆழ்மனதை அடையும் வகையில் மாற்றம் அடைகிறது.



நம்பிக்கை என்பது ஒரு வித மனநிலை. சுய கட்டளைக் கோட்பாட்டின் மூலம் தனக்குத் தானே உறுதியோடு ஒன்றை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு அதை ஆழ்மனதில் பதிய வைத்து நம்பிக்கையை உருவாக்கிக் கொள்ள முடியும். அல்லது தூண்டிவிட முடியும்.

மனிதர்கள் சில சந்தர்ப்பங்களில் தவறிழைக்கிறார்கள். எப்படி என்று பார்த்தால் ஆழ்மனம் அப்படி ஆட்டுவிக்கிறது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். பிரபல குற்றவியல் நிபுணர் ஒருவர் இப்படிச் சொல்கிறார். ''ஒரு தப்பான காரியத்தைச் செய்யும் போது எவருக்கும் முதலில் கசப்பாக இருக்கும் ஒரு குறிப்பிட்ட காலம் அதேபோன்ற செயல்களைத் தொடர்ந்து செய்தால் அதுவே பழக்கமாகி அதில் ஒரு பிடிப்பு வந்துவிடும் ரொம்பக் காலம் அதிலேயே ஊறிவிட்டால் கடைசியில் அதுவே வாழ்க்கையாகிவிடும்'' என்கின்றார்.

உணர்வுகளோடு கலந்துவிட்ட எந்த மாதிரியான எண்ணங்களுக்கும் , நம்பிக்கை சேர்ந்து விட்டால் அது எமக்கு



உடனே பயன்தரத் தொடங்கும்.

உங்கள் மனதில் நல்ல விதமான உணர்ச்சிகளை மேலோங்க வைப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும். கெடுதலான உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. உங்கள் உயர்வுக்கு இது மிகவும் முக்கியம்.

நல்ல விதமான உணர்ச்சிகள் நிரம்பியுள்ள மனம் தான் நம்பிக்கை, மனோபாவம் வளர்வதற்குப் பொருத்தமான இடம். இப்படிப்பட்ட மனம் சொல்வதைத்தான் ஆழ்மனம் உடனடியாக ஏற்றுக் கொண்டு அதன்படி செயற்படும். உங்கள்மீது நம்பிக்கை கொள்ளுங்கள். வாழ்வில் வெற்றி கைக்கொள்ள முடியும்.,,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'கோவில்'
—சிம்பு, சோனியா அகர்வால்

# வருகிறது அயோத்யா - சர்ச்சை சினிமா

தமிழ் சினிமா பல சர்ச்சைக்குரிய படைப்புக்களை தந்திருக்கிறது. மதம் சார்ந்த சர்ச்சைகளை சொல்லியிருந்தாலும் மத விவகாரங்களின் அடி ஆழம் தொட்டு திடுக்கிட வைக்கும் ஒரு படைப்பாக உருவாகிக்கொண்டிருக்கிறது 'அயோத்யா' எனும் திரைப்படம்.

மோகன்குமார் — ராகினி புதுமுக ஜோடியுடன் சீதா, மணிவண்ணன் உட்பட பலர் நடிக்க 'அயோத்யா' படம் படு ரகசியமாக உருவாக்கி வருகிறது.

அயோத்தி பிரச்சினை இந்திய அரசியல்வாதிகளாலும், மத வாதிகளாலும் தீராத பிரச்சினையாகபிடித்துக் கொண்டிருக்கிற வேளையில் இந்தப் படம் என்ன பின்விளைவுகளை ஏற்படுத்துமோ? என்கிற பதற்றம் இருக்கிறது

இந்துப் பெண்ணும், முஸ்லிம் இளைஞனும் பாடும் டூயட்டாக நா.முத்துக்குமார் எழுதிய ஒரு பாடல் படத்தில் இடம் பெறுகிறது.


பெண்: தோட்டத்து துளசி
வேலிதாண்டும் போது
காற்றைப்போல் காதல்
கட்டுப்பாடு ஏது?

ஆண்: இத்தனை நாளாய்
அத்தர் வீசும்போது
மல்லிகை வாசம்
மார்பில் வந்தது ஏது?

பெண்: தேவாரம் ஓதி
துதிக்கின்ற இதழ்கள்
திருக்குரான் ஓத
துடிப்பதும் ஏனோ?

ஆண்: நாயகம் பேரை
உச்சரிக்கும் இதயம்
ஊதையின் பாட்டில்
மகிழ்ந்தது ஏனோ?

பாட்டுவரிகளோஇப்படி நீளுகிறது.



—கமல்—

விருமாண்டி



# சினி செய்

கிரண் காட்டில் சந்தோச மழை தான். 'தி மலை' யில் ஆ
கள் யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அப்ப தில் தான்
லில் ஆட்டம் போட்டிருக்கிறார். இதனால் ராசியான நடிகை
விழுந்திருக்கிறது. இது ஒரு புறமிருக்க, திருமலையில் அவர்
தெலுங்கு சினிமாவே கதி கலங்கிவிட்டதாம். அதே மாதிரி
'தைத் தக்க' என்று ஆடச் சொல்லுகிறார்களாம். எந்த மறுப்
கில் ஆட்டம் கட்டுகிறாராம்அம்மணி.

***

இலங்கையில் படப்பிடிப்புகள் நிறைய நடக்கின்றன. ஊ
ரேலியா மலைப்பகுதி நல்ல காட்சிக்களம் என்கிறார்கள் இ
தில் 'கண்களால் கைது செய்', 'வர்ண ஜாலம்' படப்பிடிப்பு
கையில்தான் நடந்தன. ஆனால், படப்பிடிப்புக்கான கருவிக
இதனால் 'வர்ண ஜாலம்' படக்குழுவினர் இந்தியாவிலிருந்
வந்தனர். பிறகு கிரேனை இங்கேயே விற்றுவிட்டு சென்றுவி
யிலும் கிரேன் வசதியுண்டு என்பதுதான் அறியப்படவேண்


***

தமிழகத்தில் வெயில் பட்டையைக் கிளப்பப் போகிறது
மோப்பம் பிடித்துவிட்டார்கள். பெப்ரவரி தொடங்கி மூன்று
செல்கிறார். விக்ரமும், வெயில் அதிகமாக இல்லாதஇடமாகப்
வைத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறாராம்.

ஆனால் நடிகைகள் அசரவில்லை. தங்களுக்கு கரவன்
வசதிகளும் உள்ள ஏ.ஸி. வண்டி) வேண் மன்பதில்
இரண்டாவது வரிசை நாயகிகளும் கரவன் கேட்டு அடம்
ளர்கள் தான் பாவம். எல்லாச் சூடும் அவர்கள் தலையில்!


***

'கண்ணாடிப் பூக்கள்' படத்தில் முதல் முதலாக பார்த்திப
பாடி இருக்கிறார். அவருடன் சேர்ந்து பாடிய பாடகி — பர
பாங்குத்து' பாடல்! படப் பிடிப்பு நடந்தபோது பாடலைக் கே
இல்லையாம்.



'உள்ளம்'
—மிதுன், பிரியாமணி—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'அருள்'
–விக்ரம்–

# ...செய்திகள்

...மலை' யில் அவர் போட்ட ஆட்டத்தை ரசிகர்
...தில் தான் ...வர் ஒற்றைப் பாடலுக்கு முத
...சியான நடிகை என்கிற முத்திரை அவர் மீது
...மலையில் அவர் போட்ட ஆட்டத்தைப் பார்த்து
...ம் அதே மாதிரியான ஆடையையும் தந்து
...ாம். எந்த மறுப்பையும் சொல்லாமல் தெலுங்

* *

...நடக்கின்றன. ஊட்டியை விட இங்குள்ள நுவ
...ன்கிறார்கள் இந்தியக் கலைஞர்கள். சமீபத்
...ம்' படப்பிடிப்புக்கள் முழுக்க முழுக்க இலங்
...புக்கான கருவிகள் இங்கே கிடைப்பது கஷ்டம்
...ந்தியாவிலிருந்து கிரேன்களைக் கொண்டு
...விட்டு சென்றுவிட்டார்களாம். இனி இலங்கை
...றியப்படவேண்டிய தகவல்.


* *


...ப்பப் போகிறது என்பதை சினிமாக்காரர்கள்
...தாடங்கி மூன்று மாதங்கள் விஜய் வெளிநாடு
...ல்லாதஇடமாகப் பார்த்துத்தனது படப்பிடிப்பை
...

...களுக்கு கரவன் வான் (படுக்கை உட்படசகல
...மன்பதில் ...தியாக இருக்கிறார்களாம்.
... கேட்டு அடம் பிடிக்கிறார்களாம். தயாரிப்பா
...ள் தலையில்!

* *

...தலாக பார்த்திபன் சொந்தக் குரலில் பாட்டுப்
... பாடகி – பரவை முனியம்மா. சரியான ...ப்
...து பாடலைக் கேட்டு ஆட்டம் போடாதவர்களே





'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்'
–தனுஷ், அபர்ணா–
(படப்பிடிப்புத் தளத்தில்)

# திருமதியின் திறமை

சன் டிவியின் இளமை புதுமையில் அறிமுகமாகி, மணி ரத்னத்தின் அலை பாயுதே மூலம் சினிமாவுக்கு வந்தார் ஸ்வர்ணமால்யா.

அடுத்தடுத்து சினிமா வாய்ப்புக்களை எதிர்பார்த்து டிவி நிகழ்ச்சிகளில் இருந்து மெதுவாக ஒதுங்கினார். ஆனால், எல்லாமே அக்கா சான்ஸ்களாக வரவே கும்பிடு போட்டுவிட்டு அமெரிக்காவில் வசிக்கும் தமிழரை திருமணம் செய்து கொண்டு போனார்.

அங்கே போன ஸ்வர்ணமால்யா நன்றாகவே மெலிந்து, ஸ்லிம் ஆகி, ட்ரிம் ஆகி திரும்பி வந்தார். இனி நடிக்க மாட்டார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் திடீரென மீண்டும் சான்ஸ் வேட்டையில் இறங்கியதற்கு பலன் கிடைத்தது.

விஜயகாந்தின் எங்கள் அண்ணா படத்தில் அவருக்குத் தங்கையாக பிரபு தேவாவுக்கு ஜோடியாக நடித்து முடித்திருக்கிறார். தொடர்ந்து வாய்ப்புக் கேட்டு தயாரிப்பாளர்களின் அலுவலகங்களில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார். போகும் இடங்களில் எல்லாம் ''அக்கா வேஷம், தங்கச்சி வேஷம்னு ஒதுக்கிடாதீங்க, கவர்ச்சியாக நடிக்க சான்ஸ் கொடுங்கள்'' என்று கேட்கிறாராம்.

''சான்ஸ் குடுத்து பாருங்க.. கவர்ச்சியில் கலக்குறேன்'' என்று இறங்கி வந்திருக்கும் ஸ்வர்ணமால்யாவுக்கு இதுவரை எந்தத் தயாரிப்பாளரும் சாதகமாகப் பதில் தந்ததாகத் தெரியவில்லை.

ஆனாலும் முயற்சியில் தளராமல் தொடர்ந்து தனது சான்ஸ் வேட்டையில் தீவிரமாய் இறங்கியிருக்கிறார் ஸ்வர்ணமால்யா. ஸ்வர்ணமால்யாவுக்கு என்ன ஆச்சு?

# ஷெரின் காட்டில் மழை

காதல், ரகசிய நிச்சயதார்த்தம், தாயை விட்டுப் பிரிந்து, காதலர் வீட்டில் வாசம், விபத்து எனப் பல்வேறு பரபரப்புகளால் நொந்து போயிருந்த ஷெரினுக்கு மீண்டும் நல்ல காலம் பிறந்திருக்கிறது.

காதலர் ரோகனுடன் தனக்குத் திருமணமாகிவிட்டதாக வந்த தகவல்களால் டென்ஷனில் இருந்த ஷெரின் சென்னையிலேயே முகம் போட்டு, காதலர் சகிதமாக பேட்டிகள் தந்தார்.

''நாங்கள் கல்யாணம் பண்ணிக்கப் போவது உண்மை, ஆனால், இப்போது இல்லை. எனக்கு கல்யாணமாகிவிட்டதாக புரளி கிளப்புவது என் அம்மாதான். அவரை நம்பாதீர்கள்'' – என்று குண்டு போட்டார்.

அத்தோடு சினிமா தயாரிப்பு நிறுவனங்களிலும் ஏறி, இறங்கி சான்ஸ் கேட்டு வருகிறார். கூடவே ரோகனையும் அழைத்து வரும் ஷெரின் அவருக்கும் சேர்த்து சான்ஸ் கேட்டார். ஆனால், ஆண் துணையுடன் வந்ததால் பல தயாரிப்பு பார்ட்டிகள் ஷெரினை கண்டுகொள்ள மறுத்துவிட்டன.

இதையடுத்து காதலரைக் கழற்றிவிட்டுவிட்டு தனியே போய் தயாரிப்பாளர்களை சந்திக்கும் வேலையில் இறங்கியுள்ளார் ஷெரின். இதற்குப் பலனும் கிடைத்துள்ளது. புகழ் என்ற புதிய படத்தில் ஹீரோயினாக புக் ஆகியிருக்கிறார். அத்தோடு காதல் திருடா என்ற படத்திலும் ஹீரோயினாக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு ஜோடி குணால். (என்ன மாயமோ தெரியவில்லை, படங்கள் ஓடுதோ இல்லையோ குணாலுக்கு வருடத்துக்கு 2 படமாவது கிடைத்துவிடுகிறது) வழக்கமாக கவர்ச்சியைக் கொட்டும் கரெக்டர்கள்தான். கையில் சிகரெட்டோடும் வாயில் புகையோடும் வாய்ப்பு கொடுத்த தயாரிப்பாளர்களுக்கு நன்றி சொல்லிவிட்டுத் திரும்பியிருக்கும் ஷெரினின் சான்ஸ் வேட்டை தொடர்ந்து கொண்டிருக்கிறது.



'ஜனா'
–சினேகா–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மை.புருனோ, திருகோணமலை.*

**கேள்வி:—தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா! எங்கு, எப்போது?**

பதில்:— எங்கும்! எப்போதும்!

*செ.செல்வராஜ், தலவாக்கலை.*

**கேள்வி:— பித்தா! நடிகை மனோரமாவிடம் உங்களைக் கவர்ந்த விஷயம் எது?**



பதில்:— இன்னமும் துள்ளும் இளமை, இனிமையான வெண்கலக் குரல்.

*வ.ரங்கன், சாம்பல்தீவு.*

**கேள்வி:—''கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்'', 'கணவனே கண்கண்ட தெய்வம்'', ''மணாளனே மங்கையின் பாக்கியம்'' என்றெல்லாம் கணவன்மார்களைப் போற்றும் மனைவி மார்கள் இக்காலத்திலும் உண்டா?**

பதில்:— சில கிராமப் புறங்களில் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

*ரா.மதன், கண்டி.*

**கேள்வி:— கனவில் அடிக்கடி ஒரு பெண் வந்து போகிறாள். பெயர் தெரியாத அந்த**



**தேவதைக்கு என்ன பெயர் வைக்கலாம்?**

பதில்:— ஸ்நேகா

*வ.செல்வமணி, நாவலப்பிட்டிய.*

**கேள்வி:—பித்தனே..! அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருந்தால் நீங்கள் யாராகப் பிறக்க விரும்புவீர்கள்?**

பதில்:—இன்னொரு பிறவி எடுக்கவும் தயார். ஆனால், பிரமச்சாரி வாழ்க்கை தான் போதுமடா போதும்.

*நெ.பாக்கியராஜ், மட்டக்களப்பு.*

**கேள்வி:—மனைவிக்கு என்ன பொருள் வாங்கிக் கொடுத்தாலும் ஏதாவது குறை சொல்லிக் கொண்டிருக்கிறாளே. திருப்தியாக ஒரு வார்த்தை சொல்ல மாட்டேன் என்கிறாளே?**

ப:மனைவி எதைச் சமைத்தாலும் உப்பு இல்லை, புளி இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறீங்களே! அதனை முதலில் நிறுத்துங்கள். உங்கள் மனைவி வழிக்கு வந்து விடுவா.

*பி.ரொபின்சன்.*

**கேள்வி:— பித்தா...! ஒருவனுக்கு எப்போது கோபம் வரும்?**

பதில்:—ஏமாற்றும்போது, புறக்கணிக்கப்படும் போது, கிள்ளுக்கீரையாக பிறர் நினைக்கிறபோது, நம்பவைத்து கழுத்தறுக்கின்ற போது, அவனை புரிந்து கொள்ளாமல் மற்றவர்கள் நடக்கின்ற போது.

*ப.கிருஷ்ணன், கண்டி.*

**கேள்வி:—மனித நேயம் என்றால் தங்கள் மனசுக்கு வரும் நபர் யார் பித்தா?**

பதில்:— நான்தான் ...ஹீஹீ..!

*ந.செல்வி, அட்டன்.*

**கேள்வி:—மனதை திறமையாக வைத்துக் கொள்வது எப்படி?**

பதில்:—புத்தியை தெளிவாகவும் கூர்மையாகவும் வைத்துக் கொண்டு எந்நேரமும் உழைக்கத் தயாராக இருந்தால் மனசு எப்போதும் திறமையாகவே இருக்கும்.

*மை.ரமேஸ், திருகோணமலை.*

**கேள்வி:— காதலித்து கல்யாணம் செய்வது தப்பா?**

பதல்:— இல்லை, அதன் பின்னர் மனம் பேதலித்து நிற்பதுதான் தப்பு.

*பி.போல், வன்னி.*

**கேள்வி:— ஒரே நேரத்தில் வாசகரையும் எழுத்தாளரையும் திருப்திப்படுத்த உங்களால் எப்படி முடிகிறது?**

பதில்:— மாமியையும் மருமகளையும் ஒரே சமயத்தில் திருப்திப்படுத்தும் வித்தை போன்றதுதான் அது.

*வே.டெரிக், மட்டக்குளி.*

**கேள்வி:— வழக்கு தோல்வி அடையும் என்று தெரிந்தும் வழக்கைத் தொடரும் வழக்கறிஞர் குறித்து?**

பதில்:— வழக்கைத் தொடர்ந்தால் தானே அவரது வாழ்க்கையும் தொடரும்.

*கு.சுமதி, மூதூர்.*

**கேள்வி:— பித்தா..! சமாதானம், சமாதானம் என்று கூறிக்கொண்டு பாதுகாப்புக்காக இன்றும் பெரும் தொகையான நிதி ஒதுக்குகிறார்களே?**

பதில்:— வரவு எட்டணா, செலவு பத்தணா, கடைசியில் துந்தணா.. துந்தணா.

*சி .ரூபன், பதுளை.*

**கேள்வி:—பித்தா..! பெண்களிடம் ஏமாறும் ஆண்களை எவ்வாறு அழைக்கலாம்?**

பதில்:— யதார்த்தவாதிகள் என்று கூறலாம். அதுதான் இயற்கையின் தத்துவம்.

*ப.குயின்சி, கொழும்பு.*

**கேள்வி:— பித்தன் சார்..! பெரிய பதவியில் உள்ளவர்களை விட அவர்களுக்குக் கீழே உள்ளவர்கள் அதிக அதிகாரம் பண்ணுகிறார்களே?**

பதில்:— வாசலில் கட்டி நிற்பவர் வருபவர்கள் மீது பாய்வது இயல்பு தானே!

*வ.குமாரி, திருநெல்வேலி.*

**கேள்வி:—பொம்மையையும் பாவை என்கிறார்கள், பெண்ணையும் பாவை என்கிறார்கள். ஏன் பித்தா?**

பதில்:— அப்படிச் சொன்னாலாவது அமைதி காப்பார்கள் என்ற நப்பாசையில் தான்.

*சு.பிரியந்தி— நல்லூர்*

**கேள்வி:— பித்தா..! உம்மிடத்தில் இரகசியமாய் கேட்கின்றேன் ஐந்நூறு ரூபா கடன் எடுக்க முடியுமா?**

பதில்:— நானும் இரகசியமாய் சொல்லுகின்றேன் எனக்கு வாங்கித்தான் பழக்கம்.....

*கு.குலுரூபன், ஸ்கந்தபுரம்.*

**கேள்வி:— மைடியர்.. ஏதோ சிவப்பு விளக்கு, சோனாங்காச்சி என்றெல்லாம் எழுதியிருக்கிறீரே.. அப்படி என்றால் எனக்குச் சத்தியமாகத் தெரியாது விளக்க முடியுமா?**

பதில்:— குலரூபன் என்ற குழந்தையே... கொஞ்சம் வாயிலே உள்ள விரலை வெளியே எடுத்துவிட்டு – தவழ்ந்து – தவழ்ந்து வீட்டுக்கு வெளியே வந்து உலகத்தைபாரும். எல்லாம் விளங்கும்.

*அ.வைஷ்ணவி, பாலாவி*

**கேள்வி:—படித்ததும் ச்சீய் என்று சொல்லக் கூடிய ஜோக் இருக்கிறதா பித்தா! உங்களிடம்?**

பதில்:— இருக்கிறதே... இந்தா.... பிடியுங்கள் எனக்கு ஒரு தம்பிப் பாப்பா வேண்டும். அதுவும் உடனடியாக வேண்டும் என்று அடம்பிடித்து அழுதாள் ஒரு ஐந்து வயதுச் சிறுமி. அதற்கு அவளது அம்மா சொன்னாள், ''நானும், உனது அப்பாவும் முயற்சி செய்தால் உனக்கு தம்பிப்பாப்பா பெற்றுத் தரமுடியும். ஆனால் அதற்கு பத்து மாதங்கள் நீ காத்திருக்க வேண்டும்.''

இதனை கேட்டு ஏமாற்ற மடைந்த அந்த சிறுமி தாயிடம் கேட்டாள், ''ஏன் மம்மி நான்கு–ஐந்து பேராக முயன்றால் சீக்கிரம் கிடைக்காதோ?''

*க.இரத்தினசிங்கம், கிளிநொச்சி*

**கேள்வி:—கடுகளவாவது பிறருக்குத் தீங்கு நினைக்காத மனிதர்களை எங்கே காணலாம்?**

பதில்:— தமிழ் சினிமாவில் – அதுவும் கதாநாயகன்மட்டும்.

*கி.ஜெனா கனகாம்பிகை, கோவிலடி.*

**கேள்வி:— பித்தா! தைப்பொங்கல் வந்தால் ஏன் மண் பானையில் பொங்குகிறார்கள்?**

பதில்:— வீட்டுக்கு முன்னால் கோலம் போட்டு– விறகு அடுப்பு வைத்து – மண் பானையில் பொங்கியது எல்லாம் அந்தக்காலம். இப்போ GAS அடுப்பில் அலுமினியப் பானையில் பொங்குவது தான் சர்வதேச நடைமுறை ஆகிவிட்டது.

*இ.ஜெந்தினி, கிளிநொச்சி*

**கேள்வி:— பித்தா! உங்களுக்கு ஒரு கேள்வி அனுப்பிவிட்டு பதிலுக்குக் காத்திருப்பதைவிட வெளிநாடு போவதற்கு பணம் கட்டிவிட்டு காத்திருப்பது சுலபம்போல் தெரிகிறது. ஏன் இப்படி வாசகர்களின் மனதை புண்படுத்துகிறீர்கள்?**

பதில்:— அம்மாடி.. வரும் கேள்விகள் ஒழுங்கானவையாக இருந்தால் பதிலும் உடனேயே கிடைக்கும். நடிகர்– நடிகைகளின் விலாசம் கேட்டும், காதலிக்க ஆலோசனைக் கேட்டும், எனக்கு – அவருக்கும் தொடர்பு ஏற்படுத்தித் தரும்படி கேட்டும் பதிலளிக்க வில்லை என்று அடம்பிடித்தால் நான் என்ன செய்ய? உருப்படியான கேள்விகளை கேளுங்கள். உடனடியாக பதில் கிடைக்கும்.

*அ. சுரேஸ், சீனக்குடா.*

**கேள்வி:— பித்தா! குடிப்பவனைத் திருத்த என்ன வழி?**

பதில்:—



முதலில் நாய் வாலை நிமிர்த்திய வனைக் கண்டுபிடியுங்கள்.

### பித்தனின் கேள்வி

**கேள்வி:— பெண்களா ஆண்களா காதலைப் புனிதமாகப் போற்றுபவர்கள்?**

### வாசகர் பதில்கள்

*மாலினி — கல்முனை.*

**காதலை விளையாட்டாக எடுப்பவர்கள் ஆண்கள். ஆனால் அதைப் புனிதமாகப் பேணிக் காப்பது பெண்கள் தான்.**

*க.நிம்மி — யாழ்ப்பாணம்.*

பெண்ணிற்கே பாசத்தின் புனிதம் புரியும்.இந்த ஆண்களுக்கெங்கே அது புரியப்போகிறது?

*சி.கவிதரன் — மட்டுவில்.*

காதல் என்பது காதலிக்கும் இருவருக்கும் புனிதமானது தான்! இதிலென்ன சந்தேகம் உமக்கு?

*எஸ்.ரமேஸ் —களுவாஞ்சிக்குடி.*

காதல் புனிதமானது என்று யார் சொன்னார்கள்? இந்தக் காலத்தில் யார் அதை புனிதமாகப் பேணுகிறார்கள்?

*துசிதா — மட்டுவில்.*

ஒருவரைக் காதலித்து, இன்னொருவரை கல்யாணம் செய்யும் கலிகாலம் இது. ஆதாம் – ஏவாளோடு காதலின் புனிதம் மரித்துவிட்டது என்று உமக்குத் தெரியாதா?



*க.உதயநாயகி, மருதங்கேணி*

**கேள்வி:— காலை நேரம்–மதிய நேரம்– இரவு நேரம் என்றெல்லாம் நேரங்கள் உண்டு. ஆனால் வானொலியில் பனடோல் நேரம் என்கிறார்கள். அது எந்த நேரத்தைக் குறிக்கும்?**

பதில்:— விளம்பரதாரர் காசுகொடுத்தால் பனடோலுக்கு மட்டுமல்ல பொலிடோலுக்கும் நேரம் வரும். காய்சல் வரும் நேரமெல்லாம் பனடோல் நேரம், வாழ்க்கை வெறுக்கும் நேரம் எல்லாம் பொலிடோல் நேரம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

*சூ.சர்வேசன், புளியம் பொக்கனை.*

**கேள்வி:— உங்களுக்கு எங்களூரில் சிலை வைக்கலாம் என்றிருக்கிறோம்.. சம்மதம் தருவீர்களா?**

பதில்:— சர்வேசா... சிலை வைப்பதால் ஒருவரை கௌரவப் படுத்துவதாக சிலர் நினைக்கிறார்கள். ஆனால், அவர்களை அவமானப்படுத்துவதற்காகத்தான் சிலை வைக்கப்படுவதாக நான் நினைக்கிறேன். நாட்டுக்கு நல்லது செய்த அவர்களின் மீது காக்காவும் – குருவியும் கக்காவுக்கு இருப்பது கௌரவமா என்ன? அப்படி ஒரு நிலை எனக்குத் தேவையில்லை ஐயா?

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.



ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை பெப்ரவரி 07 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

*புவிதா— திருநெல்வேலி கிழக்கு.*

**கேள்வி:— வெளிநாட்டு கலாசார மாற்றங்களால் எம்மவர்கள் மிகவும் மாறிக்கொண்டிருக்கிறார்கள் இது பற்றி உங்கள் கருத்து என்ன பித்தா?**

பதில்:— இக்கரைக்கு அக்கரைப் பச்சை இது எம்மவருக்கு என்று தான் புரியுமோ?

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே...நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள்பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜயந்தமல்லி மாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.

# மாட்டுக்குக் கிடைத்த மரியாதை

குஜராத் மாநிலத்தில் ஆமதாபாத்தில் இருந்து 70 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது லிம்புடி என்ற ஊர். இந்த ஊரைச் சேர்ந்தவர் திலுபாய் ராஜ்புத்.

வைர வியாபாரியான இவர் கடந்த சில நாட்களாக, தான் வளர்க்கும் பசு மாட்டின் பக்கத்தில் இரவு – பகலாக உட்கார்ந்து இருக்கிறார். அந்த மாடு சாணம் போடும் போதெல்லாம், திலுபாயின் முகத்தில், சந்தோஷம் பொங்கி வழிகிறது. துள்ளிக் குதித்து ஓடிச் சென்று அந்த சாணத்தை தரையில் விழும் முன்பே தன் இரண்டு கைகளாலும், பொக்கிஷத்தை தாங்குவது போல லாவகமாக ஏந்திக் கொள்கிறார்.

அதன் பிறகு, அந்த சாணத்தை அவரும், அவருடைய ஊழியர்களும் அங்குலம், அங்குலமாக ஆராய்ந்து பார்க்கிறார்கள். கையில் பூதக்கண்ணாடியை வைத்துக் கொண்டு எதையோ தேடுகிறார்கள்? சில நேரங்களில் அவர்கள் தேடுவது கிடைக்கிறது. சில நேரங்களில்ஏமாற்றம்தான் மிச்சம்.

வைர வியாபாரி வீட்டில் சாணத்தை ஆராய்ச்சி செய்வது அந்தப்பகுதி மக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவர்கள் ஆர்வத்தோடு சென்று விசாரித்தபோதுதான் ஆராய்ச்சியின் பின்னணியின் ரகசியம் தெரியவந்தது.

வியாபாரி திலுபாய், 1,722 சிறிய வைரக்கற்களை ஒரு சுருக்குப் பையில் வைத்து இருந்தார். மேசையில் இருந்த அந்த பை தற்செயலாக கீழே விழுந்து விட, வீட்டை பெருக்கிய வேலைக்காரி, குப்பையோடு குப்பையாக அந்தப் பையையும் வீட்டின் கொல்லைப்புறத்தில் வீசி விட்டாள்.

பறந்து சென்ற சுருக்குப்பை வைக்கோல் போரில் விழுந்து விட்டது. அப்போது அந்த பக்கமாக வந்த திலுபாய் வீட்டு பசு மாடு, வைக்கோலுடன் சேர்த்து, சுருக்குப்பையையும் விழுங்கி விட்டது. பசுவின் வாய்க்குள் பை நுழையும்போது, தற்செயலாக கொல்லைப் புறத்துக்கு வந்த திலுபாய் கண்டு விட்டார். ஐயோ என்று அலறியபடி பாய்ந்து சென்று மாட்டின் வாயை அமுக்கிப் பிடிப்பதற்குள், மாடு சுருக்குப்பையை வயிற்றுக்குள் தள்ளி ஏப்பம் விட்டு விட்டது. அதிர்ந்து போனார் திலுபாய். மாடு விழுங்கிய வைரக்கற்களின் மொத்த மதிப்பு 35 ஆயிரம் இந்திய ரூபாய்.

அடுத்தது என்ன செய்ய? மாட்டைக் கொன்று வைரத்தை உடனே வெளியே எடுத்து விடலாம். ஆனால், அந்த பாவச் செயலுக்கு திலுபாயின் மனம் இடம் கொடுக்கவில்லை. கால்நடை மருத்துவர்களை வரவழைத்து ஆலோசனைக் கேட்டார்.

மாட்டுக்கு திகட்ட, திகட்ட தீனி போட்டால் நீங்கள் அள்ள, அள்ள சாணம் போடும். அதை அலசிப் பார்த்து வைரக்கற்களை மீட்கலாம் என்று டாக்டர்கள் யோசனை தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து கடந்த சில நாட்களாக பசு மாட்டுக்கு இராஜ உபசாரம் நடந்து வருகிறது.

முதலில் கட்டுக் கட்டாக புற்களை தின்கிறது பசுமாடு. அதை சாப்பிட்டு முடிந்ததும், தானியங்களை விழுங்குகிறது. பின்னர் பழங்களை ஒரு கை பார்க்கிறது. மாட்டின் வயிறு நிரம்பியதும் அது எப்போது சாணம் போடும் என்று ஆவலோடு காத்து இருக்கிறார் திலுபாய். இரவு – பகலாக சாணத்தை சேகரித்து ஆராய்ந்ததில் இதுவரை 310 கற்கள் கிடைத்து விட்டன.

''இன்னும் ஒரு வாரத்தில் பசுவின் வயிற்றில் இருந்து அனைத்து வைர கற்களையும் மீட்டு விடுவேன்'' என்று நம்பிக்கையோடு சொல்கிறார் திலுபாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயோ! நான் என்ன செய்ய?




-மிருசுவில் தமிழ் தாசன்.

"பாலைக் கொஞ்சம் கொஞ்சமாய் ஊத்துங்கோ! விழுங்கிறார் போல கிடக்குது".

வாலைப்பிள்ளை பெரியாச்சியின் இரண்டாவது மகள் நல்லம், இப்படிக்கூறியதும் எனது மூன்றாவது மகள் சிவரஞ்சனி எனது வாய்க்குள் பால் வார்ப்பது புரிகின்றது. ஆனால் உண்மையில் அதனை விழுங்கிக் கொள்ள முடியவில்லை.

''இஞ்சார்! சொல்லிப் போட்டன். ஒருத்தரும் அழக்கூடாது. அழுதால் அந்தச் சீவன் அந்தரப்படும்.அழுகையை விட்டிட்டுத் தேவாரம் பாடுங்கோ''

வேலுப்பிள்ளை வாத்தியாரின் இந்தக் கடின உத்தரவைத் தொடர்ந்து, எனது பேரப்பிள்ளைகளுடன் அயல் வீட்டுப் பிள்ளைகளும் சேர்ந்து தப்பும் தவறுமாகக் கோஷ்டி கானமிசைகின்றனர். எனது மனைவி பாறுப்பிள்ளை எனது கால்மாட்டிலிருந்து அழுகையும், கதையுமாக 'இசையும் கதையும்' நடத்திக் கொண்டிருக்கின்றாள்.

''இஞ்சாருங்கோ! வாத்தியார்! உந்தச் சீவன் இலேசிலை போகாது. கொஞ்சக் காசு உரைச்சுப் பாருங்கோ. இல்லாட்டில் இப்பிடியே நாட்கணக்காய் கிடந்து இழுக்கப் போகுது. கெதியாய் உரைச்சுப் பாருங்கோ!'' இப்படி உற்சாகப் படுத்துகின்றான் தேத்தண்ணிக் கடை நல்லதம்பியின் மகன் சிவா.

''வடுவா! றாஸ்கோல்! என்ரை சீவனைக் கெதியாய் அனுப்புறத்துக்கு அவ்வளவு அவசரமோ உனக்கு! போக்கிரி நாயே! என்னட்டைக் காடனாய் வாங்கின ஆயிரம் ரூபாவையும் திரும்பத் தர வக்கில்லை. இப்ப கெதியாய் என்ரை சீவனைப் போக்காட்டப் போறியோ! இப்படிப் போக்காட்டிப் போட்டால் உனக்கு ஆய்க்கினையில்லை.தறுதலை நாயே! என்ரை பெண்டில் பிள்ளையளுக்கும் தெரியாமல் எல்லே பாலைக் கொட்டை மாதிரி ஆயிரம் ரூபாவைத் தூக்கித் தந்தனான் – வாற ஆத்திரத்துக்கு உதைஞ்சு விட்டன் எண்டால் பங்கை போய் விழுவாய் – வெறுவாய்க்கிலை கெட்டது.''

இப்படி நினைக்கத்தான் முடிந்ததேயொழிய அப்படிச் செய்து கொள்ள என்னுடல் நிலை இடம் கொடுக்கவில்லை. கண்கள் பார்வையிழந்து பஞ்சடைந்து போய்க் கொண்டிருக்கின்றன. கேட்கும் சக்தியும் உணரும் சக்தியும் மட்டும் இன்னமும் அவ்வளவுக்குக் குறைந்து போகவில்லை என்பது சற்று ஆறுதலைத் தந்து கொண்டிருக்கின்றது.

''போன கிழமை உவன் கடுக்கன் கந்தசாமியின்ரை மோன் பரமசாமி, கிடாய் அடிச்சு இறைச்சிப் பங்கு போட, அதிலை நானும் அங்கலாய்ப்புப்பட்டு ஆட்டிறைச்சி வாங்கித் திண்டு குளிராக்கிச் சன்னியாக்கிப் போட்டுது. உந்த அடை மழையுக்கை ஆரேன் ஆட்டிறைச்சியை வாங்கித்தின்னுவானே! கடவுளே ஆஸ்பத்திரியிலும் ஏலாதெண்டுட்டாங்கள்.எனியென்ன செய்யிறது.முந்தியெல்லாம் அந்த காவிச் சட்டை சாத்திரி சொன்னவன், எண்பது வயது தொடங்க என்ர ஆயுள் முடியுதெண்டு. பிள்ளையாரே இப்ப எனக்கு 80 ஆகிப் போச்சுதுதானே! என்ன நடக்கப் போகுதோ!

இப்படி நான் கலவரப்பட்டுக் கொண்டிருக்கும் போது தான் எனது வீட்டு நாய் வீமாவுடன் சேர்ந்து பக்கத்து வீட்டு நாய்களும் ஊளையிட்டுக் குரைத்துக் கொண்டிருந்தன–எனது வீட்டின் தெற்குப் புறமாகப் பார்த்து நாய்கள் ஒன்று சேர்ந்து ஊளையிட்டுக் கொண்டிருக்க! என்ன பயங்கரம்! ஐயோ! கடவுளே பென்னாம் பெரிய தொரு எருமைக் கடா! வாயில் வெண்ணுரை கக்கியபடி மெல்ல மெல்ல என்னை நோக்கிவர,அதிலை ஒரு முரட்டுத் தடியன்,கையில் ஏதோ ஒரு வித கயிற்றுடன் என்னைப் பார்த்து முறைத்தபடி வருகின்றான், ஐயோ இயமன் வந்துவிட்டான். இயமனல்ல தூதுவன்– யார் வந்தாலும் ஒன்று தானே! எனது உயிரை எடுக்கத் தான் வந்திருக்கிறான் பாவிப் பயல். கத்திக் குழறிக் கெஞ்சுகிறேன் – அவனோவிடுவதாயில்லை. வலுக்கட்டாயமாக எனது உயிரை பறித்து விடுகின்றான். மன்றாடுகின்றேன்– அவனோ மசிவதாய் இல்லை. வேறுவழி பருந்திடம் அகப்பட்டுக் கொண்ட கோழிக் குஞ்சின் கதையாகிவிட்டது என்கதை.

மிகப்பேரியதொரு மண்டபம். இயமதர்மராஜன் என்று எழுதப்பட்டிருந்த ஒருதனியறை. அதுதான் இயமனின் அலுவலகமாக இருக்க வேண்டும் என்பதை மனம் உறுதிப்படுத்திக் கொள்கின்றது.

சே உந்த இயமனை ஒருக்கா பார்க்க வேணும் எண்டு கனநாளாய் எனக்கொரு ஆசை. பாழ்பட்டுப் போன கதவு சாத்தியெல்லே கிடக்குது. பூட்டிப் போட்டு உள்ளுக்கு நிண்டு என்ன செய்யுறான் ? முந்தியல்லே பழையகாலத்து ஆக்கள் சொல்லுறவை, இயமலோகத்திலை சுடுதார் ஊத்துறது, கொதிக்கிற எண்ணெய்கை ஆட்களைத் தூக்கிபோட்டு சித்திரவதை செய்கிறது எண்டு கதவைப் பூட்டி போட்டு அந்த வேலைதான் நடக்குதோ? கடவுளே எனக்கும் உதுதான் நடக்கப் போகுது போலை. என்ரை ஐயோ பூவுலகத்திலை தான் எங்கடை சனங்களுக்கு, உங்காலை தெற்கு பகுதியிலை அவங்கள் செய்தாங்க எண்டு பாக்க, இஞ்சையும் கோதாரி விழுத்தப் போறாங்கள் போல தான் கிடக்குது.

பயத்தினால் குலை நடுங்கிக்கொண்டிருக்க இயமதர்மராஜனின் அறையைத் திறந்து கொண்டு ஒருவன் வருகின்றான்– அங்கே வேலை பார்ப்பவன் போல் தெரிகின்றது. எழுந்து நின்று அவனுக்கு மரியாதை பண்ணுகின்றேன் அதனை அவன் ஏற்றுக் கொண்டு சிரித்தான் போல் தெரிகின்றது– அவனின் வாய் நிறையக் கோரமான பற்கள் இருந்தன. எனவே அவன் சிரித்தானோ,இல்லை சினந்தானோ நன்றாகப் புரியவில்லை.

இன்னும் சிலர் என்னைப் போல் திகிலுடன் அந்தப்பச்சை வாங்கில் அமர்ந்து கொண்டனர்.

எட நாசமறுந்தது. என்ன நாத்தமடிக்குது. வயித்தைக் குமட்டிக் கொண்டு வருகுது, மூக்கைப் பொத்தலாமெண்டால் அவங்களுக்கு அது பிடிக்காது.நாத்தத்தை அடக்கவே ஏலாதம்மா – சீ! என்ன மணம் எங்கடை ஆறுமுகத்தாற்றை தேத்தண்ணீக் கடையுக்கை மணக்கிறமணம் மாதிரி கிடக்குது. அது சரி. என்னைப் பிடிச்சுக்கொண்டு வந்த இயமதூதுவனும் இதில் என்னை இருத்திப் போட்டு பெரியவரிட்டை போட்டு வாரனென்று போனான் பாவி அவனையும் காணவில்லை. என்ன நடக்கப் போகுதோ? சுடுதார் ஊத்துறாங்களோ, கொதி எண்ணையுக்கை போடப் போறாங்களோ, கடவுளே என்ரை அம்மாளாச்சி மனம் கலங்கிக் குழம்புகின்றது.

''உவங்கள் பிடிச்சுக் கொண்டு வந்தஆக்களை உள்ளுக்கு வைச்சு விசாரிக்கிறாங்கள் போலை! எங்கட பைல் (file) எல்லாம் ஆட்களைப் புறம்பாயும் பாவம் செய்த ஆட்களைப் புறம்பாயும் விடப்போறாங்க!''

எனக்குப் பக்கத்திலிருந்த ஒருவர்தான் எனது காதுக்குள் இப்படிக் கிசுகிசுக்கின்றார். ஏதோ முன் பின் இங்கே வந்து போன அனுபவசாலி பேசியது போன்று அவர் பேசுவது எனக்குச் சற்று எரிச்சலைத் தருகின்றது.

திடீரென்று எனக்கு ஒரு ஐடியா பிறக்கின்றது. என்ன வெண்டாலும் அந்த இயமதூதுவன் கொஞ்சம் நல்ல மனிசன் போலை கிடக்குது. சாடையாய் வளைச்சுப் பாப்பம். வாய்ச்சாலும் வாய்ச்சுப்போகும்.'' நான் இப்படி நினைத்துக் கொண்டிருக்க சொல்லி வைத்தது போல அந்த இயம தூதுவனும் என்னிடம் வந்து என்னை எழுந்து வரும்படி சைகை காட்ட அவன் பின்னால் தொடர்கின்றேன்.

''எட இவ்வளவு தூரம் இந்த இயம லோகத்துக்கு வந்தும் அந்த இயமனை ஒருக்காற் பாக்கேலாமல் கிடக்குதே! முந்தி சத்தியவான் சாவித்திரி நாடகத்திலை இயமனைப் பாத்தனான்தான்– ஆனால் உண்மையான இயமனிட்டை வந்தும் அவன் பாவியைப் பாக்கேலாமல் கிடக்குது.''

இதுவும் என்னுடைய கவலைகளில் ஒன்று

''பெரியவரிட்டை ஒருக்கால் போட்டு வாறன். இதிலை நில்லும்'' சொல்லிவிட்டுத் தூதுவன் போன கையுடன் ஒரு பைலுடன் வருகின்றான் – மீண்டும் ஒரு தனியறைக்குள் என்னை அழைத்துச் செல்கின்றான்.

''எங்கடை ஊரிலை பொலிஸ் ஸ்ரேசனிலை காணுற நிர்வாகம் மாதிரிக்கிடக்கு. ஓ.ஐ.சியிட்டை கதைச்சு அவற்றை உத்தரவோடை என்னை ஏதோ தனிய வைச்சு விசாரிக்கப் போறான்.என்ரை கேசை இவன் தான் 'டீல்' பண்ணப்போறான். சாடையாய் கதைச்சுப் பார்ப்போம். மார்க்கண்டேயனும் இவங்களுக்குள்ளாலை தப்பினவன் தானே. ஏன்! அந்தப் பெண்ணாய்ப் பிறந்த சாவித்திரி கூட புருஷனைத் திருப்பி எடுத்தவள் தானே! பாப்பம் எதுக்கும் கதைச்சு ஆ! இன்னுமொரு அஞ்சுவருஷம் என்னை விட்டிட்டாங்கள் எண்டால்....! கடவுளே! ஊர்வழிய குடுத்த காசெல்லாத்தையும் அறவாக்கலாம்– வெளிநாட்டுக்குப் போன பெடியன்ரை அலுவலுகள்! கலியாணப் பிரச்சினையள்! இப்படி எவ்வளவு சோலியள் அங்கை கிடக்குது. அதுக்கிடையிலை அந்தரப்பட்டு அவதிப்பட்டு என்னைக் கூட்டிக் கொண்டு வந்திட்டாங்கள்.

மனம் சிந்தனையில் மூழ்கின்றது.

''உமக்கு என்ன பேர்!'' கேட்டது இயம தூதுவன்.

''சின்னத்தம்பி...... சிவகுரு சின்னத்தம்பி'' இது நான்.

தூதுவன்எனது பைலைப் புரட்டிக் கொண்டிருக்க

''ஐயா! நான் உங்களோடை கொஞ்சம் கதைக்க விரும்புறன்.'' நான் சொல்லி முடிய முன்பு புருவங்களை உயர்த்தி என்னைப் பார்க்கின்றான் தூதுவன். பார்வையில் கடினம் தெரியவில்லை. சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கி எனது பிரச்சினைகள் அனைத்தையும் மள மளவென்று சொல்லி முடித்து விடுகின்றேன்.

மீண்டும் என்னைப் பார்க்கின்றான் இயமதூதுவன். எனக்குச் சற்றுப் பயமாக இருந்தாலும் அவனுடைய கனிவான பார்வையும் புன்னகையும் கொஞ்சம் துணிவை வரவழைக்கத் தவறவில்லை.

''உம்மை நினைக்கப் பாவமாகத்தான் இருக்கிறது. ஆனால், உம்முடைய பைலிலை ஒன்றும் செய்யேலாமல் கிடக்குதே!'' தூதுவன் மெல்லிய குரலில் கிசுகிசுக்கின்றான்.

எங்கடை ஊரிலை இலஞ்சம் வாங்கிற பொலிஸ்காரன் மாதிரிக் கொஞ்சம் இறங்கி வந்திட்டார்– விடக்கூடாது. என்னவெண்டாலும் சொல்லிக்கில்லி இதுக்குள்ளாலை தப்பிவிட வேணும். முந்தி எங்கடை ஊரிலை எல்லாரும் என்னை இயமனுக்கு இரும்பு குடுத்தவன் சின்னத்தம்பி எண்டு பகிடிக்குச் சொல்லுறவை. அதை உண்மையாக்க வேணும். சரிவந்திட்டால் ஊருக்குப் போன கையோடை முதல் வேலையாய் தேத்தண்ணிக் கடை நல்லாம்பியின்ரை பொடியனை உலக்கையாலை அடிச்சுக் கொல்ல வேணும்– ஆயிரம் ரூபா கடன்வாங்கிப் போட்டு.... போக்கணம் கெட்டது!''

புதுவித உற்சாகம் பிறக்கின்றது. ''அதுசரி சின்னத்தம்பியர் உமக்கு ஏதாவது சலுகை செய்யலாம் தான்– தற் செயலாய் பெரியவர் அறிஞ்சிட்டா ரெண் டால்...'' மூளையைக் கசக்கிக் கொண்டிருக்கின்றான் தூதுவன்.

''ஐயா! நீங்கள் என்ன, வேலைக்குப் புதிசு போலை! உயிரெடுக்கிற மனிசனுக்கு இவ்வளவு பயம் வரக்கூடாது. எங்கடை ஊரிலை விதானைமார் அவை, இவை எத்தினை சுத்து மாத்துக்கள் செய்யினம். சின்னத்தம்பி எண்டதை சின்னத்தம்பு எண்டு ஆக்கலாம். அல்லது வேறை ஒரு பேரைப் போடலாம். இதுக்கும் போய் யோசிச்சுக் கொண்டு நிக்கிறியளே!''

நான் விட்டுக் கொடுக்கவில்லை.

''அது போகட்டும்! நான் உம்மை இதுக்குள்ளாலை தப்பவிட்டால் நீர் எனக்கு என்ன சன்மானம் தருவீர்?'' தாழ்ந்த குரலில் கேட்கிறான் தூதுவன்.

''என்ன வேணுமெண்டாலும் பூவுலகத்திலை இருக்கிறதைக் கேளுங்கோ. தாறன்.''

''இஞ்சாரும்! பூவுலகத்தைப் பற்றி எனக்கும் நல்லாய்த் தெரியும். அங்கை எல்லாச் சாமானும் ஒரே கலப்படம்– ஆனால், என்னெண்டாலும் கலப்படமில்லாத சாமானாய் எனக் குத் தருவீரா! இது இலஞ்சமில்லை; அன் பளிப்பு'' தூதுவன் புன்னகையுடன் கூற,

''ஓ! ஓ! இப்பிடித்தான் எங்கடை ஆட்களும் அங்கை சொல்லி வாங்கிறவை. என்ரை நிவாரணத்தை வெட்டின விதானையாருக்கும், கப்பல் வாழைக்குலை அன்பளிப்புக் குடுத்துத்தான் பிறகு ஒரு மாதிரிச் சடைஞ்சனான்.''

மனம் உண்மையை மறு ஒலிபரப்புச் செய்கின்றது. ''ஐயா! நீங்கள் கேட்ட கலப்படமில்லாத சமான்களை நான் கட்டாயம் தருவன். என்னை நம்புங்கோ!

அதோட போறவீட்டுக்குப் புண்ணியம் கிடைக் கும். என்னை இனியும் மினைக்கடுத்தாமல் கெதியாய்க் கொண்டு போய் ஊரிலை விடுங்கோ. ஒரு பெரிய பேய் வேலை பாத்துப் போட்டன். என்ரை வீடு வளவை இளையவன் இராசரைக்கு சீவிய உருத்து எழுதிப் போட்டன். அவன் அவசரப்பட்டு, அந்தரப்பட்டு என்ரை பிரேதத்தைக் கொண்டு போய் எரிச்சும் போடுவான் – அவன் அப்பிடிப்பட்டவன் ஐயா! கெதியாய்ப்போவம் – வாருங்கோ'' அவசரப்படுத்துகின்றேன்.

'' சரி போவம். அங்கை போய் எனக்குத் தாற சாமானைத் தந்திட வேணும் – ஏமாத்திப் போடக்கூடாது.''

சொல்லி விட்டுப் படுத்திருந்த எருமைக் கடாவைத் தட்டி எழுப்ப அதுவும் சோம்பல் முறித்துக் கொண்டு பூவுலகத்துக்கு பயணம் கிளம்ப இருவரும் டபிள் போட்டுப் பயணத்தை ஆரம்பிக்கின்றோம். போகும் வழியில் எமது நாட்டுப் பிரச்சினைகள், பேச்சுவார்த்தைகள் குழம்பியமை, கூட்டணியினரின் கலாட்டாக்கள் இவை போன்ற சகல விஷயங்களையும் விலாவாரியாகப் பேசிப் பகிர்ந்து கொள்கின்றோம். முன்பு பூவுலகிலிருந்து வரும் போதிருந்த பயத்தில் இப்போது பாதிப்பயமில்லை. இருவரும் நல்ல நண்பர்களாகி விடுகின்றோம்.

''அதுசரி! எங்கடை பூவுலகிலை கலப்படமில்லாத சாமான் எண்டு பாவி மனிசன் உயிரை வாங்கிறான்– இப்ப என்னத்தைக் குடுக்கிறது! பாவம்! வந்த மனிசனை வெறுங்கையோடை அனுப்பக் கூடாது. அதுவும் நம்பி வந்த மனிசன். உங்கை கலப்படமில்லாமல் என்ன கிடக்கப் போகுது. நல்ல பச்சைத் தண்ணி கொஞ்சம் எடுத்து ஒரு சோடாப் போத்திலில் விட்டுக் கொடுத்து விடுவம். வேறை என்ன செய்யுறது. பேசின பேச்சுக்கு மாறாமல் என்னெண்டாலும் குடுத்தால் சரிதானே! இனிக் கோவிச்சும் ஒண்டும் செய்யமாட்டார். இன்னும் அஞ்சு வரிசத்துக்கு என்ரை உயிரைப் பறிக்கவே மாட்டார். அங்கை பைல் எல்லாத்திலும் வெட்டிக் கொத்தி மாத்திப் போட்டார். இனி என்னைத் திரும்பவும் பிடிச்சுக் கொண்டு போனாரெண்டால் உவர்தான் இயமனிட்டைப் பிடிபடுவார்.''

மனதில் இப்படி தைரியத்தை வளர்த்துக் கொள்கின்றேன்.

கிட்டத்தட்ட எனது ஊருக்கு வந்து விட்டோம்; அதுசரி! அங்கே என்ன சனக் கூட்டம் யாரோ செத்துப் போயிருக்க வேண்டும். பாவம் நான் அங்கேயிருந்து வந்து கொண்டிருக்க யாரோ ஒரு பாவம் இயமலோகம் போய்க் கொண்டிருக்கின்றது. பாவமாயிருந்தது.

''எட மூண்டு சோடி பறைமேளம்! என்ன அடி அடிக்கிறாங்கள் ! நல்ல 'சமர்'தான் நடக்குது. நானும் உதிலை நிண்டிருந்தால் பத்து இருபதை மேளகாறருக்குக் கொடுத்து நல்ல 'சமா'வைக்கலாம். அது சரி. நல்ல வடிவான தண்டிகை யெல்லாம் பிடிச்சிருக்கிறாங்கள். ஆரோ பணக்காரப் பார்ட்டி போலை கிடக்குது. ஆர் ஆருக்கோ உழைச்சுக் குடுத்திட்டுப் பாடையிலை போகுது. எட ஆர் அந்தக் கொள்ளிக்குடம் வச்சிருக்கிற பெடியன்! என்ரை மூத்தவன்! ஐயோ! அம்மாளாச்சி அப்ப என்ரை பிரேதம் தான் சுடலைக்குப் போகுது. இனியென்ன செய்யுறது. திரும்பி இயமலோகத்துக்கும் போக ஏலாது உடம்பையும் கொண்டுபோய் எரிக்கப் போறாங்கள்! கடவுளே!''

இப்படி நான் கலங்கிக் கொண்டிருக்க, ''சின்னத்தம்பியார் எனக்குப் பச்சைத்தண்ணீர் கொடுத்து ஏமாத்தலாம் எண்டு பாத்தீர்! இப்ப நீரே ஏமாந்திட்டீர். இனி உம்மடை சீவன் அங்கையுமில்லை இஞ்சயுமில்லை. அந்தரத்திலை நிண்டு அலையும்'' தூதுவன் சொல்லி விட்டு மறைய. ஐயோ! நான் என்ன செய்ய?'' அலறி அந்தரிக்கின்றேன்.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தாதுகோபங்களை கட்டிய மன்னர்கள்

| | | |
|---|---|---|
| தூபராம | — | தேவநம்பியதீன் |
| ரூவான்வெலிசாய | — | துட்டகைமுனு |
| அபயகிரி | — | வட்டகாமினி அபயன் (வலகம்பாகு) |
| இலங்காராம | — | அபயன் |
| ஜேதவனராம | — | மகாசேனன் |
| மிரிகவெத்தி | — | துட்டகைமுனு |
| கிரிவிகாரை | — | மகாபராக்கிரமபாகு |
| இரங்கொத்த விகாரை | — | நிசங்கமல்லன் |

தொகுப்பு சுடர்வாசகி.

## சில நாடுகளும் அவற்றின் தேசிய தினங்களும்

| | | |
|---|---|---|
| இலங்கை | — | மாசி 4 |
| இந்தியா | — | தை 26 |
| ஜப்பான் | — | மார்கழி 23 |
| பாகிஸ்தான் | — | பங்குனி 23 |
| நோர்வே | — | வைகாசி 17 |
| பிரான்ஸ் | — | ஆடி 14 |
| கனடா | — | ஆடி 01 |
| நெதர்லாந்து | — | சித்திரை 30 |
| சுவீடன் | — | ஆனி 06 |
| ஸ்பெயின் | — | ஐப்பசி 12 |

இராஜன் டக்ஷலா
தரம் 7
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

## முதன் முதலில்

முதன் முதலாக அஞ்சலட்டையை அறிமுகப்படுத்திய நாடு?
அவுஸ்திரேலியா

முதன் முதலில் எந்த நாட்டில் தொழில் புரட்சி தொடங்கியது?
அமெரிக்காவில்

ஐ.நா.சபைத் தலைவராக இருந்த முதல் பெண் மணி யார்?
விஜயலட்சுமி பண்டிட்

உலகின் முதல் பெண் விமானி யார்?
யேல்லிங்கம்

இந்தியாவின் முதல் பதிரிகை எது?
அகிரா குருசேவா

முதல் முதலாக விண் வெளியில் பறந்த மனிதர் யார்?
யூரிக்ககாரின்

ஆங்கில அகராதியை முதலில் தொகுத்தவர் யார்?
சாமுவேல் ஜோன்சன்

முதன் முதலாய் ஐ.நா.நீர் வழங்கல் மா நாடு எப்போது நடைபெற்றது?
1977

இலங்கையில் முதன் முதலில் ரயில் ஓட ஆரம்பித்த ஆண்டு எது?
1864 ஆம் ஆண்டு

கே.சுதர்சன்
சிலா/சென் பேர்னாடிற் த.ம.வி. சிலாபம்.

## உங்களுக்குத் தெரியுமா

மிக குளிர்ச்சியான கோள் புளுட்டோ
மிக லேசான கோள் புதன்
மிகக் கனமான கோள் வியாழன்
மிக உஷ்ணமான கோள் சுக்கிரன்
காந்தியின் மனைவியின் பெயர் கஸ்தூரி காந்தி
கோயில்கள் மிக அதிகம் கொண்ட நாடு காஞ்சிபுரம்
இந்தியாவின் மிகப் பெரிய வற்றாத ஆறு கங்கை ஆறு
கடற் குதிரை 30 செ.மீற்றர் வரை வளரும்
கடற் குதிரையில் 50 வகையானவை வாழுகின்றன.
காஞ்சிபுரத்தில் 125 ஆலயங்கள் உள்ளன.

ப.ரஜீவனா
தரம் 8
வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம்.

## சிறார்களின் கைவண்ணம்



வ.சுமதி
தரம் 09
யா/மெதடிஸ்த் பெண்கள் உயர்தரப் பாடசாலை




ம.ரேகிலன்
தரம் 10
கிளி/பூநகரி மகா வித்தியாலயம்



ப.சுரேகலா
தரம் 10
யா/நல்லூர் இ.த.பெண்கள் பாடசாலை



எஸ். சகிலா
செட்டிகுளம் ம.வித்.
வவுனியா.



இ.ஜெயந்தன்
தரம் 11
கிளி/ மத்திய கல்லூரி

## எறும்பும் பட்டுப் பூச்சியும்

ஓர் எறும்பு உணவு தேடிப் போய்க் கொண்டிருந்தது. வழியில் ஒரு பட்டுப்பூச்சிப் புழு கூட்டுக்குள்ளிருந்து வெளிவரும் பருவத்தில் வாலை ஆட்டிக் கொண்டிருந்தது. எறும்பு அதைப் பார்த்து பரிதாபம் கொண்டு, பாவம் நான் எங்கு வேண்டுமானாலும் ஓடி ஆடித் திரிகிறேன். எவ்வளவுதூரம் வேண்டுமானாலும் ஊர்கின்றேன் உன்னால் இருந்த இடத்தை விட்டு நகர முடியவில்லை. உன் கதி இப்படி இருகிறதே! என்று சொல்லியது. இதைக் கேட்ட புழு ஒன்றும் பதில் சொல்லவில்லை. சில தினங்கள் கழித்து அதே வழியாக எறும்பு திரும்பவும் வந்தது.



பட்டுப்பூச்சியின் கூடுமட்டும் கிடந்தது. உள்ளே ஒன்றுமில்லை. புழுவின் கதி என்னவாயிற்று என்று எறும்பு திகைத்து நின்றது அப் பொழுது அழகான இறக்கையோடு பட்டுப்பூச்சி அங்கே தோன்றியது.

அது எறும்பைப் பார்த்து ''ஏ ஏறும்பே! என்னைப் பார்த்து முன்னர் பரிதாபம் கொண்டாய். சரி இப்பொழுது நான் பறக்கின்ற உயரத்திற்கு ஏறி வா பார்க்கலாம் என்றுசொல்லி கேலி செய்தது. அதன் உயரத்தை எட்டிப் பிடிக்க மடியாமல் எறும்பு திணறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# தமிழரின் வீர வரலாற்றை பறைசாற்றும் ஜல்லிக்கட்டு



பொங்கல் பண்டிகையையொட்டி தமிழ் நாட்டில் தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது. ஜல்லிக்கட்டு என்றாலேயே மதுரை மாவட்டம் அலங்கா நல்லூர்தான் பிரசித்திபெற்ற இடம். வழக்கம் போல் இந்த ஆண்டும்பொங்கல்தினத்தையொட்டி ஜல்லிக்கட்டு கோலாகலமாக நடைபெற்றது. இதனைத் கண்டுகளிப்பதற்காக தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் இங்கு வந்து குவிந்தனர். அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, நோர்வே, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகளும் ஜல்லிக்கட்டைக் கண்டுகளிக்க வந்திருந்தனர். மாலைகளை கழுத்தில் அணிந்தபடி அவர்கள் உட்கார்ந்திருந்தனர்.

தமிழகத்தின் பல பகுதிகளில்இருந்தும்காளைகளை அலங்கரித்துக் கொண்டு வந்திருந்தனர். 400 க்கு மேற்பட்ட காளைகள் வந்திருந்தன. கூட்டம் களைகட்டி இருந்தது. திடலில்காளைகளைப் பிடிக்கும் வீரர்கள் 100க்கும் அதிகமானோர் கூடி நின்றனர். முதலில் கோயில் மாடு ஒன்று அவிழ்த்து விடப்பட்டது. கோயில் மாடு என்பதால் எவரும் அதனைப் பிடிக்க முயலவில்லை. இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஜல்லிக்கட்டு மாடாக அவிழ்த்து விடப்பட்டது. மாட்டை அவிழ்த்து விடுவதற்கு முன்னர் அந்த மாட்டைப் பிடிப்பவர்களுக்கான பணம் மற்றும் பரிசுகள் அறிவிக்கப்பட்டன. முதலில் அவிழ்த்து விடப்பட்ட காளை மாடுகள் எவருக்கும் அகப்படாமல் துள்ளிக்குதித்து தப்பிச் சென்றுவிட்டன. தனது காளையை பிடிப்போருக்கு 1001 ரூபா தருவதாக ஒருவர் அறிவித்தார். இதுவே மிகவும் கூடிய பரிசுத் தொகை. அந்தக் காளையை அவிழ்த்துவிட்டவுடன் அது கூட்டத்தினரிடையே புகுந்து பாய்ந்து சென்றுவிட்டது. ஆனாலும், சில காளைகளை குறிப்பிட்ட எல்லைக் கோட்டுக்குள் பிடித்து அடக்கி பரிசுகளைத் தட்டிக் கொண்டார்கள். என்றாலும், சில முரட்டுக்காளைகள் வீரர்களை தூக்கி வீசின.

காளைகளால் தாக்குண்ட வீரர்களில் இருவர் கொல்லப்பட்டனர். 230 பேர் வரை படுகாயம் அடைந்தனர்.

திருச்சியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டின் போது திருச்சியின்பல்வேறு பகுதிகளில் இருந்தும் 200க்கு மேற்பட்ட காளைகள் கொண்டு வரப்பட்டன. திருச்சியிலும் காளைகளை அடக்கத் திரண்டவீரர்களில் ஒருவர் காளை மாடு ஒன்றின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார். திருப்பத்தூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டில் சீறிப் பாய்ந்த காளைகள் குத்தியதால் 90 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்களில் 3 பேர் குடல் வெளியேறிய நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முதலில் காளைகள் தாரை தப்பட்டைகள் முழக்கி அங்குள்ள அம்மன் கோயிலுக்குக் கொண்டு வரப்பட்டன. பின்பு அங்கிருந்து 50 ஏக்கர் கொண்ட மைதானம் ஒன்றுக்கு கொண்டு வரப்பட்டு அவற்றின் கொம்புகளில் பட்டுத் துணி சுற்றப்பட்டது. பின்பு அவை ஒவ்வொன்றாக மைதானத்துக்குள் அவிழ்த்து விடப்பட்ட. மைதானத்தில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கானோர் காளைகளை விரட்டிச் சென்றனர். சிலர் துணிச்சலுடன் காளைகளின் திமிலைப்பிடித்துத் தொங்கியபடி கொம்புகளில் சுற்றப்பட்டிருந்த துணிகளை அவிழ்த்து பாராட்டுப்பெற்றனர். அப்பொழுதே மூவர் படுகாயம் அடைந்து அவர்களது குடல் வெளியேறியது.

தமிழரின் வீரத்தைப் பறை சாற்றும் பரம்பரை விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழ் நாட்டில் வருடா வருடம் பிரபல்யம் பெற்று வருகிறது.



## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |



# ராசி பலன்

**01-02-2004 முதல் 07-02-2004 வரை 'ராசி பலன்'**

**பொ. சந்திரன்**

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு செவ்வாய் | | சனி |
| சுக்கிரன் | | | |
| புதன் சூரியன் | | | குரு |
| | | கேது | |

தை 18 முதல் தை 24 வரை

சுக்கிரன் கும்பம் முதல் மீனம் வரை சந்திரன் இடபம் முதல் சிங்கம் வரை.

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

செவ்வாய் தன் வீட்டில் ஆட்சியாக இருப்பது சிறப்பு. எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. ராகு, கேதுவின் தொடர்பு மன அமைதியைக் கெடுக்கலாம். (2,7) உரிய சுக்கிரன் 11இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. கையில் பணம் இருக்கும். நாலாம் வீட்டை மூன்று கிரகங்கள் பார்ப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். தொழிலுக்குரிய சனி மூன்றில் இருப்பதால் மேலும் 10இல் சூரியன்ள புதன் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். மேலும் குரு 5இல் இருப்பதும் 10இல் சூரியன், புதன் இருப்பது மிகநல்ல பலனைச் செய்யும். செவ்வாய் கேதுவின் நட்சத்திரமான அச்சுவினியம் செய்யபடுவது நல்லதல்ல.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருக சீரிடம் 1,2.**

இராசிக்குரிய சுக்கிரன் 10இல் இருப்பது மிகவும் நல்லது. அத்துடன் குருவின் நட்சத்திரமான பூரட்டாதியில் சஞ்சரிப்பது நல்லது. எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோகியம் உண்டு. (2,5) உரிய புதன் 9இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் சிறப்படைவர். நாலுக்குரிய சூரியன் 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7,12) உரிய செவ்வாய் 12 இல் ஆட்சியாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பதில் அமைதி நிலவாது. பத்துக்குரிய சனி இரண்டில் இருப்பதாலும். 10இல் சுக்கிரன் இருப்பதால் தொழில் துறை முன்னேறும். (9,10) பத்தாம் வீடுகள் பலம் பெறுவதால் அதிஸ்டம் உண்டு. நல்ல பலனை எதிர்பார்க்கலாம். தெய்வீக அருள் கிட்டும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 8இல் இருப்பது சிறப்பில்லை. மேலும் சூரிய சந்திர நட்சத்திரமான உத்தராட திருவோணம் ஆகிய நட்சத்திரத்தில் சஞ்சரிப்பது நல்லது. கல்வியில் ஆர்வம் இருக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சிகள் தாமதமாகலாம். இரண்டாம் இடம் சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். 4க்கு உரிய புதர் 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,10) உரிய குரு 3இல் மறைவதால் திருமணவாய்ப்பு தாமதமாகும். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில்துறையில் பின்னடைவு வரலாம். இராசியில் சனி இருப்பது அதாவது. 7 1/2 சனியில் நடுக்கூறு அவதானம் வேண்டும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

இராசிநாதன் சந்திரன் இடபம் முதல் சிங்கம் வரை சஞ்சரிப்பது அதாவது தன் வீட்டைக் கடந்து செல்வது நல்ல அம்சம். எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. இரண்டில் குரு இருப்பதும் இரண்டுக்குரிய சூரியன் 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். 4க்குரிய சுக்கிரன் 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை எற்படுத்தலாம். 7க்குரிய சனி 12இல் இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். இருப்பினும் இரண்டில் குரு இருப்பதால் திருமணம் அமையலாம். 10இல் செவ்வாய் ஆட்சியில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். செவ்வாய், சுக்கிரன், புதன், சூரியன் ஆகிய கிரகங்கள் பார்ப்பது விசேஷம்.

**சிங்கம் மகம், பூரம், உத்தரம் 1.**

இராசிநாதன் சூரியன் 6இல் இருப்பது நல்லதல்ல. மேலும் சூரியன் சந்திரன், செவ்வாய் ஆகிய நட்சத்திரங்கள் செயற்படுவது ( சஞ்சரிப்பது) உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சிகள் தாமதமாகலாம். மேலும் இராசியில் குரு இருப்பது மன அமைதி பாதிக்கலாம் (4,9) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் பெற்றோர் நலம். வீடு, வாகனம் லாபம் தரும். பூர்வீக சொத்து சேரும். 10க்குரிய சுக்கிரன் 7இல் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். 7க்குரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். மகிழ்ச்சி இருக்கும். இராசியை சனி பார்ப்பது கூடாது.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 5இல் இருப்பது விசேஷம். புதன், சூரியன், சந்திரன் ஆகிய கிரகங்களின் நட்சத்திரங்களான உத்தராடம், திருவோணம் நட்சத்திரங்களில் சஞ்சரிப்பதால் உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். தொழில்துறை முன்னேறும். (4,7) உரிய குரு 12இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். சனி 7ஆம் வீட்டைப் பார்ப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. இரண்டுக்குரிய சுக்கிரன் 6இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. குரு, சுக்கிரன் ஆகிய கிரகங்கள் மறைவது பல நல்ல பலன் தடைப்பட வாய்ப்புள்ளது. சூரியன், புதன் 5இல் இணைவது நல்ல பலனைக் கொடுக்கலாம்

**துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**

இராசிக்குரிய சுக்கிரன் 5இல் இருப்பது விசேஷம். மேலும் பூரட்டாதி, உத்தரட்டாதி ஆகிய குரு, சனி ஆகிய நட்சத்திரங்களில் சஞ்சரிப்பதால் உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். ஆனால், ராகு, கேதுக்களின் தொடர்பு அவ்வளவு நல்ல தல்ல (2,7) உரிய செவ்வாய் 7இல் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. 7இல் ராகு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. 4க்குரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். நான்கு கிரகங்கள் 10இல் வீட்டைப் பார்ப்பதால் பக்க உதவிகள் கிடைக்கும்.

**விருச்சிகம் விசாகம் 4, அனுஷம், கேட்டை.**

இராசிக்குரிய செவ்வாய் தனது மறவீட்டில் ஆட்சியாக இருப்பது விசேஷம். மேலும் கேதுவில் நட்சத்திரமான அச்சுவினியில் சஞ்சரிப்பதால். மேலும் ராகுவோடு. சனி இருப்பதால். எடுத்த முயற்சிகள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். ஆனால், பிரயாண வாய்ப்பு உண்டு. (2,7) உரிய சுக்கிரன் 4இல் இருப்பதால். கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. ஆனால், 7இல் கேது இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது 4க்குரிய சனி 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 10க்குரிய சூரியன் 3இல் இருந்தாலும் 10இல் குரு இருப்பதலாலும் தொழில்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும்.

**தனு மூலம், பூராடம்,உத்தராடம்1**

(1,4) உரிய குரு 9இல் இருப்பது மிகவும் நல்லது. எடுத்த முயற்சிகள் நல்லமுறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாணவாய்ப்பு உண்டு. ஆலய வழிபாடு அமையும் பெரியோரைச் சந்திக்கலாம். ஆனால், குரு வக்கிரகதியில் சஞ்சரிப்பது நல்லதல்ல. மேலும் சுக்கிரனின் நட்சத்திரமான பூரத்தில் சஞ்சாரம் செய்வது நல்லது. (2,3) உரிய சனி 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். 4க்குரியவர் 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7,10) உரியவர் இரண்டில் சூரியனும் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. 7இல் சனி இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. ஆனால், தொழிற்துறை முன்னேறும். அரச உதவி கிடைக்கும். குருவை சனி பார்ப்பது கூடாது.

**மகரம் உத்தராடம் 2,3,4. திருவோணம்,அவிட்டம்1,2.**

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது நல்லது. ஆனால்,சனி வக்கிரகதியில் செயல்படுவது நல்லதல்ல. மேலும் திருவாதிரை நட்சத்திரத்தில் சஞ்சரிப்பது அது ராகுவின் நட்சத்திரத்தில் அதுவும் மத்திமபலன்தான். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சிகள் தாமதமாகலாம். சூரியன் புதன் இராசியில் இருப்பது புதுத் தென்பைத் தரும். கல்வியில் ஆர்வம் இருக்கும். 4க்குரியு செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 7ஆம் இடம் சுத்தமாக இருப்பது நல்லது குரு 8இல் இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய சுக்கிரன் இரண்டில் இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்காது.

**கும்பம் அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

(1,12)உரிய சனி 5இல் இருப்பது நல்லதல்ல மேலும் சனி வக்கிரகதியில் செயல்படுவதும் கூடாது. ராகுவின் நட்சத்திரமான திருவாதிரையில் செயல்படுவதும் மத்திம பலன்தான். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சிகள் தாமதமாகலாம். இரண்டுக்குரிய குரு 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,9) உரிய சந்திரன் இராசியில் இருப்பதால் பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். 7க்குரிய சூரியன் 12இல் இருந்தாலும் 7இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய செவ்வாய் 3இல் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குரு, சுக்கிரன் நல்ல நிலையில் இருப்பது மிகவும் நல்லது.

**மீனம் பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

(1,10) உரிய குரு 6 இல் இருப்பது நல்லதல்ல. மேலும் வக்கிரகதியில் செயல்படுவதும் கூடாது. ஆனால், சுக்கிரனின் நட்சத்திரமான பூரத்தில் சஞ்சரிப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். இரண்டாம் வீடு ஆட்சி வீடாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,7) உரிய புதன் 11இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். குரு மறைவதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். 10க்குரிய குரு மறைவதால் தொழில்துறை பாதிக்கலாம். சனி முக்கிய வீடுகளையும் குருவையும்பார்ப்பது நல்லதல்ல. இவ்வாரம் கிரக அமைப்பு சாதகமாக இல்லை. அவதானம் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் உலகைக் உலுக்கிய முன்னாள் வீரரின் மரணம்!

அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் டேவிட் ஹூக்ஸ், மோதல் சம்பவமொன்றில் படு மோசமாகத் தாக்கப்பட்ட பின்னர் மரணமான செய்தி கிரிக்கெட் உலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கோமா நிலையில் வைத்தியாசாலையில் சேர்க்கப்பட்ட ஹூக்ஸ், அங்கு மரணமானார்.

ஜனவரி 19 ஆம் திகதி மெல்போர்ன் நகரில் ஹோட்டலொன்றுக்கு வெளியில் நடந்த மோதல் சம்பவமொன்றில் டேவிட் ஹூக்ஸ் தாக்கப்பட்டார்.

48 வயதான ஹூக்ஸ், விக்டோரியா மாநில அணியின் பயிற்றுநராக பணியாற்றி வந்தார். ஜனவரி 19 ஆம் திகதி நடைபெற்ற தென் அவுஸ்திரேலிய அணியுடனான ஒரு நாள் போட்டியில் விக்டோரியா மாநில அணி வெற்றியீட்டியது. அதன் பின்னர், வீரர்கள் சகிதம் ஹூக்ஸ் மது அருந்தினார் எனத் தெரி விக்கப்படுகிறது.

இரு குழுக்களுக்கிடையில் நடந்த மோதலின் பின்னர் ஹூக்ஸ் மயக்கமடைந்து காணப்பட்டார் எனவும், அவரின் தலை தரையில் பலமாக அடிபட்டது எனவும் மோதல் சம்பவத்தை நேரில் பார்த்த சிலர் கூறியுள்ளனர்.

ஜனவரி 19 ஆம்திகதி வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட ஹூக்ஸ் அடுத்தநாள் காலை மரணமடைந்தார்.


இடது கை துடுப்பாட்ட வீரரான டேவிட் ஹூக்ஸ், 1977 முதல் 1986 ஆம் ஆண்டு வரை அவுஸ்திரேலியாவுக்காக 23 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1,306 ஓட்டங்களைப் பெற்றவர். ஆகக் கூடுதலாக ஆட்டமிழக்காமல் 143 ஓட்டங்களைப் பெற்ற அவரின் துடுப்பாட்டச் சராசரி 34. 36 ஆகும்.

1977 இல் தனது 21 ஆவது வயதில், மெல்போர்னில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார் ஹூக்ஸ். அப்போட்டியில் ரொனி கிறேக்கின் பந்து வீச்சில் தொடர்ச்சியாக 5 பௌண்டரிகளை அடித்து அவர் அரைச் சதத்தைப்பெற்றமை குறிப்பிடத் தக்கது.

அவுஸ்திரேலிய மாநில அணிகக்கிடையிலான போட்டிகளில் ஆகக்கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவர்களில் ஹூக்ஸ், 5 ஆவது இடம் வகிக்கிறார். தென் அவுஸ் திரே லியா சார்பில் 120 போட்டிகளில் முச்சதம் உட்பட 9,364 ஓட்டங்களைப் பெற்றுள்ளார் அவர்.

10 வருடங்களுக்கு முன்னர் அவர் முதல் தரப்போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். அண்மைக்காலத்தில் தொலைக்காட்சி, வானொலியில் வர்ணனையாளராகப் பணியாற்ற ஆரம்பித்த ஹூக்ஸ், கார சாரமான விமர்சனங்களை வெளியிட்டு வந்தார். மனதில் பட்டதை உடனே வெளிப்படுத்திவிடுபவர் அவர்.

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுலா மேற்கொண்ட இந்திய கிரிக்கெட் அணி விக்டோரியா மாநில அணியுடன் 3 நாள் போட்டியொன்றில்மோதியது. "அப்



ஹூக்ஸ்

போட்டிக்கு முன்னர் இரு தரப்பினரும் தலா 70 ஓவர்கள் மாத்திரம் துடுப்பெடுத்தாடுவது என இணக்கம் காணப்பட்டது. எ ஆனால், நாணயச்சுழற்சியில் வென்ற சௌரவ் கங்குலி வாக்குறுதியை மீறிவிட்டார்'' என விக்டோரிய அணியின் பயிற்றுநராக இருந்த டேவிட் ஹூக்ஸ் கூறியமைகுறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், ஹூக்ஸின் மரணம் கிரிக்கெட் உலகெங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

தென்னாபிரிக்க - மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான 4 ஆவது டெஸ்ட்டின் இறுதிநாளின்போது இரு அணிவீரர்களும் ஹூக்ஸுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் வீ.பி.கிண்ணக் கிரிக்கெட் தொடரில் 20 ஆம்திகதி நடைபெற்ற இந்திய-ஸிம்பாப்வே போட்டி, 22 ஆம் திகதி நடைபெற்ற ஆஸி. -இந்திய போட்டி ஆகியனவற்றிலும் வீரர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.

அண்மையில் ஓய்வு பெற்ற அவுஸ்திரேலிய டெஸ்ட் அணித்தலைவர் ஸ்ரீவ்வோ, ஹூக்ஸ் மீதான தாக்குதல் தம்மை அதிர்ச்சியடையச் செய்துள்ளது என்று கூறினார்.

"இச்செய்தியைக் கேள்விபட்டவுடன் உடல்ரீதியாக சுகயீன முற்றிருப்பதைப் போல் உணர்ந்தேன்'' என்றார் ஸ்ரீவ்வோ. ஹூக்ஸின் கடைசி டெஸ்ட் போட்டியே ஸ்ரீவ்வோவின் முத லாவது டெஸ்ட் போட்டியாக அமைந்தமை குறிப் பிடத்தக்கது.

முன்னாள் அணித்தலைவர் அலன் போர்டர், தற்போதைய அணித்தலைவர் ரிக்கி பொன்ரிங் ஆகியோரும் மேற்படி சம்பவம் தொடர்பாக அதிர்ச்சித் தெரிவித்துள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற இந்தியாவுடனான போட்டியில் அவுஸ்திரேலியாவின் வெற்றி ஓட்டத்தைப் பெற்ற பிரெட்லீ, அந்த ஓட்டத்தை ஹூக்ஸுக்கு சமர்ப்பணம் செய்தார்.

இதேவேளை, டேவிட் ஹூக்ஸின் மரணம் தொடர்பாக, மதுபானச் சாலை ஊழியர் ஒருவர் மீது கொலைக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

21 வயதான, மிசேவிக் என்னும் இந்த நபரின் தாக்குதலின் காரணமாகவே ஹூக்ஸ் கோமா நிலைக்குத் தள்ளப்பட்டு மரணமானார் எனத் தெரி விக்கப்படுகிறது.

மிசேவிக் முன்னாள் அமெக்சூர் குத்துச் சண் டை வீரர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மிசேவிக் குற்றமற்றவர் என அவரின் சட்டத்தரணிகள் கூறுகின்றனர்.

"இந்த விடயத்திற்கு ஊடகங்களில் பெருமளவு முக்கியத்துவம் அளிக்கப்படுவதை யடுத்து மிசேவிக்கிற்கு ஈ-மெயில் மூலம் ஏராளமான மிரட்டல்கள் வந்துள்ளன. கொலை அச்சுறுத்தல்களும் விடுக்கப் பட்டுள்ளன. அவரின் வீட்டைச் சுற்றி 12 மணித்தியாலங்கள் செய்தியாளர்கள் திரிகின்றனர். மிசேவிக்கின் குடும்பத்தினர் அவர்களின் வீட்டிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது.

-இவ்வாறு மிசேவிக்கின் சட்டத்தரணி ஒருவர் கூறியுள்ளார்.

48 வயதான ஹூக்ஸின் மரணம் தொடர்பாக உலகெங்குமுள்ள கிரிக்கெட் நட்சத்திரங்களும் அபிமானிகளும் அனுதாபம் தெரிவித்துள்ளனர். அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவார்ட்டும் இவர்களில் அடங்குவார்.

ஆனால், ஹூக்ஸ் மீதான பொது மக்களின் அதிக ஆர்வம்,இந்த வழக்கை முறையற்ற விதத்தில் பாதித்து விடக் கூடாது'' - என இவ் வழக்கை விசாரிக்கும் நீதிவான் தெரிவித்துள்ளார்.

## திராவிட் வேண்டுமென்றே பந்தை சேதமாக்கினார்! மத்தியஸ்தர் கிளைவ் லொயிட் குற்றச்சாட்டு!!

"இந்திய கிரிக்கெட் வீரர் ராகுல் திராவிட் வேண்டுமென்றே பந்தை சேதப்படுத்த முயன்றார்'' என போட்டி மத்தியஸ்தர் கிளைவ் லொயிட் தெரிவித்துள்ளார்.

வி.பீ.கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஜனவரி 18 ஆம் திகதி நடைபெற்ற ஸிம்பாப்வேயுடனான ஒரு நாள் போட்டியின் போது திராவிட் எதையோ பந்தில் பூசிக் கொண்டிருப்பதை வீடியோ தொலைக்காட்சி படங்கள் மூலம் கண்டறியப்பட்டது.

இதை, போட்டியின் மத்தியஸ்தர் கிளைவ் லொய்ட், மூன்றாவது நடுவர் பீட்டர் பார்க் ஆகியோர் வீடியோ பதிவுகள் மூலம் பார்த்து உறுதி செய்தனர்.




பின்னர் போட்டி முடிந்ததும் திராவிட், பயிற்றுநர் ஜோன் ரைட், முகாமையாளர் சிவ்லால் யாதவ் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இதன் முடிவில் ஐ.சி.சி. விதி 2.10 இன் கீழ் திராவிட் மீது புகார் பதிவு செய்யப்பட்டது. விதி 42.3 பிரிவின்படி, பந்தை செயற்கையான பொருட்களால் சேதப்படுத்தக் கூடாது. இவ்விதியை மீறியமையால் திராவிட்டுக்கு போட்டிக்கான சம்பளத்தில் இருந்து 50 சதவீதத்தை அபராதமாக விதிப்பதாக மத்தியஸ்தர் கிளைவ் லொய்ட் அறிவித்தார்.

ஆனால், திராவிட் தீய நோக்கத்துடன் எதை யும் செய்யவில்லை என இந்திய அணியின் பயிற்றுநர் ஜோன் ரைட், அணித் தலைவர் சௌரவ் கங்குலி ஆகியோர் கூறியுள்ளனர்.

" பந்தில் எச்சில் பூசும்போது எச்சிலுடன் கலந்திருந்த இனிப்புப் பதார்த்தை அகற்றவே திராவிட் முயன்றார் என இந்திய அணியின் பயிற்றுநர் ஜோன்ரைட் கூறியுள்ளார்.

'இதுவொரு விபத்து' என இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி கூறினார்.

ஆனால், இக்கருத்தை மத்தியஸ்தர் கிளைவ் லொயிட் மறுத்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில்:-

"திராவிட் இனிப்புப் பதார்த்தமொன்றை வேண்டுமென்றே பந்தில் பூசுவதை தொலைக் காட்சிப் படங்கள் தெளிவுபடுத்தின. நான் அப்படங்களைப் பார்த்தேன். இது தீர்க்கமான முடிவு.

இது ஒரு விபத்து என சிலர் கூறலாம். ஆனால், பந்தில் ஏதோ பூசப்படு வதை வீடியோ பதிவுகள் காட்டுகின்றன. இப்படிப் பூசுவதற்கு விதிகளில் இடமில்லை.

திராவிட்டுக்கு 100 சத வீத அபராதம் விதித்திருக்கலாம். டெஸ்ட் போட்டியொன்றில் அல்லது ஒரு நாள் போட்டிகள் இரண்டில் விளையாடத் தடை விதித்திருக்கலாம். ஆனால், நாம் அவரின் கடந்த கால நடத்தைகளைக் கருத் தில் கொண்டோம்'' -இவ்வாறு கிளைவ் லொயிட் கூறினார்.

தொலைக்காட்சி வர்ணனையாளரான ரொனி கிறேக் கருத்து தெரிவிக்கையில்,

" வாயிலுள்ள இனிப்புப் பதார்த்தை எவரும் வெளியில் எடுத்து, பந்தின் ஒரு பக் கம் முழுவதும் தவறுதலாகப் பூசுவதில்லை'' -என்றார்.

அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்ரிங்கிடம் இது தொடர்பாக கேட்ட போது, " இது ஐ.சி.சி .இற்குரிய விவகாரம். போட்டியின் மத்தியஸ்தரே இதைக் கையாள வேண்டும்'' - என்று பதிலளித்தார்.

## விளையாட்டுச் செய்திகள்

-ஆர்.சேதுராமன்

## இம்ரான் - கபில் சாம்பியன் கிண்ணம்: இந்தியாவின் சம்மதத்திற்காக பாக். காத்திருப்பு

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கான சாம்பியன் கிண்ணத்திற்கு 'இம்ரான் - கபில் கிண்ணம்' எனப் பெயரிடுவது குறித்து இந்திய கிரிக்கெட் சபையின் சம்மதத்தை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எதிர்பார்த்துள்ளது.

இவ்விரு நாடுகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் சாம்பியன் கிண்ணத்திற்கு கபில் - இம்ரான் கிண்ணம் எனப் பெயரிட வேண்டுமென இந்தியாவின் புகழ் பெற்ற கிரிக்கெட் பயிற்றுநர்களில் ஒருவரான தேஷ் பிரேம், இந்திய கிரிக்கெட் சபைக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

இக்கருத்துக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் ஆதரவு வழங்கியுள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் கூறுகையில்,

"இது மிகச் சிறந்த ஆலோசனை. இந்திய துணைக்கண்டத்தின் மிகச்சிறந்த சகல துறை வீரர்கள் இருவரின் பெயரில் இரு நாடுகளின் வீரர்களும் போட்டிகளில் பங்குபற்றுவது சிறப்பானதாகும்.

இவ்விடயத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் சம்மதத்திற்காக நாம் காத்திருக்கிறோம்'' என்றார்.

கபில்தேவ் தலைமையில் இந்திய அணி 1983 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்றது.

இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் 1992 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்றது. இவ்விரு நாடுகளும் தலா ஒருதடவை மாத்திரமே உலகக் கிண்ணத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

இந்திய அணி எதிர்வரும் மார்ச் மாத முற்பகுதியில் பாகிஸ்தானுக்குச் சென்று டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

சுமார் 15 ஆண்டுகளின் பின்னர் இந்தியா முதல் தடவையாக பாகிஸ்தானில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த டெஸ்ட் தொடரில் மிக விமர்சையான ஆரம்ப விழாவை நடத்துவது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆராய்ந்து வருகிறது.

இரு நாடுகளையும் சேர்ந்த முன்னாள் அணித்தலைவர்கள் மற்றும் நட்சத்திர வீரர்களை இவ்விழாவில் கௌரவிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என பாக். கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்போட்டிகளுக்கான பாதுகாப்பு மற்றும் ஏற்பாடுகளை ஆராய்வதற்காக இந்திய கிரிக்கெட் சபை அதிகாரிகள் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவ்விஜயத்தின்போது இம்ரான் - கபில் கிண்ணம் குறித்தும் தீர்மானிக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## டெஸ்ட் அணியின் அடுத்த தலைவர் அத்தபத்துதான்

### -அரவிந்த டி சில்வா

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணிக்கு ஹஷான் திலகரட்னவுக்குப் பின்னர், மாவன் அத்தபத்துவே தலைமை தாங்குவார் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் உபதலைவரும் தேர்வுக் குழு அங்கத்தவருமான அரவிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியுடன் மோதவுள்ள இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணிக்கு ஹஷான் திலகரட்னவே தலைமை தாங்கவுள்ளார்.




டெஸ்ட் அணித்தலைவர் பதவியிலிருந்து திலகரட்ன நீக்கப் படலாம் என அண்மையில் ஊகங் கள் வெளியாகியிருந்தன.

ஆனால், அவுஸ்திரேலியாவுட னான போட்டிகளுக்கும் திலகரட்னவே தலைமை தாங்க வு ள்ளார்.

அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட் போட்டிகளிலும், 5 ஒருநாள் போட்டிகளிலும் மோதவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இத்தொடரின் டெஸ்ட் போட்டிகளுக் கான அணிக்கு ஹஷான் திலகரட்னவும், ஒருநாள் போட்டிகளுக்கான அணிக்கு மாவன் அத்தபத்துவும் நியமிக்கப் பட்டுள்ளனர் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் அறிவித்துள்ளது.

இதேவேளை, ஹஷான் திலகரட்னவுக்குப் பின்னர் டெஸ்ட் அணித் தலைவராக மாவன் அத்தபத்துவே நியமிக்கப்படுவார் என அத்தபத்துவிடம் உறுதியளிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரவிந்த டி சில்வா கூறுகையில்,

"திலரட்னவுக்குப் பின்னர் அத்தபத்துவே டெஸ்ட் அணித் தலைவராக நியமிக்கப்படுவார்.

இதற்கான பொருத்தமான தருணத்தை எதிர்பார்த் திருக்கிறோம். இலங்கை அணி சிறப்பாக விளை யாடும் போது, துடுப்பாட்ட வீரர்கள் நல்ல நிலை யில் இருக்கும்போது, அத்தபத்துவிடம் டெஸ்ட் அணித்தலைவர் பதவி கையளிக்கப் படும். அதனால், அத்தபத்துவுக்கு மேலதிக அழுத்தம் ஏற்படாதிருக்கும்.''- என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்

# இனப்பூசல்களும் மதப்பூசல்களும்

இனரீதியாக சேறு பூசப்பட்ட நாடு இலங்கை என்பதை சர்வ தேசமே தெரிந்து வைத்திருக் கிறது. இலங்கை என்ற நாட்டை சர்வதேசத்தில் உதாரணப்படுத் துவதற்கு இனப்பிரச்சினை தான் ஞாபகத்தில் வரும். அப் படி ஒரு பிரபல்யம் இலங்கை க்கு. ஆனால், அந்த நிலை – அதாவது யுத்தம், மோதல், குண்டு வெடிப்பு, துப்பா க்கிச் சூடு – கடந்த இரண்டு வருடங் களாக ஓய்ந்துள் ளன. தமிழர்கள் மீதான தாக்கதல்களும் குறைந்து விட்டன.

ஆனால், தமிழர்களுக்கு எதி ரான தாக்குதல்கள் திசைமாறி கிறிஸ்தவர்கள் மீது திரும்பியி ருக்கிறது. இனரீதியான தாக் குதல்கள் மதரீதியாக மாறிய தால் இரு இனத்தார்களுமே பாதிக்கப்படுகின்றனர். இலங்கை வரலாற்றில் இது ஒரு திருப்பம்.

அண்மைக்காலமாக அதாவது கல்கொடவில சோம தேரரின் மறைவுக்குப் பிறகு இந்த தாக்குதல்கள் தீவிர மடைந்துள்ளன. கல்கொட வில சோம தேரர் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவரால் கொ லை செய்யப்பட்டார் என்று பிரசாரங்கள் மேற்கொள்ளப் பட்டன. அந்த பிரசாரங்களின் வெளிப்பாடே இந்த தாக்கு தல்களுக்கு காரணம் என்று கூறப்படுகின்றது. எது எப்படி இருந்தாலும் இன்று சிங்கள பௌத்த அடிப்டைவாதிகளின் கை ஓங்கியிருக்கிறது.

அண்மையில் கிறிஸ்தவ அமைப்புக்களின் பிரதிநிதி யொருவர் தெரிவித்த தகவல் படி 103 தாக்குதல் சம்பவங் கள் இடம் பெற்றிருக்கின்றன. இந்தத் தகவல்கள் எந்தள வுக்குச் சரி என்பதைவிட கிறிஸ் தவ தேவாலயங்கள் தாக்கப் பட்டு வருகின்றமை வெளிப் படையாகத் தெரிகிறது.

இலங்கை என்ற நாடு, பல் லின மக்களைக் கொண்ட நாடு பல மதங்களைக் கொண்டிரு கின்ற நாடு. மதச் சுதந்திரம் என்பது சகலருக்கும் உரிய விடயமாகும். எவரும் எந்த மதத்திலும் சேர்ந்துகொள்ள லாம். ஆனால், பலாத்காரமாக மதமாற்றம் செய்வது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம். தனிமனித சுதந்திரம் பாதுகாக் கப்பட வேண்டும். இந்து சமயத் தைச் சார்ந்தவர்கள் அனை வரும் தமிழர்கள். ஆனால், கிறிஸ்தவ மதத்தில் எல்லா மொழிபேசுபவர்களும் உள் ளனர். இலங்கையில் தமிழர் களைவிட சிங்களவர்களே கிறிஸ்தவ மதத்தில் அதிகமாக உள்ளனர்.

எனவே மதரீதியான மோதல் ஒரே இனத்துக்கு மட்டும் வரை யறையாகிவிடாது. இனி மோத ல்கள் மிகவும் மோசமான தாகவே அமையும். சிஹல உறு மய இந்த தாக்குதல்களின் பின் னணியில் இருப்பதாக குற்றஞ் சாட்டப்படுகிறது.

எது எப்படியானாலும் சர்வ தேசங்கள் கண்டனம் தெரிவிக் கும் அளவுக்கு நிலமை மோச மடைந்துள்ளது. கட்டாய மதமாற் றம் செய்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க சட்டம் கொண்டு வரப்படல் வேண்டும் என்றெல்லாம் பரவலாகப் பேசப்படுகின்றது. உண்மை யில் ஒரு மதத்தைச் சார்ந்த வரை பலாத்கரமாக இன்னொரு மதத்தில் சேர்ப்பது ஏற்கக்கூடி யது அல்ல. தானே விரும்பிச் செல்வது வேறு விடயம். சிங்கள, பௌத்த அடிப்படை வாதிகள் இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களைக் சந்தேகக் கண் கொண்டு நோக் குகின்றனர். எனவே அரசியல் ரீதியாக நெருக்கடிக்குள்ளாகி யிருக்கும் இலங்கை அதன் காரணமாக வெளிநாட்டு உதவி களையும் இழக்கும் ஒரு நிலை க்கு உள்ளாகி இருக்கிறது.

ஒரு முடிச்சுக்குள் இருந்து மீள முயற்சிக்கும் இலங்கை இன் னொரு முடிச்சு க்குள் முடங்கும் பரிதாப நிலை யை எவரால் ஏற்றுக் கொள்ள முடியும்?

இனரீதியாக, மதரீதியாக, அரசியல் ரீதியாக நலிந்து போய்விட்ட ஆட்சியாளர்களே இதற்கு பதில் கூறவேண்டும்.

ஆ.வரதன்

# கவிதைப் பூங்கா

### வரம்

வந்தால் தருவேனென்றான்
இறைவன்.
தந்தால் வருவேனென்றேன்
நான்.
இடையில் நின்று
அல்லாடுகிறது
வரம்.

சமாதானப்புறா
தனித்துப்பறக்க
பயமாகவிருக்கிறதாம்.
துப்பாக்கிக்காரர் இருவரை
துணைக்கழைக்கிறது
சமாதானப்புறா.

படைகள்
விரலை விட்டு
இறங்கச் சொன்னோம்.
சம்மதித்தார்கள்-நாங்கள்
சந்தோஷப்பட்டோம்.
இப்போதவர்கள்
உள்ளங்கையில்
உட்காரப்பார்க்கிறார்கள்.

**மு.யாழவன், திருமலை.**

### காதல் தீவிரவாதி

சிறையினுள் அடைக்கப்பட்டு
ஒடுக்கப்பட்டு
கிடப்பது போல்-நான்
உன் இதயச்சிறையில்
அடைபட்டுக்கிடக்கிறேன்.
சந்தேகத்தின் பேரில் அல்ல
காதல் தீவிரத்தால் ! உன்னால்
இதயச்சிறையுள் ஆயுட் கைதியாக
அடைக்கப்பட்ட
காதல் தீவிரவாதி நான்.

**பா.சிறீதரன், கிளிநொச்சி.**

உறுதியோடு காத்திருங்கள்!
காலத்தின் சூழ்நிலையால்!
களத்தில் உறவாடி
காவியமான உறவுகளே!
நிம்மதியாக உறங்குங்கள்.
விடியலின் தென்றல்
வீசும் எம் மண்ணில்!
செந்நிற குருதியும் யாவரும்
சிந்திய கண்ணீரும்
செந்தமிழுக்கல்லவா?
காத்திருங்கள்.
நெஞ்சுரத்தில் வேரூன்றி
விடியும் எம் தேசம்!

**உ.மனோ, கிரான்.**

### மீண்டும்

போர் நிறுத்தம் புரிந்துணர்வு
மீள்குடியேற்றம் புனர்நிர்மாணம்
எல்லாமே இங்கு புஸ்வாணமாகிவிட
மீண்டும் இங்கே போர் உலா
புறப்படத் தயாராகிறது...
ஏய் தமிழா
அயைாள அட்டையைத் தேடி
எடுத்துக் கையில் வைத்துக்கொள்!

**தே. தவராஜா**
**வட்டக்கச்சி.**

### நினைவில்

சந்திப்பு என்பது
தற்செயலான விபத்து.
பிரிவு என்பது
விபத்தினால் ஏற்படும்
தடயம்.
பிரிந்துவிடலாம்,
சில தடயம் மட்டும்
என்றும் இருந்து வரும்.

**சி.குமரன்,**
**பரந்தன்.**

### தொலைந்த காதல்

அன்று
உன்னைவிரும்பியபோது
சொல்ல மறந்த
என்காதலை,
இன்று
உன்னை இழந்த போது
சொல்லத் துடிக்குது
எந்தன்
உடைந்த உள்ளம்!

**மொஹமட் நிஸ்வான்,**
**கல்முனை.**

### தாயும் தாரமும்

அன்று
மழையில் நனைந்தபடி-என்
மனையுள் நுழைந்தேன்.
பதறியடித்த என் அம்மா
"சேலை" நுனியால்
என் தலை துடைத்தாள்.
இன்று
மழையில் நனைந்தபடி – என்
மனையில் நுழைந்தேன்
அமர்ந்திருந்த என் மனைவியோ
அங்கிருக்கிறது "ரவல்"
என்றாள்.

**வ.சுதா,**
**பரந்தன்.**

### சொல்லிவிடு

உள்ளத்தால்
எனை நினைத்து
உதட்டால்
பொய் பேசும் பெண்ணே,
சொல்லிவிடு
உன் காதலை.
நான்
அணைவதைக் கூட
ஏற்பேன்.
நீ எரிவதை
என்னால்
எப்படி ஏற்க முடியும்?

**பா.பொன்நிலவன்,**
**மீசாலை.**

### பிரியாதவள்

என் பிரியமானவளே
பிரிவு தான் காதலின்
இலக்கணம் என்று
அன்று கூறியவள்
நீ தான்.
உன்னைப்
பிரிய நேர்ந்தவுடன்
என் காதலையும்
பிரித்துவிட்டாய்.
கறைபடிந்து கிடக்குதடி
என் இதயச் சுவர்களில்
உன் நினைவுகள்.
அழித்துவிடுவதற்காக
அல்ல
என்னை அடக்கம்
செய்வதற்காக!

**பெ.தயாகரன்,**
**புதுக்குடியிருப்பு.**

### அன்றும் இன்றும்

அன்று உன்னைப்பார்த்தேன் -
கன்னியாய் என் கண்முன் காதலியாய்,
காய் தாங்கா ஒரு மரமாய்,
கருமேக ஒரு நிலவாய்,
கடல் தனில் ஒரு படகாய்,
காற்றிலே ஒரு கொடியாய்.
இன்று உன்னைப் பார்க்கின்றேன் -
கணவன் கையுடனாய்,
கைக்குழந்தை இடையுடனாய்,
கருங் கூந்தல் மலருடனாய்,
கழுத்திலே மாங்கல்யமாய்,
மனம் எங்கும் குடும்ப நினைவாய்.
ஆனால் என் மனம் எங்கும்
என்றும் உன் நினைவாய்!

**வே.கண்ணன், வவுனிக்குளம்.**

### புதிர்

காதலை வடிகட்டினேன்
கவிதையானது!
கவிதையை வடிகட்டினேன்
தத்துவமானது!
தத்துவங்களை வடிகட்டினேன்
வாழ்க்கையானது!
வாழ்க்கையை வடிகட்டினேன்
அது புதிரானது!

**எஸ்.வசந்தி, வட்டக்கச்சி.**

### ஏழையின் உறவு

கொட்டுகிற மழையில்
கட்டத் துணியின்றி
ஒட்டுத் திண்ணையில்
பட்டினியால் சுருண்டிருக்கும்
ஏழையைக் கண்டு -
கிட்ட வர மனமின்றி
எட்டிச் செல்லும்
மனிதர்களும் மனிதர்களா?
இஷ்டமுடன் ஓடி வந்து
நாவினால் முகம் துடைத்து
எட்டி அடித்தாலும்
வாலாட்டி
பசியோடும் காலடியில்
காத்திருக்கும்
"நாய்" தானே
இனிய உறவு!

**பா.லோகநாயகி,**
**பருத்தித்துறை.**

### நலமா?

மௌனத்தின் நிசப்தங்களில் – கூட
நான் சத்தமின்றி யாசிப்பது
உந்தன் நிழலை மட்டுமே.
தென்றலே நான் வேண்டுவது
என்னவன் நலமா என்று...
நீல வானையும்
அத்தனை இயற்கையையும்
நான் மண்டியிட்டு வேண்டுவது
என்னவன் நலமா என்று...

**யோ.துளசி நிலா,**
**நல்லூர்.**

### முதலாளி

உழைப்பவன்
உழைப்பை
உதிரமாய்
உறுஞ்சும்
உணர்வற்ற
அட்டைகள்

### தொழிலாளி

உதிரத்தை
உழைப்பாக்கி
உண்டு சுகித்திருப்போரை
வாழவைக்கும்
வளமாக்கிகள்.

**ம.குணநாயகம்,**
**விசுவமடு.**

### ஸ்ருதி தேடும் சந்தங்கள்

எனக்குள் உன்னை வீழ்த்தி
என்னை உயிர்ப்பித்தவளே...
அடிக்கடி தொலைந்துபோகும்
நினைவுகளைத் தேடியே
அல்லல்படுகிறது மனசு.
புதுமை விரும்பியாய்
புறப்பட்ட புயல்வேக
புறப்படுகை
பூர்த்தி காணாமலே
ஸ்தம்பித்து விட்டதால்
ஸ்ருதி தேடும் சத்தமாய்-என்
எண்ண எச்சங்கள்
ஏற்றம் பெறாமல்
ஏமாற்றங்களோடு
ஏங்கித் தவிக்கிறது.
சிறகுகள் இன்றியே
சில நேரங்களில் மனம்
சிருங்காரமாய் சிறகடிப்பது எப்படி?
கால மாற்றத்தை
கணக்கிட முடியாத மனசு
கடுமையான போராட்டத்தில்
களமிறக்கியிருக்கிறது.
இதென்ன
தொலைந்த கனவுகளை
தொடத்துடிக்கும் முயற்சியா?
தொலைவாகிப்போன
தொடுவானம் தேடும்
தொலைதூரப் பயணமா?
புரியவில்லை எல்லாமே
என்னை புதிராக
படம் போட்டு பார்க்கிறது.
விடை தேடும்
வினாக்கள் ஏற்படுத்திய
விழுப்புண்களில் கூட
விரும்பித் தேடிப் பார்க்கிறேன்.
உறவின் உன்னதமே...
அனல் மழையும்-என்னுள்
பனி மழையாய் பரவசம்
பரப்பிச் செல்ல!

**எஸ்.மனோகரன்,**
**ஸ்ரீபாத கல்வி கலாசாலை.**


### அவள் விட்டபோது..!


பள்ளியில் கால் பதிக்கையிலே
பாசமதை கண்டேன்.
பாசமாய் தாய் ஊட்டையிலே
பரிவினை நான் பார்த்தேன்.
தீ எனை தீண்டையிலே
தீவிரத்தை உணர்ந்தேன்.
தீங்கனியைக் கடிக்கையிலே
தீஞ்சுவையை பெற்றேன்.
சிந்தை யதைத் தொலைத்தபோது
காதலினை அறிந்தேன்.
சத்தமதை கேட்கையிலே
சங்கீதத்தை தெரிந்தேன்.
தென்றலெனை தொட்டபோது
வசந்தமதை கண்டேன்.
என்னை அவள் விட்டபோது
என்வறுமை தனை
தெரிந்துவிட்டேன்.

**கு.மகாலக்ஷ்மி,**
**மிருசுவில் – வடக்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைத்திருநாளைக் கலக்கிய பொங்கல் இன்னிசை





கொழும்பு ஜிந்துப்பிட்டிச் சந்தி தைத் திருநாளன்று மாலை வழக்கத்தைவிட கோலாகலமாகக் காட்சியளித்தது.

நான்கு புறமும் மக்கள் கூட்டம். வீதிகளில் வாகன நெரிசல். வாகனங்களில் பயணிப்போரின் தலைகள் கண்ணாடிக்கு வெளியில் நீண்டு காணப்பட்டன. நீ முந்தி, நான் முந்தி என்று அங்கிருந்து அனைவரும் நெரிபட்டிடுக்கொண்டிருந்த போது தான் விடயம் புரிந்தது. ஆம் தைத்திருநாளை முன்னிட்டு சுடர்ஒளி பத்தரிகை பெருமையுடன் வழங்கிய மாபெரும் இன்னிசை விருந்து அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

எம்.ஜி.ஆர் என்று செல்லமாக அழைக்கும் சண்முகசுந்தரத்தின் நெறியாள்கையின் கீழ் பிரபாவின் 'ஸ்ருதி' இசைக் குழுவினர் அங்கு கான மழை பொழிந்தனர். இடையிடையே வானவேடிக்கைகள் கண்ணைப்பறித்தன. தேமதுரக் குரலோன்களான சீத்தாராமன், எஸ்.எம்.ரவி, ஜெகன் மோகன், ஜெனிபர் பெர்னாண்டோ, சித்தாந்தராஜா ஆகியோரின் கணீர்குரல்களின் அறிவிப்புகள் ஒலிவாங்கியில் முழக்கமிட்டன.



மேடையில்தென்னிந்திய கலைஞர்களுக்கு எமது நாட்டுக் கலைஞர்கள் சவால் விடுத்தனர். அங்கிருந்த அனைவரும் இன்னிசை மழையில் மூழ்கியிருந்தனர். ஒவ்வொருவரின் வாயும் எதையோ முணுமுணுப்பது போல் அங்கு பாடப்படும் பாடல்களை உச்சரித்த வண்ணம் இருந்தது. அந்த அளவுக்கு இன்னிசை விருந்துடன் அவர்கள் ஒன்றிப் போயிருந்தனர்.

ஜெயத்தி நகர், ஜிந்துப்பிட்டி, கன்னாரத் தெரு, கதிரேசன் வீதி, ரட்ணம் வீதி இளைஞர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்திருந்தனர். அங்கு பிரதம அதிதிகளாக ஜோன் அமரதுங்க எம்.பி, எம்.எஸ்.செல்லசாமி (இ.தொ.க. பிரதித்தலைவர்), வேலம்மாள் செல்லசாமி (மாநகரசபை உறுப்பினர்), கொஸ்ரா (மாநகரசபை உறுப்பினர்), பெர்னாண்டோ (மாநகரசபை உறுப்பினர்), அரசரெட்ணம் (பொலிஸ் உதவி அத்தியட்சகர்), இரவீந்திரன் (இ.தொ.க. ஆலோசகர்), எஸ்.கனகசூரியம் (சுடர்ஒளி சந்தைப் படுத்தல் ஆலோசகர்) ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

இந்தளவுக்கு நிகழ்வு சிறப்புற நிகழ்வு ஒருங்கிணைப்பை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் பெரியசாமி சீத்தாராமன் எற்பாடுகளை மேற் கொண்டிருந்தார். அன்றையதினம் அங்கு விளையாட்டு போட்டிகளும் நடந்தன. தைத்திருநாளன்று சிறந்த நிகழ்ச்சியைப் பார்த்த இன்பத் அதிர்ச்சியில் வீடு திரும்பினேன். வீடு திரும்பும் போது கூட அங்கு பாடப்பட்ட பாடல்கள் எனது வாய்க்குள் உதிர்ந்த வண்ணமேயிருந்தன.

லோறன்ஸ்





இந்தியாவில் தலைசிறந்த கலை நிபுணராகவும் கலைக்கென வாழ்பவரும் பரதநாட்டிய, குச்சுப்புடி ஆகியவற்றில் சிறப்புப்பெற்றவருமான ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்த ஆனந்த சங்கர் ஜெயந் 30 ஆம்திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் பிஷேப்கல்லூரி அரங்கில் தனது நடனநிகழ்ச்சியை வழங்குவார். உலகபுகழ் பெற்றகலாஷேத்திரத்தின் பட்டதாரியான ஆனந்த இந்தியாவில் மாத்திரமின்றி வெளிநாடுகளிலும் தனது நடனத்திறமையை வெளிப்படுத்தியுள்ளார். இவர் ஸ்ரீ இராமலிங்க சாஸ்திகளிடம் குச்சுப்புடியை பயின்றவர் தூரதர்ஷனில் மிகவுயர்ந்த இடத்தை வகிக்கும் ஓர் கலைஞர் ஆகவும் இந்திய கலாசார தொடர்புகள் மன்றத்தின் கலைஞராகவும் மதிக்கப்படுகின்றார். இவர் பல விருதுகளைப் பெற்று ஆந்திரா பிரதேசத்தின் புகழ் வாய்ந்த ஓர் கலைஞராக போற்றப்படுகின்றார். அண்மையில் தமிழ் நாட்டின் கலைமாமணி பட்டத்தையும் பெற்றார்.

இவர் அமெரிக்காவின் சர்வதேச ரோட்டரிக் கழகத்தின் ஐந்து வார நிகழ்வில் இந்தியாவின் நடனம் மற்றும் கலாசாரத்தை தனியே பிரதிநிதித்துவப் படுத்தினார். இவ்விழாவில் தனது வல்லமையை காட்டியதுமின்றி கலையின் நுணுக்கங்களை அறிந்தவர் என்ற முறையில் நடன தத்துவங்களை விளக்கியத்துடன் நிகழ்ச்சியையும் இனிதாக நடத்தினார்.

# இலங்கையில் மணிவண்ணன்



ரிங்கோ ஹொலி டேய்ஸ் நிறுவனதின் அதிபர் தில்லைராஜின் அழைப்பை ஏற்று தென்னிந்திய பிரபல சினிமா இயக்குனரும், நடிகருமான மணிவண்ணன் இலங்கை வந்திருக்கிறார்.

யாழ்.மண்புலத்தை கருவாகக் கொண்டு தயாரிக்கவிருக்கும், இதுவரை பெயரிடப்படாத திரைப்படம் ஒன்றின் காட்சிகளுக்கான களத்தெரிவுகளை மேற்கொள்ளும் நோக்கில் வருகை தந்திருந்த அவரை 'சுடர் ஒளி' வார இதழின் சார்பாக சந்தித்த போது பின்வரும் கருத்துக்களை அவர் கூறினார்.

"நான் 6 தடவைகள் இலங்கைக்கு வந்திருக்கின்றேன். இது 7 ஆவது தடவை.

80களில் இலங்கையில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையினால் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் ஒன்றரைவயதுச் சிறுமி வளர்ந்து பெரியவளான பின் தாயகத்திற்குத் திரம்புகிறாள். அவளின் மீள்பிரவேசத்தின் பின் ஏற்படும் உணர்வுகளின் வெளிப்பாடே நான் எடுக்கவிருக்கும் படத்திற்கான கதையின் சுருக்கம்.

இதில் கதாநாயகனாக மாதவன் நடிக்கிறார். கதாநாயகித் தேர்வு நடைபெறுகிறது. இதில் வயதான தாத்தாவாக நடிக்க யாழ்.மண்ணின் கலைஞர் ஒருவரைத் தெரிவு செய்ய விரும்புகிறேன்.

படப்பிடிப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ' மண்டைதீவைப் பற்றி அவரிடம் கேட்ட போது.

''நான் இலங்கையில் வெளிவரும் பல நாவல்களையும், சிறு கதை தொகுதிகளையும் படித்திருக்கின்றேன். அவற்றினூடாக என் கதைக்கும், காட்சிகளுக்கும் மண்டைதீவே பொருத்தமானதாக இருக்கும் என நினைத்தேன்.

மனித வாழ்க்கையில் அவ்வப்போது தோன்றி மறையும் உணர்ச்சிகளின் வெளிப்பாட்டிற்கு உருவம் கொடுக்கப் போகிறேனே தவிர எனது படத்தின் மூலம் பிரசாரப்பணியாற்றவில்லை. ஆகவே, இதில் பாதிப்பு ஏற்படும் என நாம் நம்பவில்லை'' எனவும் அவர் கூறினார்.

உங்களது நாட்டில் வாழும் ஆர்வமிக்க இளைஞர்களுக்கு திரைப்படத்துறை தொடர்பான பயிற்சிகளை பெறத் தங்களது ஒத்துழைப்பு கிடைக்குமா என்று கேட்டபோது அதற்குரிய ஏற்பாடுகளை எவராவது சரிவரச் செய்துதர முயற்சித்தால் தனது முழுமையாக பங்களிப்பை வழங்குவதாகத் தெரிவித்தார்.

இதுவரை வெளிவந்த ஈழத்தமிழர் தொடர்பான திரைப்படங்களின் மொழிப்பிரயோகம் பற்றிப் பேசும்போது, கூடியவரை தனது படத்தில் இத்தவறு மீண்டும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதாகக் கூறினார்.

இறுதியாக, ஈழத் தமிழர்களின் போராட்டம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்.

இனம் விடுதலைப் பெறவேண்டும். என நினைப்பது ஒவ்வொரு இனத்தினதும் உரிமை. நியாயமானது. கூட என்றும் கூறினார்.



-நாச்சியூரான்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# அடிக்கத் தொடங்கினால் இனி மறிக்க ஆள் இராது

''வானத்தை தொட்ட காணி விலை எல்லாம் சரிஞ்சுகொண்டு இருக்குது. வீடு வாங்கினவை எல்லாம் என்னத்துக்கு வாங்கினம் என்று தலையில் கைவைக்கினம்! ''தேரடியில் வந்து அமர்ந்த படியே சொன்னார் விநாசியார்.''

''ஓம்.. ஓம்... என்னவோ நிரந்தர சமாதானமே வந்து விட்டமாதிரி சனம் நம்பிக்கொண்டு இருந்தது. ஆனால், அம்மா அமைச்சுக்கைளப் பறித்து நடத்தின கூத்திலை சமாதானம் குழம்பும் என்று பயந்தது உண்மைதான். ஆனாலும்பிறகு ஓரளவு நம்பிக்கை இருந்தது. ஆனால், ஜே.வி.பியோட அம்மாவின் கட்சி கூட்டு வைத்தபிறகு இருந்த நம்பிக்கையும் எங்கடை சனத்துக்குப் போட்டுது!'' நண்பரின் கருத்தை ஆமோதித்தார் மாஸ்ரர்.''

''ஓம் மாஸ்ரர் உவை உந்த மாதிரி குட்டையைக்குழப்பிக்கொண்டு புலிகள் ஆயுதங்களை கைவிடவேணும் என்றெல்லே கூப்பாடுபோடுகினம். தெற்கை நம்பி போராட்டத்தைக்கைவிட முடியாது என்ற விஷயம் மீண்டும் ஒருமுறை ஈழத்தமிழருக்கு ஆணி அடிச்சமாதிரி பதியவைச்சிருக்கினம்'' என்றான் டானியல்.

''இதிலை ஒரு பகிடியைக் கவனிச்சனீங்களோ?'' கேட்டான் லோகன்.

''என்னதம்பி, பிரச்சினை தீராமல் இழுத்தடிக்கிறதிலை என்ன பகிடியிருக்குது'' ஆதங்கத்துடன் கேட்டார் மாஸ்ரர்.

''ரணில் புலிகளோடை சமாதானம் பேசுகிறார். ஆனால் நாடு பிளவுபடப் போகுது என்று ஜே.வி.பியும், அம்மாவும், கதிர்காமரும்ஒப்பாரிவைக்கினம். ஆனால், இவையின்றை ஆசைப்படி யுத்தம் மூலம் தீர்வுகாண வெளிக்கிட்டால்தான் நாடு பிளவுபடும் என்பதுதான் உண்மை'' என்றார் மாஸ்ரர்.

''இல்லை மாஸ்ரர், யுத்தம் மூலம் தீர்வு கண்டால் நாடு பிளவுபடாது'' நமட்டுச் சிரிப்புடன் சொன்னான் டானியல்.

''என்ன மச்சான், ஜே.வி.பி.யிலை சேர்த்து போட்டியோ?'' குத்தலாகக் கேட்டான் லோகன்.

''இல்லை மச்சான், நான் யதார்த்தத்தைச் சொல்லுறன். முன்பு விடுதலைப்புலிகள் சண்டை போட்டு தமிழீழ பகுதியை மட்டும் கைப்பற்றியிருப்பினம். ஆனால், இனிச்சண்டை என்று ஒன்று வந்தால் புளியங்குளத்திலை



தேரடி அரட்டை

வெளிக்கிட்டு காலியிலைதான் போய் நிற்பினம். தடைகிடை என்று வெருட்டின காலத்திலையே 40 ஆயிரம் இராணுவத்தினரின் உயிர்களை யாழ்ப்பாணதில் காப்பாற்ற இந்தியாவிட்டை அம்மா கெஞ்சிக்கூத்தாட வேண்டியிருந்தது. ஆனால், இப்ப இருக்கிற நிலைமையிலை முழு இலங்கையையும் புலிகள் பிடிச்சு, பிறகு, ''சரி, சரி அழாதையுங்கோ, உங்கடை இடம் எங்களுக்கு வேண்டாம்'' என்று சொல்லி கொடுக்கிற நிலைமை உருவாகும்போல எல்லே இருக்குது. ஆனபடியால் முழு இலங்கையையும் புலிகள் பிடிச்சால் நாடு பிளவுபடாதெல்லே. அதைத்தான் அம்மாவும் கதிர்காமரும் விரும்புகினம் போல இருக்குது.'' சிரித்தபடியே கூறிமுடித்தான் டானியல்.

தம்பி சொல்லுறதிலையும் நியாயம் இருக்கு. இதுக்கு முந்தி கடல் தாண்டி இருக்கிறவையின்றை பசப்புவார்த்தைகளுக்கு மதிப்புத் தர வேண்டியிருந்தது. அதோட வெள்ளைத் தோல் காரரும் புலிகள் தான் சண்டையில ஆர்வமாக இருக்கினம் என்றும்அம்மா ஏதோ வெள்ளை உடையிலை அலையிற சமாதான தேவதை என்றும் நம்பிச்சினம். ஆனால்இப்பயாருக்கு யுத்த வெறி பிடிச்சிருக்கு என்று உலகத்துக்குத் தேரியும். இனியும் விட்டுக் கொடுக்க ஏலாத நிலைமைக்கு புலிகள் வந்து நிற்கினம். ஆனபடியால் இனி அடிக்கத் தொடங்கினால் மறிக்க ஆள் வராது'' என்றார் மாஸ்ரர்.

''அது சரி ஜே.வி.பி.யோட கூட்டு வைக்கவேணும் என்று ஒற்றைக் காலிலை நின்றவர் அநுரா. ஆனால் கூட்டு ஒப்பந்தம் கையெழுத்திடும்போது ஆள் முன்னுக்கு நிற்கேல்லை'' கேட்டான் லோகன்.

''யாருக்குத் தெரியும், எல்லாம் கடல் தாண்டினவையின்ர ஆலோசனையாக இருக்கும். உயிரைக் கொடுத்து போராடினவையின்ர குடும்பங்கள் பரிதவிக்க சும்மா இருந்தவைக்கு தியாகிகள் பென்ஷன் கொடுக்கிறவை, போராட்டத்தை கொச்சைப் படுத்த என்னவும் செய்வினம். அதிலை இந்தக் கூட்டு ஒப்பந்தம் ஒன்று என்றெல்லே சொல்லுகினம்! ''என்றார் விநாசியர்.

''என்னண்ணை, விளக்கமாகச் சொல்லுங்கோவன்''

''சொல்லுறன் டானியல். இங்கே பேச்சு மூலம் தீர்வு கிடைத்து புலிகளிடம் அதிகாரம் போனால் தங்களுக்கு ஆபத்து என்று அங்கால இருக்கிறவை நினைக்கினம். ஆயுதப் போராட்டத்தால் ஒரு இனம் தங்கடை அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பது மீண்டும் நிரூபிக்கப்படும்— அது தங்கட நாட்டில இருக்கிற தீவிரவாதிகளுக்கு உற்சாகமூட்டும் என்று பயப்படுகினம். ஆனபடியால் சுபாஷ் சந்திரபோஸை பின்னுக்குத் தள்ளிப்போட்டு, காந்தியை முன்னிறுத்தினமாதிரி, வெள்ளை வேட்டிக்காரரின்ர கையிலை தமிழரின் ஆட்சி கிடைக்கச்செய்யுறதுக்கு அவை முண்டியடிக்கினம்'' விளக்கினார் விநாசியர்.

''ஆனாலும் அண்ணே, சமாதானப் பேச்சு, அது இது என்று ஆயிரம் வழிகளிலை ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கலாம். ஆனால் அந்தத் தீர்வு கிடைக்க ஈழத்தமிழர் நடத்தின யுத்தப் போராட்டம் தான் அடிப்படைக்காரணம் என்ற உண்மை, வரலாற்றிலை என்றைக்கும் மறையாமல் இருக்கும். தென்னிலங்கைச் சர்வாதிகாரிகளை தமிழருக்கு ஒரு சரியான தீர்வைத்தரவேணும் என்ற முடிவுக்குச் வரவச்சதே ஆயுதப்போராட்டம் தான். இப்ப பேசி, கிடைச்சாலும் பேசாமல் கிடைச்சாலும் அந்த முடிவு ஆயுதப் போராட்டத்தால் வந்த தீர்வேதவிர அஹிம்சை வழியாலை கிடைக்கேல்லை என்ற உண்மையை நாங்கள் உணரவேணும்! ''கூறிவிட்டு எழுந்தான் டானியல். தேரடி கலைந்தது.

—ஏகலைவன்.

# வேண்டாம் மனக் கவலையும் பதற்றமும்

கவலையை ஒழிக்க முடியுமா? மனிதன் உயிரோடிருக்கும் வரை பிரச்சினைகளும் அவை தொடர்பான மன உளைச்சல்களும் இருந்து கொண்டு தான் இருக்கும். இது தவிர்க்க முடியாதது.

அதனால் திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் மன அழுத்தத்தையும் கவலைகளையும் குறைத்துக் கொள்ளலாம். மன அழுத்தம் இல்லாமல் உற்சாகமான மனதுடன் இருந்தால் உடல் நலத்துடன் இருக்கலாம். நீண்ட காலம் வாழலாம்.



கீழேயுள்ள வழிமுறைகளை நீங்கள் கடைப்பிடித்தால் மனதில் மகிழ்ச்சி மட்டுமல்ல, குடும்பத்தில் அமைதியும் திகழும்.

* செய்ய வேண்டிய பணிகள் பற்றிய விவரங்களையும் அவசியத் தகவல்களையும் நினைவில் வைத்திருந்தால் போதும் என்று நினைக்காதீர்கள். உங்கள் மூளையில் அது தேவையற்ற சுமையை ஏற்றிவைக்கும். நாள் தோறும் செய்ய வேண்டிய பணிகளை பற்றிய விவரங்களை ஒரு டயறியில் குறித்து வையுங்கள். அதை கூடவே வைத்திருங்கள்.

* காலையில் 15 நிமிடங்கள் முன்னதாக எழுந்து விட்டால் நிதானமாகக் காரியங்களைச் செய்யலாம். அவசர அவசரமாக அலுவலகத்துக்கு ஓட வேண்டிய தேவை இருக்காது.

* காலையில் போட வேண்டிய உடைய அயன்பண்ணுவது, கைப்பையில் தேவையானதை எடுத்து வைப்பது போன்ற வேலைகளை முதல் நாள் இரவே செய்து முடியுங்கள்.

* தினமும் சிறிது நேரமாவது தனிமையில் இருங்கள்.

* இதைச் செய்தால் பிறகு பொய் சொல்ல வேண்டி வரும் என்று தோன்றுகிற வேலைகளைச் செய்யாதீர்கள்.

* உங்கள் வீட்டில் இருக்கும் இயந்திர உபகரணங்கள் முறைப்படி கவனிக்கப்படாத வாகனங்கள் எந்த நேரத்திலும் உங்களைக் காலை வாரிவிடலாம்.

* பல சமயங்களில் நிமிடக் கணக்கில் அல்லது மணிக் கணக்கில் எதற்காகவும் காத்திருக்க நேரிடலாம். வெறுமனே இருந்தால் அது எரிச்சலையும் மன அழுத்தத்தையும் ஏற்படுத்தும். நேரம் பயனின்றி கழிகிறதே என்ற வருத்தமும் ஏற்படும். புத்தகங்களை எடுத்துச் சென்றால் பதற்றத்தில் இருந்து விடுபடலாம்.

* நாளை செய்ய நினைப்பதை இன்றே செய்யுங்கள். இன்று செய்ய இருப்பதை இப்போதே செய்யுங்கள். தள்ளிப் போடுவது பிரச்சினைகளை உருவாக்கும். உரிய நேரத்தில் சின்னச் சின்ன வேலைகளைச் செய்யாது விட்டால் அவை மொத்தமாகச் சேர்ந்து பிறகு பெருஞ் சுமையாகிவிடும்.

* குறித்த காலத்தில் உண்ணுங்கள். பட்டினியாக வேலைகளைச் செய்யும் போது நீங்கள் எரிச்சல் அடைவீர்கள். வேலையும் பாதிக்கப் படும்.

* பொருட்களை வைத்த இடத்தில் காணவில்லை என்றவுடன் வானத்துக்கும் பூமிக்கும் குதிக்காதீர்கள். வீட்டிலும் அலுவலகத்திலும் அந்தந்தப் பொருட்கள் அந்தந்த இடத்தில்தான் இருக்க வேண்டும் என்று நியதிப்படுத்துங்கள்.

* முன் கூட்டியே எதையும் திட்டமிடுங்கள். வீட்டில் அரிசி, சாமான்கள் முடிவடையும் முன்பே கொஞ்சம் வாங்கி இருப்பில் வைத்துக்கொள்ளுங்கள். இது உங்களுக்குக் கைகொடுக்கும்.

* ஒரு நாளில் செய்ய வேண்டிய வேலைகளை செய்ய முடிகிற அளவுக்கு மட்டுமே திட்டமிடுங்கள். அதிக வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்யாதீர்கள்.

* மிக அவசியமான காரியங்களை மட்டும் செய்தால் போதும். வாராவாரம் உங்கள் அலுமாரியை ஒழுங்கு படுத்துவீர்கள் என்றால் வேறு வேலைகாரணமாக ஒரு வாரம் அதைச் செய்யாவிட்டால் ஒன்றும் குடிமுழுகிப் போகாது. அதற்காக வருத்தப்பட வேண்டாம்.

* அரை மணி நேரம் நடப்பது, உடற்பயிற்சிகள் செய்வது போன்றவை மன உளைச்சலுக்கு உடனடித் தீர்வாகும்.

* கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று பட்டிமன்றங்களில் கேட்டிருப்பீர்கள். நீங்கள் கலங்காதிருக்க கடன் வாங்காதீர்கள்.

* உற்சாகமாக இருப்பவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள்.

* நண்பர்களிடம் மனம் விட்டுப் பேசுங்கள். உங்கள் மனச்சிக்கலுக்கு அது வடிகாலாக அமையும். சில வேளைகளில் பிரச்சினைகளுக்கு தீர்வுகூட இதனால் கிடைக்கக் கூடும்.

* முதியோர்களிடம் கருணை காட்டுங்கள். குழந்தைகளை நேசியுங்கள். வறியவர்களிடம் அனுதாபம் கொள்ளுங்கள். தவறு செய்பவர்களிடம் சகிப்புத் தன்மை காட்டுங்கள்.

* சிக்கலான பிரச்சினைகளை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள். மேலும் மேலும் அதை எளிமைப் படுத்தி விட்டால், அதை சுல பமாக வெற்றி கொள்ளலாம்.

# I.B.S இன் கல்விப் பணிகள்

வர்த்தக கல்வி நிறுவனம் (I.B.S) மிகச் சிறந்த முறையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், கல்விநிறுவனங்களிலும் வர்த்தக முகாமைத்துவ கல்வி நெறியைப் பயில்வதற்கான ஆலோசனையைம் கல்வி அறிவையும் இது வழங்குகின்றது.

இந்த நிறுவனமானது உத்தியோக பூர்வமான வர்த்தக முகாமைத்துவத்திற்கான நெறியைக் கைக்கொள்கிறது. இந்த வர்த்தக முகாமைத்துவநெறி உத்தியோக பூர்வமாக ஒருவரது திறமைகளை நவீன வர்த்தக உலகில் வெளிப்படுத்த உதவுகின்றது.

வர்த்தக கல்வி நிறுவனத்தின் நிகழ்ச்சிக்குழு பாடாசாலை மட்டத்தில் இருந்து இக் கல்வியை பயிலுவதற்கு வாய்பளிக்கின்றது. கம்பியூட்டர் யுகமாகி செல்லும் வர்த்தக உலகில் சிறந்த உயர் அறிவுள்ள மாணவர்களை உருவாக்குவதை பொறுப்பாக இந்த நிறுவனம் கொண்டிருக்கிறது.

தத்தமது சொந்த திறமைகளை செயற்பாட்டுத்தன்மை கொண்டதாக ஒவ்வொருவரதும் மாற்றும் தன்மைகளை வெளிக்காட்டும் நோக்கத்தை கொண்டதாக இக் கல்வி நெறி அமையும்.

மாணவர்களின் இயற்கையான திறன்களை கட்டிஎழுப்பி, தாமே திடமான தீர்மானத்தை மேற் கொள்ளும் தைரியத்தை மேற் கொள்ளும் எதிர்காலத்தை ஏறபடுத்துவதே இந்த நிறுவனத்தின் நோக்கம் ஆகும்.

ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, சைபிரஸ், இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களுடனும், கல்லூரிகளுடனும் இந்த நிறுவனம்மிக நெருங்கிய உறவு முறைகளை பேணி வருகிறது.

தொடர்பாடல் தொழிற்நுட்ப வர்த்தக முகாமைத்துவம் என்ற நெறி முக்கியம் பெறுகிறது. இதற்கான மாணவர்கள் சிலரைத் தெரிந்து இத்துறையில் அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் உயர் பட்டங்களை பெற இந்த நிறுவனம் வழிவகைகளை ஏற்படுத்தி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வெடுக்கும் 'பீகிள் –2'



செவ்வாய்க் கிரகத்தை ஆராய 'பீகிள்–2'(BEAGE-2) என்ற ஆய்வுக் கலம் ஒன்றை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் அனுப்பினார்கள்.

சில நாட்களுக்கு முன்பு செவ்வாய்க் கிரகத்தில் இறங்கிய 'பீகிள்' கலத்தில் இருந்து எந்த தகவலும் வரவில்லை. அதனுடன் தொடர்பு கொள்ளும் முயற்சியும், அதை தேடும் பணியும் தீவிரமாக நடந்து வருகின்றன.

இந்த நிலையில் காணாமல் போன 'பீகிள்' கலம் கடற்கரை மணலில் 'ஹாயாக' ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாக கற்பனை செய்து குறும்பு படம் தயாரித்துள்ளனர் சிலர். மக்களிடையே மின் அஞ்சல் மூலம் இந்தப் படம் பரிமாறப்பட்டு வருகிறது.

# உலகின் சின்னஞ்சிறிய குரங்கு



உலகின் சின்னஞ்சிறிய குரங்கைப் பார்க்கவேண்டுமோ? பிரிட்டனின் சோமசெற் நகரில் உள்ள சென்.தோமஸ் பார்க்கிற்கு போனீர்களானால் அதனைப் பார்த்துவிடலாம். இது தாய் இல்லாத சின்னஞ்சிறிய குரங்கு. ஒரு வாழைப்பழம் என்பதே இதற்கு வாழை மரம் போல பெரியதுதான். கண்ணாடிப் பெட்டியில் வைத்துத்தான் இதன் உயிரைக் காப்பாற்றினார்கள். சுமார் 10செ.மீ.நீளமும், 43 கிராம் நிறையும் கொண்டது. பிரேசில், பொலிவியா, பெரு போன்ற நாடுகளின் அடர்ந்த காடுகளில் இவ்வகைக் குரங்குகள் வாழ்கின்றன.

# இரண்டு பிரசவங்களிலும் இரட்டைப் பிள்ளைகள்! அதுவும் ஒரே திகதியில்!





இரணைப் பிள்ளைகளைப் பெறுவது உலகில் சாதாரண நிகழ்ச்சியாகும். ஆனால், ஒரு தாய் அடுத்தடுத்து இரண்டு பிரசவங்களிலும் இரணைப் பிள்ளைகளையே பெறுவத அபூர்வமான காரியம். அதைவிட அபூர்வமானது இரண்டு தடவைகளிலும் பிறந்த பிள்ளைகளுக்கும் ஒரே திகதியே பிறந்தநாளாக வருவதுதான்.

பிரிட்டனில் வசிக்கும் யூலியா பொப் தம்பதியருக்கு 1998ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி ரொமி, சீயன் என்ற இரணைக் குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களுக்கு இரண்டாவது பிறந்த நாள் வந்த அதே தினத்தில் மிக்கி, விலி என்னும் அவர்களின் மற்ற இரு சகோதரர்களும் பிறந்தார்கள். நான்கு பிள்ளைகளும் ஆண்களேதான் என்பது மற்றொரு விஷேடமாகும்.

லண்டன் சென்.தோமஸ் வைத்தியசாலை அதிகாரிகள் இதுபற்றிக் கூறும்போது ''சுமார் 80லட்சட் குழந்தைகள் பிறந்தால் ஒன்றில்தான் இப்படியான பிரவசம் நடைபெற வாய்ப்புண்டு'' என்று தெரிவித்தனர். தாயாரான 34 வயதுடைய யூலியாவும் இரட்டைக் குழந்தையாகவே பிறந்தவர். இவரது கணவனின் குடும்பத்திலும் மூன்று இரட்டைக் குழந்தைகளைக் கொண்ட பிரசவங்கள் இடம்பெற்றுள்ளன. நான்கு பிள்ளைகளும் அசப்பில் ஒரே மாதிரியாகவே இருப்பதால் எதிர் காலத்தில் இவர்களை அடையாளம் காண்பது சிரமமான காரியம்தான்.


# பரவும் கோழிகள்



'சார்ஸ்' 'மாட் கவ்' என்று ஏதாவது ஒரு நோய் எங்கேயாவது ஓரிடத்தில் கிளம்பி ஒவ்வொரு நாட்டு மக்களையும் பீதியில் ஆழ்த்திக்கொண்டே இருக்கிறது. சீனாவை மறுபடியும் 'சார்ஸ்' பயமுறுத்த அமெரிக்காவையும் கனடாவையும் 'மாட் கவ்' ஒரு வழி பண்ண, தற்போது வியட்நாம் நாட்டை கலக்குகிறது மர்ம வைரஸ் நோய்.

தென் வியட்நாம் பகுதியில் திடீரெனப் பரவிய மர்ம வைரஸ் நோயால் ஒரு லட்சத்துக்கும் மேலான கோழிகளும் வாத்துகளும் 'பொத்பொத்' தென்று செத்து விழுந்தன. அவற்றை மாமிசமாக சாப்பிட்டவர்களும் வயிற்று உபாதைக்கு ஆளானார்கள். இது தவிரவீட்டில் வளர்க்கும் கோழி, வாத்து, வான்கோழிகளை மட்டுமே தாக்கும் இந்த நோயால் கோழிகளும் வாத்துக்களும் தென் வியட்நாம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் அந் நாட்டில் கோழி விலை படு வீழ்ச்சியடைந்திருக்கிறது. நோய்தீவிரமாக தாக்குவதற்கு முன்பு அவற்றை சந்தையில் விற்றுவிடலாம் என்றெண்ணி, கோழிகளையும் வாத்துகளையும் நன்கு குளிப்பாட்டி சுத்தம் செய்கிறார்கள் வியட்நாமியர்கள்.

# பழசும்... புதுசும்





தாய்வான் நாட்டில் அண்மையில் சர்வதேச கார்கள் கண்காட்சி நடைபெற்றது. இதில் பல்வேறு முன்னணிக் கார்கள் தயாரிப்பு நிறுவனங்கள் கலந்து கொண்டன. உலகின் முதல் கார் மற்றும் தற்போதைய நவீன கார்கள் வரை 200இற்கும் மேற்பட்ட தயாரிப்புகள் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

1886 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட முதல் காரை காண பலரும் ஆர்வம் காட்டினார்கள். 954 சி.சி திறன் கொண்ட இந்த காருக்கு ஒற்றை இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தது. 0.9 குதிரைச் சக்தி திறன் கொண்ட இந்த கார், மணிக்கு 18 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக் கூடியது. பென்ஸ் நிறுவனம் இந்தக் காரை தயாரித்து இருந்தது. 3 சக்கரங்கள் கொண்ட இந்தக் கார், முச்சக்கர மிதிவண்டி போன்ற தோற்றத்தில உருவாக்கப்பட்டிருந்தது.

கார்கள் கண்காட்சியில் பொதுமக்களை அதிகம் கவர்ந்த மற்றொரு தயாரிப்பு டொயோட்டா நிறுவனம் உருவாக்கிய ''பி.எம்.1'' ரக கார். ஒரு நபர் மட்டுமே அமர்ந்து செல்லும் வகையில் உருவாக்கப்பட்ட இந்தக் கார் போக்குவரத்து நெரிசலில் சிக்காமல் பயணம் செய்யக்கூடியதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்



# டேஸ்ட் கடை தணிகாசலம்

அன்று காலை நேரம். நற்பணி மன்ற உறுப்பினர்கள் அன்றைய தினசரிப்பத்திரிகைகளை அலசி ஆராய்ந்து கொண்டிருந்தனர். எல்லாப்பத்திரிகைகளும் ஜே.வி.பி— ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டு ஒப்பந்தம் தொடர்பாகவே விசேடமாக எழுதி இருந்தன. நண்பர்களும் இதைப்பற்றி காரசாரமாக விமர்சித்துக்கொண்டிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் தணிகாசலம் அண்ணனும் வந்து சேர்ந்தார்.

நண்பர்கள் எல்லோரும் கோஷ்டிகானம் இசைப்பது போல்; ''வணக்கம் அண்ணன்'', என்று வரவேற்றனர்.

''வணக்கம், வணக்கம்; என்ன எல்லோரும் காலையிலேயே சுவாரசியமாக அரசியல் பேசிக்கொண்டிருந்தீர்கள். சிவபூசையில் கரடி வந்தது போல் நான் வந்து குழப்பிப் போட்டேனோ''?

''ஐயோ, அப்படி ஒன்றும் இல்லை. நீங்களும் வந்தது எங்களுக்கு சந்தோஷம் தான். எங்களுடைய சந்தேகங்களை உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?'' என்றான் சிவலிங்கம்.

''அப்படியா! அரசியல் பேசுவது என்றால் எமக்கு கரும்பு சாப்பிடுவது போல்தான். இன்றைக்கு எதைப் பற்றிப் பேசிக்கிட்டு இருந்தீங்க?''

''இந்தப் பேப்பர்கள் எல்லாத்திலயுமே ஜே.வி.பி, சந்திரிகா அம்மையார் கூட்டைப் பற்றித்தான் போட்டிருக்கு. அதைப்பற்றி தாங்க அண்ணே பேசிக் கொண்டிருந்தோம்.'' என்று கூறிய சிவலிங்கம் பேப்பர்களை அண்ணனிடம் கொடுத்தான்.

பேப்பர்களை எல்லாம் மேலோட்டமாகப் பார்த்து விட்டு மேசையில் வைத்தார் தணி அண்ணன், '' இங்க பாருங்க, நீங்க எல்லோருமே சின்னப் பிள்ளைகளாக இருந்த காலத்திலேயே இந்த கூத்து ஆரம்பிச்சிருக்கு'' என்றார்.

''என்னங்க அண்ணே! அப்படிச் சொல்லுறீங்க. இப்பதானே கூட்டு ஒப்பந்தம் செய்யப் போறாங்கள். அதுக்கு முந்தி எப்படி கூட்டு ஆரம்பிக்கும்?'' என்றாள் திலகா.

''யாரு திலகாவா? அப்படி போடு ஒரு போடு. எல்லாரும் அப்படித்தான் நினைக்கிறாங்க. ஆனால், நம்ப ஜனாதிபதியும், அவுங்க அம்மாவும் ஏற்கனவே முட்டுக் கொடுக்கப் போய் மூனுதரம் மூக்குடைபட்டிருக்காங்க. அது பல பேருக்குத் தெரியாது.''

''என்னங்க அண்ணே! கேட்கவே ரொம்ப இன்டரஸ்ட்டா இருக்கு. கொஞ்சம் வெவரமா சொல்லுங்க அண்ணே.''

''முந்தி பண்டாரநாயக்கா இருந்தபோது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்று கை அடையாளத்தோட ஒரு கட்சியை ஆரம்பித்தார். அவரு கூடவே இருந்த ஆமத்துரு ஒருவரே அவரை சுட்டுக் கொன்னுப்புட்டாரு.''

''என்னங்க அண்ணே! புத்த பகவானின் தர்ம போதனைகளை உபதேசம் செய்யும் புத்த பிக்குவா சுட்டுக் கொன்றாரு?'' என்று ஆச்சரியத்துடன் எல்லோரும் கேட்டனர்.

''ஆச்சரியமாக இருக்கா! அதுதான் உண்மை. புத்தபிக்குவே தான் சுட்டாரு. அதன் பொறவு நம்ப ஜனாதிபதியோட அம்மா ஆட்சிக்கு வந்தாங்க. அவுங்களால தனிச்சு எதையுமே செய்யமுடியல. நாட்டில் பஞ்சம் பட்டினி, கொலை, கொள்ளை, வறுமை, வேலை இல்லாப்பிரச்சினை என்று நாடு சின்னா பின்னப்பட்டது.''

''அப்ப இந்த பஞ்சம், பசி, பட்டினி எல்லாம் நம்ப ஆளுகளுக்கு ஒன்றும் புதுசு இல்ல.



ஏற்கனவே பழக்கப்பட்டதுதான்னு சொல்லு நீங்க.''

''ஆமாம் தம்பி. அப்பாதான் இந்த பெரிய அம்மா கையை அடமானம் வச்சிப்புட்டாங்க.''

''என்னங்க அண்ணே காப்பை அடவு வைக்கலாம். மோதிரத்தை அடவு வைக்கலாம். எப்படிங்க அண்ணே கையை அடவு வைக்க முடியும்?''

''அத்தனையும் உண்மைதான் தம்பி. பெரிய அம்மா சமசமாஜக் கட்சிக் காரவுங்க கிட்டயும், கம்யூனிஸ்ட் கட்சிக் காரவுங்க கிட்டயும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கை அடையாளத்தை நாற்காலிக்காக அடவு வைச்சாங்க. பின்பு அதை மீட்டு எடுக்கவே முடியாமப் போச்சி.''

''அட ஆமாம், இப்ப கட்சியோட அடையாளமே இல்லதான். அது சரிங்க அண்ணே! இந்த ஜே.வி.பி. காரவுங்க எப்படி பெரிய அம்மாவோட ஒட்டினாங்க.''

''அது பெரிய கதை தம்பி. அம்மா சொன்னாங்க, நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தா ஒரே இரவில் வேலை இல்லாப் பிரச்சினையைத் தீர்த்துப்புடுவேன். எல்லாருக்கும் தொழில் தருவேன். பஞ்சம், பசி, பட்டினி எல்லாவற்றையும் ஒழித்து விடுவேன் என்று ஆசை வார்த்தை கூறி இளைஞர்பட்டாளத்தை தன் வசம் வைத்துக் கொண்டு வாக்கு வேட்டையாடி ஜெயித்தார்.''

''யாருங்க அண்ணே அந்த இளைஞர்பட்டாளம்?''

''கொஞ்சம்பொறுங்க. இப்பதான் ஜே.வி.பி. அப்போ இவங்க சேகுவேராவின் புரட்சி அமைப்பினர். போகப்போக ஜே.வி.பி. ஆனாங்க.''

''என்னங்க அண்ணே! இவுங்கதானே அண்ணே அம்மாவோட ஆட்சிக்காலத்தில் மனிதவேட்டை ஆடினாங்கள். இவுங்க எப்படி அம்மாவுக்கு ஆதரவா வேலை செஞ்சி இருந்தாங்க.''

''அம்மாவுக்காக செஞ்சாங்க தம்பி. ஆனால், அம்மா கொடுத்த வாக்குகளை நிறைவேற்றாததினால் அம்மாவுக்கு எதிராகவே துப்பாக்கியை திருப்பிட்டாங்க. அந்த பெரிய மனிசியை சாகும்வரை நிம்மதியாக இருக்க விட வில்லை. அதோட நடிகர் விஜேகுமாரதுங்கவையும் அடையாளம் தெரியாம சுட்டுப் பொசுக்கிப்புட்டாங்க.''

''என்னங்க அண்ணே இது? இப்படி பெத்ததாய்க்கும் கட்டின புருஷனுக்கும் எமனாக வந்தவர்களுடனா கூட்டு ஒப்பந்தம் செய்தாங்க?''

''இது இரண்டாவது முறை தம்பி. ஏற்கனவே ' தகுதிகாண் அரசாங்கம்' என்று இதே ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்தாங்க. கடைசியில் என்ன ஆச்சி? அதுவும் கவுந்து போச்சி.''

''ஆமாங்க அண்ணே இப்பதான் நினைவுக்கு வருது. ஜனாதிபதியோட புள்ளைங்ககூட அப்பாவைக் கொன்றவர்களுடன் கூட்டுவேண்டாம் என்று அம்மாவுக்கு சொல்லி இருந்தாங்க.''

''உண்மைதான் தம்பி அதனாலதான் இந்த கூட்டு ஒப்பந்தம் இழுபறியாக இருந்தது. இப்ப என்னடான்னா திரும்பவும் வேதாளம் மரத்தில் ஏறிக் கொண்டது.''

''அப்படின்னா நம்பநாட்டை மீண்டும் சனியன் பிடித்து ஆட்டப்போகுது.''

''உண்மைதான் செவ்வாய்கிழமையில் ஒப்பந்தம் பண்ணி இருக்காங்க. தம்பி சொல்லுறது போல செவ்வாய் தோஷமும் சேர்த்து ஆட்டம்போடுது. அதுக்கு எந்த புண்ணியவான் தேசிக்காய் வெட்டி விமோசனம் பண்ணப் போறானோ? நாம எதுக்கும் கவலைப்பட வேண்டியது இல்ல. ஏற்கனவே மூக்குடைபட்டவர்கள் மீண்டும் படத்தான் போகின்றார்கள். எதற்கும் நாமும் தயாராகவே இருப்போம்'' என்று கூறி விடை பெற்றார் தணிகாசலம் அண்ணன்.




இரா. புத்திரசிகாமணி



## சொல்லாதே இது இரகசியம்!

*அந்த மலையகத் தலைவர் எதிலுமே கண்டிப்பானவர். எல்லா வேலைகளும் அவ்வப்போது அச்சொட்டாக நடக்க வேண்டும் என்பதில் அக்கறை உடையவர். அவரின் நெற்றிக்கண்பார்வையால் இரண்டு ஊழியர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டனராம்.*

*அதாவது பல ஆயிரம் புத்தாண்டுவாழ்த்து அட்டைகளை அச்சிட்டு அவசியமானவர்கள் அனைவருக்கும் அனுப்பும்படி தனக்கு பிரத்தியேகமானவரிடம் அவர் பொறுப்பு ஒப்படைத்திருந்தாராம்.*

*ஆனால், முக்கியமான சிலருக்கு தலைவரின் வாழ்த்துகள் அனுப்பப்படவில்லையாம். அதனால் தனக்கு பிரத்தியேகமானவரையும் அவரது உதவியாளரையும் வீட்டுக்கே அனுப்பிவிட்டாராம்.*

*அந்தத் தலைவரும் இலேசுப்பட்டவர் இல்லையாம். இருவரிடமுமே இராஜினாமாக் கடிதங்களை வாங்கிக் கொண்டுதான் அனுப்பினாராம். அவரும் கை தேர்ந்த தொழிற்சங்கவாதி இல்லையா? அதுதான் இந்த முன் எச்சரிக்கையான நடவடிக்கை. இப்போது அடுத்து பிரத்தியேகமா வரப்போறவர் யார் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றதாம். பாவம் வாழ்த்து அட்டையால் வாடிப் போய் இருக்கின்றனர் இருவர்.*

# புனித நகரில் பசுக்களின் மரண ஓலம்.

# அதிகாரிகள் அசட்டை - மக்கள் அவதி

''புனிதப் பிரதேசத்தின் புனிதம் கெடலாமா?.'' இப்படிப் புலம்புகின்றனர் மஸ்கெலியா பிரதேச மக்கள்.

சகல இன, மத, சமூகங்கள் சங்கமமாகும் ஒரு புனித நகரம் மஸ்கெலியா. இந்து, பௌத்த, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதங்களைப் பின்பற்றும் மக்கள் ஐக்கியத்துடன் ஒன்றுபட்டு வழிபடும் சிவனொளி பாதமலை இங்குதான் அமைந்துள்ளது என்பதை சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

புனித யாத்திரை மேற்கொள்ளும் அனைவரும் மஸ்கெலியா நகரை ஊடறுத்தே செல்கின்றனர்.

''கொல்லுதல் பாவம்'' என்பதை சகல மதங்களும் ஒரே குரலில் போதிக்கின்றன. ஆனால் புனித யாத்திரை மேற்கொள்ளும் அடியார்கள் பசுக்களின் மரண ஓலங்களைக் கேட்டுக்கொண்டே செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

பசுக்களின் மரண ஓலங்கள் மட்டுமல்ல இப் பிரதேசத்தில் பயங்கரமான கொடிய தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. பொது மக்கள் பயன்படுத்தும் குடிதண்ணீரில் கழிவுகள் கலக்கப்படுகின்றன. இவற்றை எல்லாம் தட்டிக்கேட்க ஆள் இல்லையா என அங்கலாய்க்கின்றனர் மஸ்கெலியா பிரதேச மக்கள்.

இதற்கான அடிப்படைக்காரணியாக அமைந்து அச்சுறுத்தலாக இருப்பது மஸ்கெலியாவில் அமைந்துள்ள இறைச்சிக்காக மாடு வெட்டும் இடம்.

அட்டன், டிக்கோயா, நோர்வூட், பொகவந்தலாவா, மஸ்கெலியா ஆகிய நகரங்களில் உள்ள இறைச்சிக் கடைகளுக்காக மாடுகள் மஸ்கெலியாவிலேயே கொல்லப்படுகின்றன. பாவனைக்கு ஏற்ப தினசரி 12 க்கும் குறையாத மாடுகள் இங்கே கொல்லப்படுகின்றன என்று பொது மக்கள் கூறுகின்றனர்.

அட்டன், பொகவந்தலாவ, நோர்வூட் ஆகிய பிரதேசங்களிலேயே முன்பு இறைச்சிக்காக மாடுகள் கொல்லப்பட்டன. ஆனால் அப் பிரதேச மக்களின் கடும் எதிர்ப்பினால் அங்கு மாடுகள் வெட்டுவது தடை செய்யப்பட்டது. ஆனால் அம்பேகமுவ பிரதேச சபை தனது வருமானத்துக்காக மஸ்கேலியாவில் மாடுகளை வெட்டுவதற்கான அனுமதியை வழங்கி உள்ளது. வழமையாக ஐந்து ஆறு இலட்சம் ரூபாவுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. இம்முறை 10லட்சம் ரூபாவுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாம்.

பிரதேசசபையின் வருமானம் பத்து லட்சம் ரூபாவால் அதிகரித்திருப்பது என்னவோ உண்மை தான். ஆனால் இதன் மூலம் ஏற்படும் விபரீதங்களையும், கொடிய உயிர்க்கொல்லி தொற்றுநோய்களையும் தடுப்பதற்கு பலகோடி ரூபாய்களை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை அம்பேகமுவ பிரதேச சபை உணரவில்லையா என்று நலன் விரும்பிகள் குரல் எழுப்புகின்றனர்.

மஸ்கெலியா கடை வீதியில் இருந்து சுமார் 500 யார் தூரத்திலேயே இந்த மாடு வெட்டும் இடம் அமைந்துள்ளது. இவ்விடத்தில் இருந்து சுமார் 40 யார் தூரத்தில் தேசிய நீர் வழங்கல் சபையின் நீர் சுத்திகரிப்பு நிலையம் இருக்கின்றது. மாடு வெட்டும் இடத்துக்கு மிக அருகில்பொது மக்களின் குடிஇருப்புகளும் அமைந்துள்ளன. குறிப்பாக சிங்கள மகா வித்தியாலயத்துக்கு மிகவும் அருகிலேயே இந்த மாடுகள் கொல்லப்படுகின்றன.

பாடசாலை மாணவர்கள் பாடசாலை ஆரம்பிக்கு முன் காலையில் கடவுள் வழிபாடு நடத்தும்போது இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் அவயவங்களையும் கொல்லப்படும் மாடுகள் அனுபவிக்கும் சித்திரவதை களையும் காணக்கூடியதாகவே இருக்கின்றது. இதனால் மாணவர்களும் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதோடு நின்று விடவில்லை. இறைச்சிக்காக கொல்லப்படும் மாடுகளின் தோல், குடல் மற்றும் கழிவுப் பொருட்கள் கண்டபடி குவித்து வைக்கப்படுகின்றன. காகம், நாய், நரிகள் என்பன இக்கழிவுப் பொருட்களை இழுத்துச் செல்வதால் இப்பிரதேசம் முழுவதும் நாற்றம் வீசுகின்றது. இதனால் பொது மக்களின் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இக்கழிவுகள் நீர் சுத்திகரிப்பு நிலையத்தையும் சென்றடைவதால் பல லட்சம் மக்கள் பயன்படுத்தும் குடிநீரும் மாசடைந்து கொடிய நோய்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த மாடு வெட்டும் மடுவத்தால் இப் பிரதேசத்தின் சுற்றாடல் சூழல் பெரிதும் மாசடைந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பொது மக்கள் பிரதேச சபைக்குப் பல முறைப்பாடுகளை செய்தும் எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை என்று பொது மக்கள் கூறுகின்றனர்.

இப்பிரச்சினை தொடர்பாக அம்பேகமுவ பிரதேசசபைத்தலைவருடன் தொடர்புகொள்ள முயன்றபோது அவர் அலுவலகத்தில் இருக்கவில்லை. அலுவலகத்தினதும் சரியான விவரங்களைப்பெற முடியவில்லை.

சபையின் எதிர்க்கட்சித் தலைவருடன் தொடர்பு கொண்ட போது '' இவ்விடயம் சம்பந்தமாக பலமுறை பிரதேச சபையில் முறைப்பாடு செய்துள்ளேன். மாதாந்தக் கூட்டத்திலும் இதனை வலியுறுத்தி உள்ளேன். ஆனால் உருப்படியாக எவரும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை'' என்று அங்கலாய்க்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் செல்லையா சிவசுந்தரம்.

இப்படி சொல்லிவிட்டால் மட்டும்போதுமா? புனித நகரான மஸ்கெலியாவின் புனிதம் பாதுகாக்கப்பட வேண்டும். பேரழிவுகளில் இருந்து மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். பொறுப்பான தலைவர்கள் இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா? இது பொது மக்களின் ஏக்கம். அது நிறைவேறுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக்கலைக் கண்காட்சி



வரதன்



நளினீஸ் அழகுக் கலை நிறுவனத்தின் மணப் பெண் அலங்கார நிகழ்வும் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கு பரிசளிப்பு வழங்கலும் கடந்த 16 ஆம் திகதி ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் நடைபெற்றன. இந்து, கிறிஸ்தவ மணப்பெண்கள் ஆடை அலங்கார கண்காட்சியும் மேலைத்தேய பெண்களின் உடையலங்கார கண்காட்சியும் இடம்பெற்றன. இந்திய உயர் ஸ்தானிகர் நிரூபம் சென் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அழகுக் கலை நிபுணர்களும் அதிமுக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். அழகுக் கலையில் நிபுணத்துவம் பெற்ற நளினி சிவகுமாரன் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்.










இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள வாணப்மாக் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 பெப்ரவரி.07 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org